# இடைக்காடு
# அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்



## மகா கும்பாபிஷேக மலர்
22.04.2005




ஆலய பரிபாலன சபை

350.6
இடைக்
LIPR

உ

அம்பாள் துணை



# இடைக்காடு

# அருள்மிகு

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய

# மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்

உ
அம்பாள் துணை



# இடைக்காடு
# அருள்மிகு
# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய
# மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்

உ
அம்பாள் துணை



# லக்ஷ்மி அச்சகம்

**195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13.**

**தொலைபேசி : 2448545, 2473533, 2458273**

**தொலைநகல் : 2330588**

உ
சிவமயம்



திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## முக்கிய குறிப்பு:

இம்மலரில் ஈழத்தின் சரித்திரப் பிரசித்திபெற்ற, அற்புதங்கள் நிறைந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர், புளியம்பொக்கணை நாகதம்பிரான், புதூர் நாகதம்பிரான் போன்ற ஆலயங்களின் தல வரலாறுகள் இம் மலரில் 64ஆம், 69ஆம் பக்கங்களில் அடங்கியுள்ளன.

உ
அம்பாள் துணை

# இடைக்காடு
# அருள்மிகு
# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய



# மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர்
# 22.04.2005

ஆலய பரிபாலன சபை வெளியீடு

# கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இடைக்காடு திருவருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் திருக்கோயில் சம்ப்ரோக்ஷண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேகப் பெருவிழா, எதிர்வரும் பார்த்திப வருடம் சித்திரை மாதம் 9ம் திகதி (22.04.2005) வெள்ளிக்கிழமையன்று நடைபெற்று, அந்நிகழ்வையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படும் என அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

உலகில் இன்று விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் கண்டு வரும் வளர்ச்சிக்கு இணையாக ஒழுக்கமும், ஆன்மீகமும் வளர்த்தெடுக்கப்படவில்லை என்பதற்கு, சமுதாயத்தில் இன்று பெருகி வரும் அமைதியின்மையும், வேறுபல இன்னல்களுமே போதிய சாட்சியங்களாகும். விஞ்ஞானத்தின் பயன்களாகிய வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கும் மனித குலம், ஆன்மிகத்தின் பயன்களாகிய அன்பு, அமைதி, தியாகம், சகோதரத்துவம் போன்ற உயர் விழுமியங்களை இழந்து பல பிரச்சனைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. பௌதிக வளங்களையும், வாழ்க்கை வசதிகளையும் வளர்த்துக் கொள்வதில் தவறில்லை. ஆனால் வாழ்க்கையில் அன்பும், அமைதியும் இல்லையெனில், பணத்தாலோ அல்லது வசதிகளாலோதான் என்ன பயன்? மக்களிடையே ஆன்மிக நாட்டத்தை வளர்ப்பதற்கே கோயில்களும், திருவிழாக்களும், சமய அனுட்டானங்களும் நமது முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைச் சரியான முறையில் கடைப்பிடிக்கவேண்டியது மக்களின் இன்றைய முதற்கடமையாகும். அதிலிருந்து தவறின் எதிர்கால சூழல் இன்றிருப்பதை விட இன்னும் மோசமாக அமையும் எனக் கூறத் தேவையில்லை. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற பழமொழியின் உள்ளார்ந்த கருத்தை உணர்ந்து, சிரத்தை, தூய்மை, பக்தியை வளர்த்து, வாழ்க்கையின் பெரும்பயனை அடைவோமாக!

**சுவாமி ஆத்மகனானந்தா.**

11.04.2005.

# கும்பாபிஷேக பிரதம குரு 'ஆகம கிரியா ஜோதி' துவஜாரோகண துரந்தர் சிவஸ்ரீ சதா – மஹாலிங்க சிவக்குருக்கள் (நாயன்மார்கட்டு) அவர்களின் ஆசியுரை

இடைக்காட்டுப்பதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு இன்று 22.04.2005 மஹாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நடைபெறுகின்றது. இப் பெருஞ்சாந்தி விழாவைக் கண்ணுற்ற அடியார்கள் யாவரும் பிறவித் துன்பம் நீங்கிப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ புவனேஸ்வரித்தாயை மனத்தூய்மையோடு வழிபட்டுத் தாயாரின் திருவருளால் இந்த நாட்டில் வாழுகின்ற சகல ஜீவராசிகளும் இன்புற்று வாழ எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

மேலும் எமது நாடும் நாட்டு மக்களும் நாமும் இந்த நாட்டில் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ வேண்டுமென்று அகில புவன மாதாவாகிய அன்னையை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

முன்னைய கும்பாபிஷேகத்தில் நாம் சாதகாசிரியர் (மந்திரங்களை உச்சாடனம் செய்பவர்) என்ற கடமையில் ஈடுபட்டிருந்தேன். அன்னையின் திருவருளால் இன்று இக் கும்பாபிஷேகத்தைப் பிரதம குருவாக இருந்து நடாத்துகின்ற பாக்கியத்தைப் பெற்றுள்ளேன். என்னே அன்னையின் திருவருள். இதை நினைத்து நினைத்து என்மனம் புளகாங்கிதம் அடைகின்றது.

இந்தக் கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழாவை முன்னின்று நடாத்துகின்ற ஆலயக் குருக்கள், ஏனைய குருமார்கள், ஆலய பரிபாலன சபையினர், இவ்வூர் மக்கள், அயலூர் மக்கள், திருப்பணிக்குப் பொருளுதவி, பணஉதவி, சரீரஉதவி செய்தோர்கள், மஹாகும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் இவைகளை உபயமாக ஏற்றுச் செய்த உபயகாரர்கள் எந்த விதமான பிரதியுபகாரமும் பாராமல் தொண்டுகள் புரிந்த தொண்டர்கள் முதலான அனைவருக்கும் இடைக்காடு புவனேஸ்வரியின் திருவருள் பரிபூரணமாகக் கிடைக்கட்டும்.

கும்பாபிஷேகம் நிறைவு பெற்று ஆலயத்தில் நித்ய, நைமித்திய, காமிய, நிஷ்காமிய வழிபாடுகள் செவ்வனே நடைபெறட்டும். இக் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இந்த ஆலயத்தில் நடைபெறும் வருடாந்த உற்சவம் மஹோற்சவமாக (கொடியேற்ற விழாவாக) நடைபெற எல்லாம் வல்ல அன்னை அருள் புரியட்டும் என்று பிரார்த்தித்து நல்லாசி வழங்குகின்றேன்.


**எல்லோரும் இன்புற்று வாழ நினைப்பதல்லால்**
**வேறொன்றும் அறியேன் பராபரமே.**

# இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் ஆலய பரிபாலனசபை கும்பாபிஷேக மலர்

## ஆசியுரை

மனிதப்பிறவியை மாண்புடையதாக்குவது வழிபாடாகும். இந்தக்காலத்தில் எமது நாட்டு ஆலயங்கள் தோறும் குடமுழுக்கு விழா நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும். 'அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்.' என்பது முற்றிலும் உண்மை. இடைக்காடு புவனேஸ்வரி அம்பாளுக்கு எதிர் வரும் 22-04-2005ம் நாள் குடமுழுக்கு விழா நடைபெற இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவ்விழாவுக்கு ஆசியுரை வழங்குவதில் நான் பூரிப்படைகின்றேன். அகிலாண்டகோடியீன்ற அன்னையாக விளங்கும் புவனேஸ்வரி அம்பாளுக்கு நடைபெற இருக்கும் குடமுழுக்கு விழா சீராகவும், சிறப்பாகவும், பக்திமயமாகவும் அமைய வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி.
தலைவர்.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
23.03.05.



# 'ஆகமக் கிரியா விபுதர்'

# சிவஸ்ரீ சிவ. ஆறுமுகக் குருக்கள் அவர்களின்

## (கட்டுவன் - தெல்லிப்பளை) அருள் ஆசிச் செய்தி

நித்ய நைமித்திய வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும் ஓர் ஆலயத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பது ஆகம விதி. காலத்துக்குக் காலம் ஆலயத்திலே ஏற்படுகின்ற பழுதுகளைத் திருத்தியமைத்துப் புதுப்பித்தல், மூர்த்திகளின் யந்திரங்களைப் பழுது பார்த்தல் போன்ற பணிகளைச் செய்து மேலும் தேவையான திருப்பணிகளை நிறைவு செய்து நல்ல சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் செய்ய வேண்டிய நியதி ஒவ்வொரு ஆலயத்திற்கும் மிக முக்கியமான ஓர் பணியாகும். இப் பணியை இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கும் செய்ய வேண்டிய காலம் நேரம் கைகூடியது. சென்ற வருடம் சித்திரை மாதத்தில் பாலஸ்தாபனம் செய்து இன்று பார்த்திப வருடம் சித்திரை மாதம் 9ம் நாள் (22.04.2005) அத்த நட்சத்திரத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது தந்தையார் சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக் குருக்கள் சென்ற கும்பாபிஷேகத்தைப் பிரதமகுருவாக இருந்து நடாத்தி வைத்தார்கள். இன்று இக் கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழாவை எமது உடன் பிறவா சகோதரனான சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடாத்தி வைக்கிறார், என்பதை அறிந்து நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இன்று நாம் உங்கு சமூகம் தரமுடியாவிட்டாலும் கனடாவில் இருந்து அன்னை ஸ்ரீ புவனேஸ்வரித்தாயை மனக் கண்ணினால் வழிபட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் கும்பாபிஷேகம் நிறைவுற்றுத் தாயாரின் திருவருள்ச் சக்தியானது பரிபூரணமாக ஆலயத்தில் நிறைந்து இடைக்காட்டுப் பதிவாள் மக்கள் அனைவருக்கும் உலக மாதாவாகிய அன்னையின் திருவருள் கிட்டுவதாக. அத்தோடு, எங்கெல்லாம் எமது சைவசமயம் பரந்து விளங்குகின்றதோ, அங்கெல்லாம் வாழுகின்ற சகல இன மக்களும் சகல செல்வங்களும் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ அன்னையின் அருள் வேண்டி நிற்கின்றேன்.

**கனடா**

11.04.2005.


# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அம்பிகை அடியார்களுக்கு!

அச்சுவேலி இடைக்காட்டுப் பதியில் எழுந்தருளி இருந்து அருள் ஆட்சி புரியும் புவனேஸ்வரி அம்பாளுக்கு 22.04.05 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பழமையான கோவிலில் நடைபெறும் இக் கும்பாபிஷேகம் ஊருக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். இக்கும்பா பிஷேகத்தினூடாக நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவப் பிரார்த்திக்கின்றோம். கும்பாபிஷேகத்தை நடாத்தும் சிவாச்சாரியார்களையும், பரிபாலனசபையினரையும் வாழ்த்துகின்றோம். எல்லாம் சிறப்பாக நடைபெறுவதாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



அம்பாள் துணை

# இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை

# தலைவர் அறிக்கை

எமது அன்னை புவனேஸ்வரி அம்பாள் கடாட்சத்தால் மேற்படி ஆலயத்தை மரபு வழித் தர்மகர்த்தாவாகிய திருவாளர் சுப்பிரமணியம் ஞானசபேசன் அவர்கள் தமக்குரிய ஆலயத்தின் சகல நிர்வாகப் பொறுப்புரிமைகளையும் 02-09-1982 இல் இந்த ஆலய பரிபாலன சபையிடம் சாசன மூலம் கையளித்தார். மேற்படி சபையும் பொறுப்புணர்வோடும், நல்நோக்கோடும் கையேற்றது.

நம் நாட்டில் நடந்த உள்நாட்டுப் போர் காரணமாக எமது ஆலயமும் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதனால் இவ் ஆலய மூர்த்திகளுக்கும் ஊனங்கள் ஏற்பட்டன. கோவிற் கட்டடங்கள் சேதமடைந்தன. எழுந்தருளிப் புவனேஸ்வரி அம்பாள் ஐம்பொன் சொரூபம் காணாமற் போயிற்று. இவற்றைப் புதிதாக அமைக்கவும், சேதமடைந்த கோவிற் கட்டடங்களைப் புனரமைக்கவும் மேலும் பரிவார மூர்த்திகள் அவற்றிற்குரிய ஆலயங்களைப் புதிதாக அமைக்கவும் அம்பாளின் திருவருள் கூடியமையால் 08-09-1987 இல் பாலஸ்தாபனம் செய்து சகல திருப்பணிகளையும் ஆரம்பித்தோம். உள்ளூர், வெளியூர் அம்பாள் அடியார்களின் பெருநிதி கொண்டு திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு 08-06-1989 இல் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 45 நாட்கள் (முழு மண்டலம்) மண்டலாபிஷேகமும் இறுதி நாளில் சங்காபிஷேகமும் வெகு சிறப்புடன் நடைபெற்றது. அன்று கும்பாபிஷேகமலரும் வெளியிடப்பட்டது. அம்மலரில் தலைவரின் அறிக்கையில் நிறைவேற்றப்பட்ட திருப்பணி வேலைகளின் பூரண விபரங்கள் தரப்பட்டுள்ளன.

உள்ளூர்ப் போர் அனர்த்தத்தால் ஊர்மக்கள் மீண்டும் இடம் பெயர்ந்து திரும்பி வந்த போது எமது கிராமத்தின் அனேக பகுதிகளில் மிதி வெடிகளும், பாரிய குண்டுகளும் இராணுவத்தினால் விதைக்கப்பட்டிருந்தன. இதனால் மக்கள் நம் கிராமத்தில் நடமாட முடியாத நிலையேற்பட்டது. மிதிவெடிகளால் ஆடுமாடுகள் இறந்தன. எமது ஊரவர்களில் ஐவர் கால் ஊனமுற்றனர். மிதிவெடிகளும், குண்டுகளும் மாணிக்கப் பிள்ளையார் ஆலய சூழலிலும் அதிகளவில் விதைக்கப்பட்டிருந்தன. வளலாய்க் கிராமத்திலுள்ள சகல வீடுகளும் கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. அவ்வூர்ப் பிள்ளையார் ஆலயம் அதிக சேதமின்றித் தப்பிக் கொண்டது.

எமது ஆலயத்தைச் சுற்றியும் மிதி வெடிகளும் குண்டுகளும் விதைக்கப்பட்டிருந்தமையால் மக்கள் ஆலய தரிசனத்திற்குப் போக முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இராணுவ அதிகாரிகளை அணுகி அவர்களின் உதவியால் 12

கண்ணி வெடிகளும் ஒரு பாரிய குண்டும் அகற்றப்பட்டு கோவில் வெளி வீதியில் நடமாட இராணுவத்தால் தடையும் விதிக்கப்பட்டது. இதன் காரணமாக நித்திய, நைமித்திய பூசைகளும் விழாக்களும் உள்வீதியில் மட்டுமே நடைபெற்று வந்தன. ஆலயத்திற்குக் குண்டுகளால் ஏற்பட்ட சேதங்களைப் புனருத்தாரணம் செய்யும் பொருட்டும் கோவிலை விஸ்தரிக்கும் பொருட்டும் 02-05-2004 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு அதன்பின் சேதமடைந்த சகல கட்டடங்களும் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. மூலஸ்தானத்திலிருந்து வெளி மண்டபம் வரையும் சகல பரிவார மூர்த்தங்களின் கோவில்களும் வர்ணம் பூசப்பட்டுள்ளன. வெளி மண்டபத்தில் வடக்குத் தெற்குப் பக்கங்களில் புதிதாக சுவர்கள் எழுப்பப்பட்டு வர்ணங்கள் பூசி அதில் திருமுறைகளும், அம்பாள் துதியும் எழுதப்பட்டுள்ளன. இம் மண்டபத்தின் மேற்பகுதியில் அம்பாள், பிள்ளையார், முருகன் சிலைகள் அமைக்கப்பட்டு ஒவியங்களும் வரையப்பட்டன. நிருத்த மண்டப முகப்பில் பிள்ளையார், அம்பாள், முருகன் ஒவியங்கள் அழகுற வரையப்பட்டுள்ளன. நிருத்த மண்டப மேற்குச் சுவரில் சரஸ்வதி அம்பாள், இலக்குமி அம்பாள், உருவங்கள் தீட்டப்பட்டுள்ளன.இம் மண்டபத்தின் தளத்திற்கு அழகிய நில ஓடுகள் (மாபில்) பதிக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு உள்வீதிகளில் சுற்று மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. காரியாலயம்,அன்னதான மண்டபம், மலசல கூடம், தண்ணீர்த்தாங்கி, நீர் இறைக்கும் மின் யந்திரம் போன்றவை புதிதாக நிறுவப்பட்டுள்ளன. சகல கலசங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தல விருட்சங்களாகிய அரசு வேம்புகளைச் சுற்றி மேடையமைத்து அதில் நாகதம்பிரான், சந்தான கோபாலர், போன்றவை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. நான்கு பக்க வெளி மதில்களும் வர்ணம் தீட்டப்பட்டுள்ளன. அம்பாள் வெளிவீதி வலம் வரக்கூடிய முறையில் (வெளி வீதிகளில் கற்களாற் பாதை) அமைக்கப்பட்டுள்ளது.

ஆலய வெளி வீதி, கோவிலுக்குரிய ஆதனத்திலும், இரு பக்தர்களிடம் நன் கொடையாகப் பெற்ற நிலத்திலும் காணிக்குக் காணி கொடுக்கப்பட்ட நிலத்திலும் அமைக்கப்பட்டன. பிரதான வீதியிலிருந்து ஆலயம் வரையிலுமுள்ள பாதையின் இருமருங்கிலும் பற்றைகள் வெட்டி சுத்தம் செய்யப்பட்டு வீதி அகலப்படுத்தப்பட்டுள்ளது. மின்சார இணைப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. வசந்த மண்டபத்தில் புதிதாக புவனேஸ்வரி அம்பாள், பாலவிநாயகர், பால முருகன் ஓவியங்கள் மிக அழகுறத் தீட்டப்பட்டுத் திரைச்சேலை அமைக்கப்பட்டுள்ளது. அம்பாள் ஆலயம் தற்சமயம் 21 பரப்பில் அமைந்துள்ளது. என்பது இங்கு விஷேடமாகக் குறிப்பிடத்தக்கது. சகல விதமான கட்டட அமைப்புக்களும் கோப்பிச வேலைகளும் வர்ணம் ஒவியம் வரைதல் போன்றவை முழுக்கமுழுக்க உள்ளூர்த் தொழிலாளர்களாலும் ஓவியர்கள், சிற்பிகள் முதலான கலைஞர்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

நிகழும் பார்த்திப வருஷம் சித்திரை மாதம் 9ஆம் திகதி (22-04-2005) வெள்ளிக்கிழமை காலை 8.25 மணி முதல் 9.00 மணி வரையுள்ள சுப வேளையில் நவகுண்டபக்ஷ

அஷ்டபந்தன புனருத்தாபன மஹா கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழா, துவாஜாரோகண துரந்தரர் கிரியாஜோதி சிவ ஸ்ரீ சதா மகாலிங்க சிவக் குருக்கள் தலைமையில் ஐம்பது சிவாச்சாரியார்கள் கொண்ட குழுவினால் ஆரம்பிக்கப்பட்டு அம்பாளின் அருளால் இனிது நிறைவேறியது. இதனைத் தொடர்ந்து தினமும் மஹோற்சவத்தின் போது அம்பாள் இடபம், காராம்பசு, சோடிக் குதிரை, சப்பரம், கேடகம் போன்ற வற்றில் ஆரோகணித்து வீதி வலம் வரும் நிகழ்ச்சி கண் கொள்ளாக் காட்சியாகும். அதனைத் தொடர்ந்து 15ஆம் நாள் சங்காபிஷேகமும், கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது. அதன் பின் மண்டலாபிஷேக நிகழ்ச்சியுடன் நிறைவு பெறவுள்ளது. அம்பாளின் விழாவில் பாடசாலை மாணவர்கள் இளைஞர்கள் யுவதிகள் ஊர்மக்கள் சகலரும் பங்கு பற்றி அம்பாளின் அருளைப்பெற்று வருகின்றனர்.

பலஇலட்சம் ரூபா செலவான ஆலயத் திருப்பணி வேலைகளையும் கும்பாபிஷேக விழாவையும் இச் சபை நிறைவாக்க உதவிய காரணிகளில் முதலாவதாக அம்பிகையின் திருவருள் நிதியெனலாம். அடுத்து நம் ஊர்மக்களும் அயலூார் மக்களும் வேண்டும் பொழுதெல்லாம் முன் வந்து நல்கிய நன்கொடைகளையும், இதன் மேலும் விஷேஷமாக வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் எமது ஊர்மக்கள் வாரி வழங்கியபெருநிதியும் பல்வேறு பொருள் உதவியும் சிரமதானம் முதலான சரீர உதவியும் ஊர்திகளின் உதவியும் தாராளமாகக் கிடைத்தமைக்கு நம் பரிபாலன சபை சார்பில் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி நன்றி அறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் மண்டலாபிஷேகம் மஹோற்சவம் ஆகியவற்றை வேதாகம நெறியிலே சிறப்பாக நடத்தி இவ் ஆலயத்திலே தெய்வ சாந்நித்தியத்தை நிறுவிய கும்பாபிஷேகப் பிரதம சிவாச்சாரியர், ஆலயபிரதம சிவாச்சாரியார் மற்றும் ஆச்சாரியார்கள், சாதகாசிரியர்கள், உதவியாளர்கள் மற்றும் ஏனையோருக்கும் நன்றி கூறி வணங்குகின்றேன். இறுதியாக இக் கும்பாபிஷேக மலரை எமக்கு குறுகிய காலத்தில் சிறப்பாகவும் அழகாகவும் அச்சிட்டுத் தந்த லக்ஷ்மி அச்சக அதிபர் அவர்தம் பாரியார், முகாமையாளர், கணனி பக்க வடிவமைப்பாளர்கள் அச்சக ஊழியர்கள் யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சிவசக்தி ஐக்கிய ரூபிணியே நமஹ

**வே. சுவாமிநாதன்,**
தலைவர்,
பரிபாலன சபை.

# கண்ணகி அம்மன் பொங்கல் மரபு

கண்ணகி கற்புத் தெய்வம். அவள் சேர, சோழ, பாண்டிய நாடுகளோடு, கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னன் ஆண்ட சிங்கள நாட்டையும் இணைத்துக் கொண்ட தெய்வம். கண்ணகி வரலாற்றைக் கூறும் நூல் சிலப்பதிகாரம் எனப்படும். "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்று மகாகவி பாரதியார் அந்நூலின் சிறப்பினைப் பாராட்டுகின்றார். கற்புக் கடன் பூண்ட இத் தெய்வமல்லது பொற்புடைத்தெய்வம் யாங்கண்டிலமால்" என்று சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ அடிகள் கண்ணகியைத் தெய்வமாகக் காண்கின்றார். இயல், இசை, நாடகம் என முத்தமிழும் விரவிய ஒரேயொரு தமிழ் நூல் சிலப்பதிகாரமாகும். கண்ணகியின் கற்புத்திறனைக் கண்டு கோயில் எடுத்தவன் இளங்கோவின் உடன் பிறந்தவனாகிய அரசன் சேரன் செங்குட்டுவன் ஆவான். அவனே மூவேந்தர் நாட்டிலும் சிங்கள நாட்டிலும் கண்ணகி வழிபாட்டுக்கு வித்திட்டவன். கண்ணகி வழிபாடு புத்த விகாரைகளிலும் பேணப்படுகின்றது.! பத்தினித் தெய்யோ! என்று புத்த சமயத்தவரான சிங்களவராலும் அவள் வணங்கப்படுகின்றாள். இலங்காதீவின் வடபாலுள்ள அங்கணாக்கடவை, மயிலிட்டி,இடைக்காடு, பச்சிலைப்பள்ளி, திரியாய், புங்குடுதீவு, வற்றாப்பளை முதலிய கடற்கரை ஓரமாகவுள்ள தலங்களில் கண்ணகி தெய்வத்துக்குச் சிறப்பான விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

மானிடம் தெய்வமான வரலாறே கண்ணகி வரலாறு. முடி மன்னர் ஆட்சிக்கும், குடிமக்கள் வாழ்விற்கும் இடையிலுள்ள போராட்டத்தின் முதற்கட்டம் உலக வரலாற்றில் கண்ணகியாற்றான் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, உலகிலுள்ள அத்தனை குடிமக்கள் சார்பிலும் குரல் கொடுத்த கண்ணகி யாவராலும் வணங்கப்படவேண்டிய தெய்வம்.

இனி, இடைக்காட்டுக் கண்ணகித் தெய்வத்துக்குப் பொங்கல் விழா நடப்பதைப் பற்றிச் சிறிது கூறுவோம்.வற்றாப்பளை அம்மன் கோயிலுக்கு வைகாசி மாதத்தில் ஒரு திங்கட்கிழமையில் பொங்கல் விழா நடைபெறும். அந்தத் திங்கட்கிழமைக்கு முந்திய திங்கட்கிழமை இடைக்காட்டுக் கண்ணகிக்குப் பொங்கல் நடக்கும். பொங்கல் விழா அறிவித்தல் பறையறைந்து தெரிவிக்கப்படும். இவ்வறிவித்தல் அயலூர்களாகிய தொண்டைமானாறு, வளலாய், தம்பாலை,வரணன், கதிரிப்பாய் ஆகிய ஊர்களுக்கும் பறையறைந்தே அறிவிக்கப்படும். பொங்கலுக்கு வளந்துப் பானைகள் மூன்று வாங்கப்படும்.

ஒவ்வொரு பானையும் ஆறு கொத்தரிசிக்குக் குறையாமல் வேகக்கூடிய பானையாயிருக்கும். வளந்துப் பொங்கலை வாழையடி வாழையாக மூன்று குடும்பத்தினர் செய்து வருகின்றனர்.இந்த மூன்று பானைகளில் நடுவளந்து அல்லது நாயக வளந்து ஏனைய இருபானைகளிலும் பெரிதாயிருக்கும். வளந்துப் பானை மட்பாண்டம் என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். வளந்துக்காரர் மூவரும் ஆசாரசீலராய் ஒரு வாகனத்தில் வளந்து வாங்க நல்லதொரு நாளிலே கூடிப்போவார்கள்.

இப்பானை நினைத்தவுடன் வாங்கக்கூடிய பண்டமென்று நினைக்க வேண்டாம். மட்பாண்டம் வனைவோர் உடலும் உளமும் தூயராய் இருக்கும் நிலையிலேதான், இப்பானையைச் செய்வார்கள். சிறிய குறைபாடு இருந்தாலும் அது தன்னைத் தாக்குமென்று அத்தொழிலாளி கருதுவான். ஆதலால் ஒரு மாதத்திற்கு முன்னரே அவனுக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும். பிறந்து ஏழுநாள் கூட முடியாத எங்கள் பிஞ்சுக் குழந்தையை எப்படிப் பேணமாய்த் தூக்கி வைத்திருக்கிறோமோ, அதிலும் பன்மடங்கு பேணமாய் வளந்துக்காரர், தங்கள் மணியாம் கற்புக்கரசி கண்ணகித் தெய்வத்தின் பானைகளை ஏந்தி வைத்திருப்பார். பூசாரிமாரின் இல்லங்களாகிய தர்மகலட்டி வளவிலோ அல்லது கச்சலாங்கலட்டிப் பூசாரியார் வளவிலோ புனிதமான ஓரிடத்தில் அவை வைக்கப்படும். பொங்கல் நாள் பகல் வேளையில் கண்ணகிக்குக் குடமுழுக்கும், திருவிழாவும் நடைபெறும். இரவு வேளையில் நடக்கும் பொங்கலில் மடைப் பண்டமெடுத்தல் என்னும் நிகழ்ச்சி முக்கியமானது.பூசாரியார் வளவில் கதிர்ப்பாய்கள் விரிக்கப்பட்டிருக்கும். (குரக்கன் கதிர்களைக் காயவைக்கும் பாய் கதிர்ப்பாய் எனப்படும்) கதிர்ப்பாய்க்கு மேல் புற்பாய் விரிக்கப்பட்டிருக்கும். இந்த இடத்துக்கு மூன்று வளந்துப் பானைகளும் புதுக் கடகங்களிலே வைக்கப்பட்டுத் தூய வெண்ணிற ஆடையால் சுற்றப்பட்டுக் கொண்டு வரப்படும். அதன்பின் முக்கனிகளும் அரிசி முதலிய பண்டப் பொருட்களும் கொண்டு வரப்படும். பூசாரியார் தூப தீபங் காட்டியும் மந்திரத்தை உச்சரித்தும், அப்பானைகளைப் புனிதமாக்குவார்.அதன்பின் விபூதி பிரசாதம் வழங்கப்படும். தமிழ் மறை ஓதித் தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொழுத்திய பின் அரகர ஒலியோடு மடைப்பண்டம் எடுக்கப்படும். வளந்துக்காரர் தத்தம் பானைகளைத் தூக்க வேண்டும். அதன்பின் மடைப்பண்டப் பொருட்களாகிய அரிசி முக்கனி முதலியன தலைச்சுமையாக எடுக்கப்படும். மடைப்பண்டமெடுப்போர் அப்பொருட்களை இடையிலே இறக்கி வைக்கவோஅல்லது வேறோருவரிடம் கைமாறலாகக் கொடுக்கவோ, வாகனத்தில் ஏற்றவோ கூடாது. பறை, தவில், நாதஸ்வரம் முதலிய இசைக்கருவிகள் ஒலிக்க, தீப்பந்தங்களோடு மடைப்பண்டம் செல்லும், மூன்று வளந்துகளுக்கும் மேலாப்பு

வெள்ளாடை மேலாகப் பிடிக்கப்படும். மடைப்பண்டம் கொண்டு செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ஆலயத்தை அணுகியதும் மடைப்பண்டம் கொண்டு சென்றோரின் கால்கள் நீரூற்றிச் சுத்தமாக்கிய பின் அவர்கள் புற வீதி, உள்வீதி எல்லாம் வலம் வருவார்கள். முதலில் நடுவளந்தே இறக்கப்படும்.ஏனைய பானைகளும் மடைப்பண்டப் பொருட்களும் பின் இறக்கப்படும். பூசாரிமார் வீட்டில் நடந்த வளந்துக் கிரியைகள் போன்றவை ஆலயத்திலும் நடக்கும். உள்வீதியில் சுவாமி சந்நிதானத்தில் மும்மூன்று கற்கள் கொண்ட அடுப்பிலே பானைகள் ஏற்றப்படும். அடுப்பு மூட்டிய பின் பூசாரியார் ஒவ்வொரு பானைக்கும் சிறிதளவு பசுப்பாலும் அரிசியும் போடுவார். பொங்கல் முடிந்ததும் கண்ணகியின் திருவுருவின் முன் மடைப்பண்டம் வைத்தலும் பொங்கற் படையலும் நடைபெறும்.

வளந்துப் பொங்கலில் ஒரு பகுதி மருந்தெனக் கூறி வளந்துக்காரர் கோயிலில் வழிபடுவோருக்கு வழங்குவார்கள். வளந்து பொங்கி இறக்கிய பின் தான் ஏனைய மக்கள் பொங்கலாம்.

கோயிலில் இருந்து ஏறக்குறையக் கூப்பிடு தூரத் தொலைவில் சந்நிதானத்துக்குக் கிழக்குப் பக்கமாகச் செல்வச் சந்நிதி வீதியருகே வெளிமடை வெட்டுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். கண்ணகி அம்மனை வற்றாப்பளைக்கு வழியனுப்பும் சம்பிரதாயமாகவே இது கருதப்படுகிறது.

வெளிமடை நிகழ்ச்சிக்கு முன் பத்தினித் தெய்வத்தைத் துதிக்கும் நோக்குடன் அவளை ஊஞ்சலிலே வைத்து ஊஞ்சற் பாட்டுக்கள் பாடுவார்கள். இவை இவ்வாலயத்தில் நடக்கும் பொங்கல் நிகழ்ச்சிகளாகும்.

முப்போதும் திருமேனி தீண்டும் முனிவர்களாகிய பூசாரிமாரின் அருட் பூசையால் எங்கள் அம்மையாகிய கண்ணகித் தெய்வம் அருளை வாரி வாரி வழங்குகிறாள். அதனால் இந்த ஊரும் வளர்ந்து வளர்ந்து வருகின்றது.

சிவமயம்

ஓம் சக்தி

# கண்ணகி அம்மை திருஊஞ்சல்

**(பொங்கல் அன்று பாடப்படும் பாடல்)**

## காப்பு

சீர்மேவு யாழ்ப்பாண தேயந் தன்னில்
திகழ்தருசீர் இடைக்காடாம் பதியி லுற்ற
பேர்மேவு நல்லிகப்பன் வயலில் வாழும்
பெருமைபெறு கண்ணகிமேல் ஊஞ்சல் பாட
ஏர்மேவு பிரணவமே மூர்த்த மான
எழிலொடுகொள் தேகமதை யாவர்க்குங் காட்டக்
கணபதிதன் னிருசரணம் காப்ப தாமே.

## நூல்

சுந்தரஞ்சேர் பவளத்தால் கால்கள் நாட்டி
சோதிகொளும் வயிரத்தால் விட்டம் மாட்டி
நந்தலிலா மாணிக்கப் பலகை கூட்டி
நாரமுறு பவளத்தாற் கயிறு பூட்டி
சந்தமுறு சித்திரங்கள் பொலியத் தீட்டி
தகைமைபெற இயற்றியிடும் ஊஞ்சல் வைகி
நந்துதவழ் நல்லிகப்பன் வயலில் வாழும்
நன்மைதரு கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

பூவுலகிற் கற்பு நிலை நிறுத்த வேண்டிப்
புண்ணியத்தால் வந்துதித்த பூவை போலும்
நாவுநவில் மொழியுடைய நங்கை யேநின்
நளினமலர்ப் பதம்போற்றும் மடவார் தங்கள்
தேய்வுபெறாக் கற்பதனைச் சிதைக்க வெண்ணும்
சிறியர்இவ்வா றலைவரெனக் காட்டல் போலும்
காவிசெறி நல்லிகப்பன் வயலில் வாழும்
கருதரிய கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

குவலயமீ தடிஅளந்து கொண்ட தாலும்
கோவடர்த்த செயலாலும் குடிலின் மீதே
தவளமுடி தொடஎழுந்த செய்கையாலும்
சந்திரன்நேர் போதிமர நிழலின் கீழே
பவளஇதழ் உடையபசுந் தோகைச் சாயல்

பன்மலர்சேர் அழகவல்லி போல வாய்ந்தே
புவனமிகு நல்லிகப்பன் வயலில் வாழும்
போற்றவரும் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

சங்கைமிகு காளிகணம் கவிதை தாங்க
சாங்நவிதன் திருக்கரத்திற் கவரி வாங்க
துங்கமலர் மாதர் கையில் வட்டம் தூங்க
துந்துபியா தியவாத்தி யங்கள் ஏங்க
பங்கமில்விஞ் சயர்மாதர் கீதம் வீங்க
பண்ணவர்தம் மகளிர்கரம் மலர்கள் ஏந்த
கங்குசெறி நல்லிகப்பன் வயலில் வாழும்
காட்சிதரு கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

நெஞ்சாதி கரணங்கள் தூய்மை யாகி
நித்தலும் உன் திருநாமம் நாவிற் சொல்லிப்
பஞ்சாதி பெறும் அடியை உளத்தில் உன்னிப்
படியதனில் எட்டுறுப்பும் படிய வீழ்ந்தே
அச்சோதி வடிவான அம்மை யேஉன்
அருள் தருவாய் என அடியார் மருங்கில் நிற்க
செஞ்சாலி நல்லிகப்பன் வயலில் வாழும்
செவ்வியுறு கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

சரணமதில் பொலிவுபெறும் தண்டை யாட
தங்கவளை யுடன் சரியும் தனிக்கை யாட
வருணமுறு பதக்கமுயர் மார்பி லாட
அங்கதமும் புயமதனில் கிளர்ந்தேயாடத்
தருணமிகு குழையினுடன்தோடு மாடத்
தனிக்குழலும் அவிழ்ந்துபுறத் தேங்கி யாட
கருணைமிகு நல்லிகப்பன் வயலில் வாழும்
காசில்திருக் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

மாதுமையம் பகமதினில் வந்து தோன்றி
மாங்கனியின் உட்புகுந்து பேழை வைகி
தீதில்வணி கன்மனையாய் இடைச்சி சேர்ந்து
செழியனையும் மாள்வித்துச் சேது மூழ்கி
மேதகுசீர் தனைஉலகில் மிகவு மாக்கி
மேதினியோர் துயரதனைப் போக நீக்கி
காதலொடு நல்லிகப்பன் வயலில் வாழும்
கயற்கண்ணுறும் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

கடைசியர்தம் அளகமதை முகிலென் றெண்ணிக்
களித்துஅவர்தம் சாயலினால் இனமென் றேங்கி
புடைதிகழும் அல்குல்தனைப் போகி யென்றே
பொறிகிளர வெகுண்டணுகி நாசி நோக்கி
அடர்பகையாம் ஓந்தியென மயில்கள் அஞ்சும்
அணிகிளரும் மலர்கள் செறி சோலை சூழும்
மடை விரவு நல்லிகப்பன் வயலில் வாழும்
மாமணியே கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

தங்கமதி நணியவரே ஆடீர் ஊஞ்சல்
தாசருளம் நணியவரே ஆடீர் ஊஞ்சல்
புங்கவர்போற் றடியவரே ஆடீர் ஊஞ்சல்
பொன்னாலாம் அடியவரே ஆடீர் ஊஞ்சல்
பங்கமிலாக் கொங்கையரே ஆடீர் ஊஞ்சல்
பசுங்குழலிற் கொங்கையரே ஆடீர் ஊஞ்சல்
சங்கைமிகு நல்லிகப்பன் வயலில் வாழும்
சாயல்மயிற் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

## வாழி

மேதகுநான் மறையவர்கள் பசுக்கள் வாழி
மேன்மைபெறும் முகிலினங்கள் பலவும் வாழி
தீதகலும் அடியார்கள் நிதமும் வாழி
திருநீறும் அஞ்செழுத்தும் வடமும் வாழி
மேதகைய வேந்தர்செங் கோலும் வாழி
மெல்லியர்தம் பொருவிலுயர் கற்பும் வாழி
காதலொடு நல்லிகப்பன் வயலில் வாழும்
கற்புமிகு கண்ணகியே வாழி வாழி

## எச்சரீக்கை

சீர்த்தம்பையில் நல்லிகப்பனை திகழ்வாய் எச்சரீக்கை
திருமாங்கனி தனில் வந்த கரும்பே எச்சரீக்கை
தேராநெறி தெரிவித்திடும் தேவீ எச்சரீக்கை
திரையாழியில் வருபேழையில் வருவாய் எச்சரீக்கை
பேரார்மலர்க் குழல் மேவிய பரையே எச்சரீக்கை
பெருமாமணி பொதியுஞ்சிலம் பணிவாய் எச்சரீக்கை

## பராக்கு

மறைபரவு கற்புடைய மாதே பராக்கு
மரைமலரை வென்றமுக தேசாய் பராக்கு
பிறைமருவு நுதலுடைய பெரியாய் பராக்கு
பேசுமொழி அமுதனைய கண்டீ பராக்கு
கோவலனைத் தெய்வமெனக் கொண்டாய் பராக்கு
கூடல்தனை எரித்த மலர்க் கொம்பே பராக்கு
நாவலர்கள் புகழ்கின்ற நங்காய் பராக்கு
நண்ணலருக்கு இடியன்ன நாவாய் பராக்கு
திருமகளை வென்றஎழில் தேவீ பராக்கு
சையமன கொங்கைகொளும் உரத்தாய் பராக்கு
தாசர்தமக் குறுதிசெயும் வரத்தாய் பராக்கு
பலவளமார் இடைக்காட்டில் உறைவாய் பராக்கு
பகர்கிரியாம் செங்கோட்டுப் பதியாய் பராக்கு
அலைமருவு வற்றாப்பளை அமர்வாய் பராக்கு
ஆபன்றி யானபதி அணங்கே பராக்கு

## மங்களம்

சித்தி புத்தி நாயகற்கு மங்களம் - சிவன்
தேவியுமை சேந்தருக்கும் மங்களம்
அத்திபுக்க கண்ணகிக்கு மங்களம் - புகார்
அணைந்தவணி கன்மகட்கு மங்களம்

பாடல்வரி பார்த்துவந்தாய் மங்களம் - நல்ல
பாங்கிஜயை மனையிருந்தாய் மங்களம்
கூடல்நகர் கூடவந்தாய் மங்களம் - மன்னன்
கோல்வளைய நேர் நிமிர்ந்தாய் மங்களம்

செங்கோட்டில் சேணடைந்தாய் மங்களம் - பணி
சேரமன்னன் கோயிலுற்றாய் மங்களம்
எங்காட்டூர் எய்தினையே மங்களம் - என்றும்
எங்களனை கண்ணகிக்கு மங்களம்

மங்களம் ஜய மங்களம் மங்களம் சுப மங்களம்

**நவாலியூர், திரு. க. சோமசுந்தரப் புலவர்.**

உ
சிவமயம்

# இடைக்காடு புவனேஸ்வரி கோவில் பிரகாரத்தில் எழுந்தருளி இருக்கும் கண்ணகி அம்மை பேரில் பாடப்பட்ட

# ஊஞ்சல் பாடல்கள்

## காப்பு

திரு மேவும் தமிழ் ஈழநாட்டுக் கேய்ந்த
சிரம் பொருவும் இடைக்காடாம் செல்வ ஊரில்
உரு மேவும் வான் உறையும் உம்பர் போல
உயர் குணத்த மக்கள் எல்லாம் உவந்து வாழ
கருமேதி கயம் படிந்து கரையில் ஏறி
கரும்பு அருந்தும் கழனி சூழ் தளியில் வாழும்
கருணாளும் கண்ணகித்தாய் ஊஞ்சல் பாட
கரிமுகத்துப் பெருமானார் காப்புத்தானே

சீர் பொருந்து பவளங்கள் கால்கள் ஆக
திகழ் தரு நல்முத்துக்கள் கயிறதாக
ஏர் பொருந்து பொன் பலகை இலங்கும் ஊஞ்சல்
இனிது ஏறி அமர்ந்திருந்து இசை செய்வாணி
தார் பொருந்து மலர் மகளும் சமரம் வீச
தம் நிகரில் வான் மகளிர் தாழ்ந்து போற்ற
கார் பொருந்து நல்லிகப்பன் வயலில் வாழும்
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்

காவிரிப் பூம் பட்டினத்துக் கரையில் மேவும்
கலம் மருவு துறை நின்று கப்பல் ஏறி
பூவிரியும் பொழில் நிறைந்த புது நாடு எய்தி
புலம் கொழுதல் பண்டங்கள் புகுந்து சாற்றி
நாவிரியும் புகழ் பொருளோடு எய்தும் நாய்கர்
நற்குடியில் வந்து எமக்கு நன்மையே செய்
காவி திகழ் நல்லிகப்பன் வயலில் வாழும்
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்

வளம் மருவும் பெருங்குடிநல் வணிகப் பேர் சேர்
மாநாய்கன் என்பவற்கு மகளே ஆகி
வளம் செறியும் அக்குடியில் வந்தோன் ஆள
மாசாத்துவான் தனக்கு மகனே ஆகி

உளம் மருவு பல கலைகள் உறுதி ஓடு
உணர்ந்து உயர்ந்த கோவலற்கு மனைவி ஆன
களம் செறியும் நல்லிகப்பன் வயலில் வாழும்
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்

அரிய எனும் கலை ஆகும் ஆடல் பாடல்
அழகு எனும் இம் மூன்று அமைந்த அணங்கு போல்பாள்
பெரிய மலர்க் கண்ணினால் மாதவிப் பேர்ப்
பெண்ணின் மேல் கொண்ட பெரு வேட்கை ஆலே
கரிய குழல் வளமுலை உன் காதல் சோர்ந்து
காலமெல்லாம் அவளுடனே கழித்த அந்நாள்
உரியது ஒரு மகள் உதிக்க உவப்பே கொண்டான்
உளம் திரியாக் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

குலத்தில் உள்ளோர் சேர்த்த நிதிக் குப்பையெல்லாம்
குறைவின்றி ஆங்கு அவட்கே கொடுத்துப் போக்கி
நலம் திகழ் பல்வகை ஆன நகைகள் யாவும்
நாள்தோறும் கொடுத்ததன் பின் நல்க வேண்டி
பொலம் திகழ்உன் கால் ஒன்றின் சிலம்பை ஈயப்
போனபொருள் மீட்பதற்கு இ.்.து ஆகும் என்றே
கலங்கலுறும் கணவன் உடன் மதுரை சேர்ந்த
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்

சின சமயத் துறவியாம் கவுந்திப் பேர்சேர்
தெய்வ மூதாட்டி யுடன் மதுரைக்கு ஏகி
மனம் நலநல் இடையர்குல ஆய்ச்சியான
மாதரியால் அடைக்கலம் பெற்று அங்கு நின்றே
கன மதுறு காற்சிலம்பை விற்க வேண்டிக்
கண்கவரும் மதுரை நகர்க் கோவலனே தான்
தன வணிகர்தமை நாடிச் சென்ற யாவும்
தவ உணர்ந்த கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

துங்க மிகும் மதுரைநகர் வேந்தற்கு ஏய்ந்த
துணைவி காற்சிலம்பு ஒன்று தொலைந்து போக
எங்கெங்கும் தேடிவரும் காலம் மேல் நாள்
இயற்றிய தீவினைப் பயனானது உந்திப் போக்க
அங்கு செல் கோவலனைக் கள்வன் போல
அரசன் தன் ஆணையினால் கொலை செய்திட்டான்
பங்கம் உறும் இச்செயல் கேட்டு ஆற்றாய் ஆகிப்
பதை பதைத்த கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

கொலைக் களம் போய்க் கணவனுடல் கூட்ட மீண்ட
கோவலன்றான் உனைத் தேற்றிக் கோக்கே சென்றாள்
உலைக் கனல் போல் தோற்றமுறும் வெகுளி ஓங்க
உறு துயரம் தாளாது உலகாள்வோன் தன்
மலைத்து நிற்கும் காவலரால் மன்னன் முன்போய்
வழக்கு ரைத்து மன்னனையும் மாள் வித்தங்கே
நிலைத்து நிற்கும் கற்புடையார் எழுவர் தம்பேர்
நிறுத்தி யுள கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

இறைவனையே மட்டுமன்றி இழிந்தோர் வாழும்
எழில் மதுரை தனையு மெரியூட்டி மீண்டே
உறை புனல்சேர் வைகை நதிக் கரையின் ஓரம்
ஓயாது நடந்து வழி சென்று சேரர்
இறைமை செய்யும் வளநாட்டில் எழுந்து நின்ற
எழிற் குன்றின் வேங்கைநிழல் எய்தி நின்றே
மறைவை உறு கணவனுடன் வானிற் சேரும்
மங்கலம் சேர் கண்ணகியே ஆடீர் ஊஞ்சல்

சேரர் குல மன்னவன் செங்குட்டுவன் தான்
செய்த திருக்கோவிலின் கண்சிலையாய் நின்றே
ஊர் அயரும் விழாவின்கண் உயர்வான் தோன்றி
உறு மொழியும் பல வரமும் உவந்தேஈந்து
நாரலரும் மக்க ளுடை நன்மை நோக்கி
நல்லிகப்பன் வயலின் கண் எழுந்து தோன்றும்
காரமரும் கோயி லினுள் காட்சி ஈயும்
கண்ணகி எம் அம்மையே ஆடீர் ஊஞ்சல்

## வாழி விருத்தம்

பருவ மழை தவறாது பயின்று வாழி
பசு இனமும் பிறஉயிரும் பரந்து வாழி
உருவமுறும் மக்கள் இனம் உவந்து வாழி
உலகெங்கும் சமய நெறி உயர்ந்து வாழி
திருவுடையோர் செம்மை அறம் சிறந்து வாழி
தெருளுறு மணத் துறவுடையோர் செறிந்து வாழி
கருதுறு நல் கற்புநெறி கனிந்து வாழி
கண்ணகி எம் அம்மை அருள் நலந்து வாழி

**பண்டிதமணி திரு. சு. இராமசாமி**
இடைக்காடு

உ
சிவமயம்
ஓம் சக்தி

# புவனேஸ்வரியம்மை திருவூஞ்சல்

## தீர்த்த உற்சவம் அன்று பாடப்படும் பாடல்

### காப்பு

அங்கமல மலர்மடவா ரிருவ ரோடும்
ஆன்றவரு மமரச்சு வேலி நீடுந்
திங்கடவழ் பொழிலிடைக்காட் டொருபால் நாளுந்
திருவளரும் நல்லிகப்பன் வயலில் வாழும்
பொங்குபரை யாதியைந்தா யுலக மீன்ற
புவனநா யகிபுகழ்சே ரூஞ்சல் பாடத்
துங்கமத வைந்துகரத் தொந்தித் தந்தித்
தும்பிமுகர் தம்பதுமத் துணைகாப் பாமே

### நூல்

மங்கலஞ் சேர் மறை நான்குந் தூண்க ளாக
மந்திரஞ்சே ராகமங்கள் விட்ட மாகத்
தங்குபல ஞானகலை வடங்க ளாகத்
தாரகமா மறைமூலம் பீட மாக
எங்கு மருள் பொங்குமணி யூஞ்சல் மீதே
ஏகநா யகனுடனே யினிது மேவி
அங்கணணி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

வானமருங் கங்கையினீர் பனிநீர் கூட்டி
வரமமரும் மந்திரப்பொற் கலநீ ராட்டிக்
கானமர்கற் பகக்கனகக் கலன்கள் மாட்டிக்
கவினமர்பூம் பட்டுடுத்திக் கமுநீர் சூட்டி
ஞானமணி விளக்கெடுத்துத் தூபங் காட்டி
நான்மறையந் தணர்பரவ நவைக ளோட்டி
ஆனமரும் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

திங்களணி வெண்குடையிந் திராணி தாங்கத்
திலோத்தமையும் உருப்பசியுங் கவரி வாங்கத்
துங்கமிகு மாலவட்ட மரம்பை வீசத்
தூயமுனி பன்னியர்க ளாசி பேச
செங்கமலை வெண்கமலை வடந்தொட் டாட்ட

ஜெயமடந்தை யிடைவிலக்கிச் செங்கோல் நீட்ட
அங்கணணி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடி ரூஞ்சல்

மங்கலதூ ரியமியம்பச் சங்க மேங்க
வானகதுந் துபிமுழங்க மறைக ளோங்க
செங்கைமணி யாழ்தடவி முனிவர் பாடச்
சேயரிக்க ணரம்பையர்கள் நடன மாட
எங்குமர கரவோசை பொலிந்து நீட
இருவினையும் பழமலமு மிரிந்தே யோட
அங்கமலி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடி ரூஞ்சல்

காரணியு மணிக்கண்டத் தெண்டோள் முக்கட்
கங்கையணி சங்கரர்க்குக் காத லல்கும்
ஏரணியு மிருவிழியும் இருளை யோட்டும்
எழிலணியு மிளநகையும் ஞானத் திங்கட்
சீரணியுந் திருமுகமும் வேய்த்தோ ணான்குந்
திருவடியுஞ் செஞ்சிலம்புந் தெரியக் காட்டி
ஆரணியும் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடி ரூஞ்சல்

உன்னரிய பேரொளியே யமுதே தேனே
ஓங்காரத் துட்பொருளே யுமையே யென்றும்
முன்னரிய நாற்பத்து முக்கோ ணத்துள்
முளைத்தெழுந்த சிவக்கொழுந்தே முதலே யென்றும்
கன்னிகையா யுலகருள்கற் பகமே யென்றும்
கைதொழுது மெய்யடியார் கசிந்து போற்ற
அன்னமலி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடி ரூஞ்சல்

தெண்டிரை நீர்த் தொண்டைமா னாற்றின் பாங்கர்
திருமுருகன் சந்நிதியின் தென்மேல் பாலில்
வண்டிசைக்கக் குயில்பாட மயில்க ளாட
மரகதப்பைங் கிளிபுகலும் வளமார் சோலை
தொண்டரினம் மண்டியுண்டு கண்டம் நீங்கும்
துரியசிவ பரஞானச் சுகவாழ் வீயும்
அண்டர்பணி நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடி ரூஞ்சல்

பாதிமதி நதிபொதியும் பரம னோர்பால்
பரதவர விகடநடப் பால னோர்பால்

சோதிவடி வேலுடைய தோன்ற லோர்பால்
சூரவயி  ரவனோர்பால் வீர னோர்பால்
மோதுதிரை துயில்முகுந்தன் பிரமனோர்பால்
முத்தமிழற் புதமறைதேர் முனிவ ரோர்பால்
ஆதுரந்தீர் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

மோனபர ஞானமதி முடியு மாட
முகமதியி னழகாட முறுவலாடக்
கானமரைங் கணையினொடு கரும்பு மாடக்
கட்கடையி னூறுபரங் கருணை யாடத்
தேனமருங் குவளைநறுந் தெரிய லாடச்
செஞ்சிலம்பு கொஞ்சுதிரு  வடியு மாட
ஆனமரும் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

பூவமர்பொன் நாரணியே  யாடீ ரூஞ்சல்
புனையருட்பொன் னாரணியே யாடீ ரூஞ்சல்
நாவமர்நல் ஆரணியே யாடீ ரூஞ்சல்
நயமமர்நல் லார்அணியே யாடீ ரூஞ்சல்
சேவமரும் அந்தரியே யாடீ ரூஞ்சல்
தீயவினை வந்தரியே யாடீ ரூஞ்சல்
ஆவமரும் நல்லிகப்பன் வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியே யாடீ ரூஞ்சல்

❋

பூவாழி பொன்னின்மழை பொழிந்து வாழி
பூசுரரு மைந்தெழுத்தும் பொலிந்து  வாழி
தேவாழி தேவர்கடம் பெருமான்  வாழி
தெய்வமறை யாகமந்தீந் தமிழும்  வாழி
தூவாழுந் தும்பிமுகத் தெம்பி  வாழி
சுடரிலைவேற்  பரன்வாழி தொண்டர்  வாழி
ஆவாழி நல்லிகப்பன்  வயலில் வாழும்
ஆதிபுவ னேஸ்வரியும் வாழி வாழி

முற்றும்

## தனியன்

வெண்ணிலவார் திருமுடியும்  விழிகள் மூன்றும்
விளங்கிழைசேர் கனதனமும் விறலா னேறும்
உண்ணிகழு மருட்பெருக்கு மிளமை நீங்கா
ஒளியுருவு முயர்மணிப்பொன் னுடையு மோங்கும்

எண்ணிலவு மங்குசபா சத்தி னோடே
எழில்வரத மபயமுமா யியைந்த கையும்
பண்ணிலவு பழமறைச்செஞ்சிலம்பு கொஞ்சும்
பாததா மரையுமுளம் பதித்து வாழ் வாம்.

## எச்சரீக்கை

கருவாருயிர் பெருவீடுற நடமாடர னொருபால்
வருவாய்நல் லிகப்பன்வயல் வாழ்வே எச்சரீக்கை
ஒன்றாகியொ ரைந்தாய்ப்பினு மொன்பான் வடிவாகி
நின்றாய்நல் லிகப்பன்வயல் நிறைவே எச்சரீக்கை
ஐந்தாயெழுத் தெட்டாய்ப் பின்னு, மாறாயிரு கூறாய்
வந்தாய் நல் லிகப்பனுறை மணியே எச்சரீக்கை

## பராக்கு

திருவுமருள் மருவுகலை மகளுமடி பரவ
அருவுமரு வுருவுமுள வம்மே பராக்கு
ஒருகுடிலை சலனமுற இருவிழியி னோக்கி
உலகுதரு சலசபத முடையாய் பராக்கு
கரடதட விகடமத கரியினொடு நெடுவேல்
கரமணியு முருகையருள் கனியே பராக்கு

## லாலி

தேவி லாலி சிவகாமி லாலி பரன்
ஆவி லாலி மகமாயி லாலி
ஆதி லாலி யருணீதி லாலி சிவன்
பாதி லாலி பரஞ்சோதி லாலி
மாலி லாலி திரிசூலி லாலி யருள்
பாலி லாலி யெழில் நீலி லாலி

## மங்களம்

ஆதி புவனேஸ்வரிக்கு மங்களம் - முது
ஆரணங்கள் தோத்திரஞ்செய் யம்பிகைக்கு மங்களம்
பாதியுரு வானவட்கு மங்களம் - நிறை
பத்தர்கட்கு முத்திதரும் பார்ப்பதிக்கு மங்களம்
சோதியுரு வானவட்கு மங்களம் - துதி
சொல்லவருள் செய்யுமொரு நல்லவட்கு மங்களம்
நீதியுரு வாமனைக்கு மங்களம் - புகழ்
நிலவுமிடைக் காட்டுவதி யுலகனைக்கு மங்களம்

முற்றும்

**நாவலியூர் திரு.க. சோமசுந்தரப்புலவர்.**

# தை அமாவாசையைப் பூரணையாக்கிய அபிராமிப் பட்டர்

சைவசமய நாயன்மார்களும், வைஷ்ணவ சமய ஆழ்வார்களும் இறையருள் கொண்டு செய்த அற்புதங்கள் எண்ணிலடங்கா. சக்திமேல் தீராத பக்தி கொண்டவர்களில் இராமக்கிருஷ்ண பரமஹம்சரும், அபிராமிப் பட்டரும், மகாகவி காளிதாசரும் தொன்மையானவர்கள்.

முன்னவர் தட்சினேஸ்வரத்துக் காளிதேவியுடன் நேரில் கண்டு கதைத்தது மாத்திர மல்லாமல் தனது பிரதம சீடனாகிய சுவாமி விவேகானந்தரையும் தன் யோகசக்தியால் காளிதேவியுடன் கதைக்க வைத்தவர். பின்னவர் திருக்கடவூர் அபிராமி அம்மை மூலம் ஒரு தை அமாவாசைத் தினத்தன்று தாடங்கத்தை வானில் தவழவிட்டுப் பூரணையாக்கியவர்.

சோழவள நாட்டில் திருக்கடவூர் என்பது ஓர் முக்கிய திருத்தலமாகும். இது சிதம்பரத்துக்கு அருகில் உள்ளது. சிவனின் அட்டவீரட்டத் தலங்களில் இதுவுமொன்று. இங்குதான் சிவபிரான் மார்க்கண்டேயருக்காக இயமனைக் காலால் உதைத்தார். இவ்வாலயத்தில் அபிராமி அம்பாளுக்கெனத் தனியான ஓர் ஆலயம் உண்டு. சுப்பிரமணியப் பட்டர் என்பவர் தினமும் காளிக்குப் பூஜை செய்து வந்தார். இவர் அம்பாளிடம் நிறைந்த பக்தியுடையவர்.

இவர் தஞ்சை சரபோஜி மன்னனின் அரண்மனையிலும் பஞ்சாங்கம் பார்க்கும் தொழில் புரிந்து வந்தார். இதன் காரணமாக இவரின் உயர்வைச் சகிக்க முடியாது பொறாமை கொண்ட அயலவர்கள் இவருக்கு அரசசபையில் இருக்கும் கௌரவத்தைக் குறைக்கக் கங்கணம் கட்டினர்.

தஞ்சாவூரை ஆண்ட சரபோஜி மன்னர் ஒரு தை அமாவாசைத் தினத்தன்று காவிரி நதி சங்கமமாகும் பூம்புகாரில் நீராடிவிட்டு அரண்மனைக்குத் திரும்பும் வழியில் ஸ்ரீ அமுதகடேஸ்வரரையும், ஸ்ரீ அபிராமி அம்மையையும் வழிபடும் பொருட்டு திருக்கடவூரையடைந்தார். அப்பொழுது பட்டர் பூசை முடிந்து நிஷ்டையிலிருந்த நேரம், அங்கிருந்த பொறாமைக்கும்பல் மன்னருக்குப் பட்டரைப்பற்றி இல்லாத பொல்லாததைக் கூறியது.

அன்னையின் முகமதியின் ஒளியில் ஒன்றியிருந்த சுப்பிரமணியப்பட்டரைக் கண்ட மன்னர் இன்று என்ன திதி, என வினாவினார். அன்னையின் அருள் ஒளியில் மூழ்கியிருந்த பட்டரும் அன்று பௌர்ணமி என்றார். துன்மதியினர் பட்டரைப்பற்றிக் கூறியது முற்றும் உண்மையெனக் கருதினான். சரபோஜி மன்னன் என் அரண்மனையில் பஞ்சாங்கம் பார்க்கும் கடமையிலிருப்பவர். தவறான கணிப்பை எனக்குத் தருகின்றாரே என்பதனை நினைத்துப் பெரும் சினங்கொண்டு "இன்று மாலை பூரணை தென்படாவிட்டால் உனக்கு மரண தண்டனை கிடைக்கும்" எனக்கூறி அரண்மனை ஏகினான்.

இதுவரையும் அபிராமி அம்மையின் அருள் வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்த பட்டர் உலகமுகப் பட்டார். நிகழ்ந்த சம்பவத்தை உணர்ந்தார். கேட்டவரோ மன்னர். அன்று திதியோ அமாவாசை. மன்னரின் வினாவுக்கு விடை பகிர்ந்தமைக்கு வருந்தினார். "நானும் அறியேன், அவளும் பொய் சொல்லாள். அம்மையின் அருள் வழியே சொல்லியிருக்கின்றோம். எனவே இதை அம்மையிடமே முறையிடுவோம் என்று எண்ணி வைராக்கிய உள்ளத்தோடு அம்பிகையின் கோயில் முன்றலில் அக்கினிக் கிடங்கு அமைத்து, அதன் மேல் நூறு கயிறுகளால் இணைக்கப்பட்ட உறி ஒன்றின் மேலிருந்து கொண்டு அபிராமி அம்மையின் மேல் அந்தாதி பாடத் தொடங்கினார்.

ஒவ்வொரு பாடல் இறுதியிலும் ஒவ்வொரு கயிறு அறுக்கப்பட்டது. எழுபத்து எட்டுப் பாடல் வரையும் கயிறு அறுக்கப்பட்டது. எழுபத்து ஒன்பதாவது பாடலாக **'விழிக்கே அருள் உண்டு....'** என்று பாடும் பொழுது அம்மை தன்னுடைய காதிலிருந்த ஒரு தோட்டைக் கழற்றி வானில் வீசியதும் அது முழு நிலவாகத் தோன்றியது. இதனைத் தன் நிலா முற்றத்திலிருந்து கண்ட மன்னன் அதிசயித்து, மகிழ்ந்து அரண்மனையிலிருந்து ஓடிவந்து பட்டரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு அவரை வழிபட்டான்.

அவரின் அற்புதச் செயலுக்குச் சன்மானமாக "இன்று முதல் அவருக்கு வேலிக்கு ஒரு மரக்கால் நெல்வீதம் கொடுக்க வேண்டும்" இதை சகல விவசாயிகளிடமிருந்து அறவிட்டுக் கொடுக்குமாறு மந்திரியிடம் ஆணையிட்டுச் சென்றனர்.

"சுப்பிரமணியம்" என்ற பெயர் கொண்ட பட்டர் அன்று முதல் "அபிராமிப் பட்டர்" ஆனார். தொடர்ந்து இவர் நூறு பாடல்களைப் பாடி அபிராமி அந்தாதியை அளித்துள்ளார்.



மூலமூர்த்தியாகிய ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்




பரிவாரமூர்த்தி ஸ்ரீ கண்ணகி அம்பாள்



எழுந்தருளி விக்கிரகங்கள், ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள், ஸ்ரீ கண்ணகி அம்பாள்,
ஸ்ரீ சிவலிங்கப் பெருமான், ஸ்ரீ வரலக்ஷ்மி அம்பாள், முருகப்பெருமானின் வேலாயுதம்



ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் பிரதான யாகசாலைத் தோற்றம்



1990ல் நடைபெற்ற அபிராமிப்பட்டர் விழாக்காட்சி

உ
சிவமயம்

### அபிராமிப்பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

## காப்பு

தார் அமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரர் தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தை உள்ளே
கார் அமர் மேனிக் கணபதியே! நிற்க கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்குமதோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. 01

துணையும், தொழும் தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும் பனிமலர் பூங்
கணையும், கருப்புச் சிலையும், மென்பாசாங் குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே. 02

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே. 03

மனிதரும், தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக்கோமளமே! கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே. 04

பொருந்திய முப்புரை! செப்பு உரை செய்யும் புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார் சடையோன்
அருந்திய நஞ்சு அமுது ஆக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே. 05

சென்னியது உன்பொன் திருவடித் தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம்; சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடியாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே. 06

ததி உறு மத்திற் சுழலும் என் ஆவி தளர்வு இலதோர்
கதி உறும் வண்ணம் கருது கண்டாய்; கமலாலயனும்,
மதி உறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கி என்றும்
துதி உறு சேவடியாய் சிந்துரான சுந்தரியே! 07

சுந்தரி! எந்தை துணைவி! என்பாசத் தொடரை எல்லாம்
வந்து அரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி; நீலி; அழியாத கன்னிகை; ஆரணத்தோன்
கந்தரி; கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே. 08

கருத்தன, எந்தை தன் கண்ணன், வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன, பால் அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள் கூர்
திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்,
முருத்தன மூரலும், நீயும், அம்மே! வந்து என்முன் நிற்கவே! 09

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை;
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள்; எழுதாமறையின்
ஒன்றும் அரும் பொருளே அருளே! உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே. 10

ஆனந்தமாய், என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமானவடிவுடையாள், மறைநான்கினுக்கும்
தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங்கம் எம்பிரான் முடிக்கண்ணியதே. 11.

கண்ணியதுன் புகழ்; கற்பது உன்நாமம் கசிந்து பத்தி
பண்ணியதுன் இருபதாம் புயத்தில்; பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான் முன்செய்த
புண்ணியது ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே. 12

பூத்தவளே புவனம் பதினான்கையும்; பூத்தவண்ணம்
காத்தவளே! பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப்பவர் உன்னை வானவர், தானவர், ஆனவர்கள்;
சிந்திப்பவர் நல்திசைமுகர் நாரணர் சிந்தை உள்ளே;
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்; பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டிநின் தண்ஒளியே. 14

தண் அளிக்கென்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்
மண் அளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்
விண் அளிக்கும் செல்வமும், அழியா முத்திவீடும் அன்றோ?
பண் அளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே! இளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கும் இடமே, எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே! வெளிமுதல் பூதங்கள் ஆகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே. 16

அதிசயமான வடிவு உடையாள், அரவிந்தம் எல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணை இரதி
பதி சயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்
மதி சயம் ஆக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும், சிந்தை உள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரை கண்டது இல்லை; கருத்தின் உள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திரு உளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பது மேவி உறைபவளே. 19

உறைகின்ற நின்திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே. 20

மங்கலை! செங்கலசம் முலையாள் மலையாள்! வருணச்
சங்கு அலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!
பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே. 21

கொடியே! இளவஞ்சிக் கொம்பே! எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்திங்குஇனிப்பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே. 22

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது; அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே! உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளிய என் கண்மணியே! 23

மணியே! மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப்பிறப்பு அறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்; முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே. 25

ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினையும் படைத்தும்
காத்தும், அழித்தும் திரிபவராம்: கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்குஎன்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகை உடைத்தே. 26

உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கையெல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 27

சொல்லும், பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே! நின்புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்,
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே. 28

சித்தியும், சித்திதரும் தெய்வம் ஆகித் திகழும்பரா
சக்தியும், சக்திதழைக்கும் சிவமும், தவம் முயல்வார்
முக்தியும், முத்திக்கு வித்தும், வித்து ஆகிமுளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை அன்றே. 29

அன்றே தடுத்து என்னை ஆண்டு கொண்டாய்; கொண்டதல்லஎன்கை
நன்றே உனக்கு இனி நான் என்செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரை ஏற்றுகை நின் திருவுளமே;
ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே! 30

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்; இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை; ஈன்று எடுப்பாள் ஒருதாயும் இல்லை;
அமையும் அமை உறு தோழியர் மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக்கடலில் அகப்பட்டு அருள் அற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின்பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழியே அடும்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்; அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளையே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே. 33

வந்தே சரணம்புகும் அடியாருக்கு வான் உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர் முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னி வைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத்தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கண்பணி அணைமேல் துயில்கூறும் விழுப்பொருளே. 35

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருள் ஏதும் இன்றி ஒளி வெளியாகி இருக்கும் உன்தன்
அருள் ஏது அறிகின்றிலேன், அம்புயாதனத்து அம்பிகையே! 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும்; எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே. 37

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும், துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடி இடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்கு உன்றன் அடித் தாமரைகள் உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்கு உன்றன் விழியின் கடை உண்டு; மேல் இவற்றின்
மூளுகைக்கு என் குறை; நின்குறையே அன்று; முப்புரங்கள்
மாளுகைக்கு அம்புதொடுத்த வில்லான் பங்கில் வாணுதலே! 39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணியஎம் பெருமாட்டியை பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ முன்செய் புண்ணியமே. 40

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடு இருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே. 41

இடங் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி முத்து
வடங்கொண்ட கொங்கை மலை கொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங் கொண்ட நாயகி! நல் அரவின்
படங்கொண்ட அல்குல்! பனிமொழி வேதப்பரிபுரையே. 42

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்சபாணி! இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 43

தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே, அவள் தமக்கு அன்னையும் ஆயினள்; ஆகையினால்
இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும் ஆம்
துவளேன், இனிஒரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே 44

தொண்டு செய்யாது, நின்பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அதுகைதவமோ? அன்றிச்செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கைநன்றே; பின்வெறுக்கை அன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியது அன்றே; புது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்துவனே! 46

வாழும்படி ஒன்று கண்டுகொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும்படி அன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ!
குடரும், கொழுவும், குருதியும் தோயும் குரம்பையிலே. 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங் கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்;
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே! 49

நாயகி; நான்முகி; நாராயணி; கை நளின பஞ்ச
சாயகி; சாம்பவி; சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி; மாலினி; வாராகி; சூலினி மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே. 50

அரணம் பொருள் என்று அருள் ஒன்று இலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி தன் அடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே. 51

வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே. 52

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும், முத்து ஆரமும், பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலும் கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனியிருப்பார்க்கு இதுபோலும் தவம் இல்லையே. 53

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

மின் ஆயிரம் ஒருமெய் வடிவு ஆகி விளங்குகின்ற(து)
அன்னாள்; அகமகிழ் ஆனந்தவல்லி; அருமறைக்கு
முன்னாய் நடு எங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்று இலையே. 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகம் எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள், என்றன் நெஞ்சின் உள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா; இப் பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே. 56

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டம் எல்லாம்
உய்ய அறம் செய்யும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையுங் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய்; இதுவோ உன்தன் மெய் அருளே. 57

அருணாம் புயத்தும் என்சித்தாம்புயத்தும் அமர்ந்து இருக்கும்
தருணாம்புய முலைத்தையல் நல்லாள், தகைசேர் நயனக்
கருணாம்புயமும், வதனாம்புயமும், கரனாம்புயமும்,
சரண அம்புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதுஇல்லை ஈது அல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை; நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இங்கு அலர் ஆக நின்றாய்; அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்றபாலரையே. 59

பாலினும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார் சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன்முடை நாய்த்தலையே. 60

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவு இன்றி ஆண்டு கொண்டாய்; நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறு பெற்றேன்!
தாயே! மலை மகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே. 61

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறி இட்ட நாயகி! கோகனகச்
செங்கைக் கரும்பும், மலரும் எப்போதும் என்சிந்தையதே. 62

தேறும்படி சில ஏதுவும் காட்டி முன் செல்கதிக்குக்
கூறும்பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும்; சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டு என்று கொண்டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள்பால் சென்று மிக்க அன்பு
பூணேன்; உனக்கு அன்பு பூண்டு கொண்டேன்; நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன்; ஒருபொழுதும் திருமேனிப் பிரகாசம் அன்றிக்
காணேன் இருநிலமும், திசை நான்கும் ககனமுமே. 64

ககனமும், வானும் புவனமும் காணவில் காமன் அங்கம்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும், செம்
முகனும் முந்நான்கு இரு மூன்று எனத்தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்று அறியேன் சிறியேன் நின்மலர் அடிச்செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்று இல்லேன் பசும்பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்று இருப்பாய்; வினையேன் தொடுத்த
சொல்அவம் ஆயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம் ஒரு
மாத்திரைப்போதும் மனத்தில்வையாதவர் வண்மை, குலம்
கோத்திரம், கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பார்எங்குமே. 67

பாரும், புனலும், கனலும் வெங்காலும், படர்விசும்பும்,
ஊரும் உருகு சுவை ஒளி ஊறு ஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம் இல்லையே. 68

தனம் தரும்; கல்வி தரும்; ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும்தரும்; நெஞ்சில்வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. 69

கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே. 70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி; அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள்; பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பு இருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே! இரங்கேல் உனக்கு என் குறையே. 71

என்குறைதீர நின்று ஏத்துகின்றேன்; இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார் குறை காண்; இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே. 72

தாமம் கடம்பு; படை பஞ்சபாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது; எமக்கு என்று வைத்த
சேமம் திருவடி; செங்கைகள் நான்கு; ஒளி செம்மை; அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடி இணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில்; தாயர் இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை; மால்வரையும்
பொங்குவர் ஆழியும்! ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே. 75

குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம்; நின்குறிப்பு அறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி; வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்சபாண பயிரவியே. 76

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா
வயிரவி, மண்டலி, மாலினி சூலி வராகி என்றே
செயிர் அவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே. 77

செப்பும், கனக கலசமும் போலும் திருமுலை மேல்
அப்பும் களப அபிராமவல்லி! அணி தரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என் துணை விழிக்கே. 78

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே. 79

கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா! என்கண் ஓடியவா! தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. 80

அணங்கே! அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன்; ஒருவரை வாழ்த்துகிலேன்; நெஞ்சில் வஞ்சக ரோடு
இணங்கேன்; எனது உனது என்று இருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவு ஒன்றிலேன் என்கண் நீ வைத்த பேர் அளியே. 81

அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர் திருமேனியை உள்ளும்தொறும்,
களியாகி, அந்தக் கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே. 82

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக் கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை, ஒளிர்மதிச்செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சு அடையாளை தயங்கு நுண்நூல்
இடையாளை, எங்கள் பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே. 85

மால் அயன்தேட, மறைதேட, வானவர்தேட நின்ற
காலையும், சூடகக் கையையும் கொண்டு; கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும் போது வெளி நில் கண்டாய்;
பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டம் எல்லாம்
பழிக்கும்படி ஒருபாகம் கொண்டு ஆளும் பராபரையே. 87

பரமென்று உனை அடைந்தேன் தமியேனும்; உன் பத்தருக்குள்
தரம் அன்று இவன் என்று தள்ளத்தகாது; தரியலர் தம்
புரம் அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில், அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவே! நின் சேவடி சென்னி வைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியும் அற்ற
உறக்கம் தர வந்து, உடம்போடு உயிர் உறவு அற்று, அறிவு
மறக்கும் பொழுது, என் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தாவகை என் மனத் தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எமக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை; விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தால் அதை நல்கும் மெல்லியலே. 90

மெல்லிய நுண்இடை மின் அனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்அனையாளை, புகழ்ந்து மறை
சொல்லியவண்ணம் தொழும் அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம்ஆர்த்துஎழ வெண்பகடு ஊரும் பதம் தருமே. 91

பதத்தே உருகி, நின் பாதத்திலே மனம் பற்றி, உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய்; இனியான் ஒருவர்
மதத்தே மதி மயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;
முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ் நகையே. 92

நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை; மானே முதுகண்; முடிவில் அந்த
வகையே பிறவியும்; வம்பே மலைமகள் என்பது; நாம்
மிகையே இவள் தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழும் அடியார், விழி நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்தம் ஆகி; அறிவு இழந்து
சுரும்பிற் களித்து, மொழி தடுமாறி, முன் சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவர் என்றால், அபிராமி சமயம் நன்றே. 94

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான்அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கேபரம், எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனது என்று அளித்துவிட்டேன்; அழியாதகுணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே! 95

கோமள வல்லியை, அல்லியந் தாமரைக்கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகல கலா மயில் தன்னைத், தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் அதிபரே. 96

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன் அமரர் தம்கோன்
போதில் பிரமன், புராரி, முராரி, பொதிய முனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின் அடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும், தலை வந்த ஆறும் கரந்தது எங்கே?
மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒரு காலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியாமடப் பூங்குயிலே. 98

குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை; கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை; வந்து உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின்மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்தகனம் குழையே. 99

குழையத் தழுவிய கொன்றை அம்தார் கமழ்கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்பு வில்லும்
விழையப் பொருதிறல்வேரி அம்பாணமும்; வெண்நகையும்,
உழையைப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே. 100

## நூற் பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை, புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.

# ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் தோத்திரம்

கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோயில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி சிவகாமி அம்மா
விற்கோல வேத வல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோயில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே. (கற்பூர)

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம் இருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
கார் இருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம் பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீ இருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்து விட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவளின் குரல் கேட்டு உன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு (கற்பூர)

கண்இரண்டும் உன்உருவே காணவேண்டும்
கால் இரண்டும் உன் அடியே நாடவேண்டும்
பண் அமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கைஉனையே கூடவேண்டும்
எண்ணம் எல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண்அளக்கும் சமயபுர மாரியம்மா
மகளுடைய குறைகளையும் தீரும் அம்மா (கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சில் உன் திருநாமம் வழிய வேண்டும்

கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றம் எல்லாம் நீடூழி வாழவேண்டும்
ஜோதியிலே நீஇருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா?
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா? (கற்பூர)

அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ?
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமைஇன்றிக் காவல் உண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தம் உண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான் உன்றன் பிள்ளையன்றோ? (கற்பூர)

அன்புக்கே நான் அடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணியவேண்டும்
என் பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழவேண்டும் (கற்பூர)

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய் அதனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டில் ஆகவில்லை
செம்பவள வாய் அழகி உன் எழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை (கற்பூர)

# ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை

## காப்பு

ஆக்கும் தொழில் ஐந்து அரன் ஆற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரிபால்
சேர்க்கு நவரத்தின மாலையினைக்
காக்கும் கண நாயக வாரணமே
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே.

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
　　கண்மூடி நெடுங் கனவான தவம்
பெற்றும் தெளியார் நினை என்னில் அவம்
　　பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
　　பகைவர்க்கு எமனாக எடுத்தவளே
வற்றாத அருள்சுனையே வருவாய்
　　மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

மூலக் கனலே சரணம் சரணம்
　　முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
　　குன்றாத ஒளிக் குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
　　நினைவற்று எளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரீ வருவாய் வருவாய்
　　மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

முத்தேவரும் முத்தொழில் ஆற்றிடவே
　　முன்னின்று அருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
　　வேதாந்த நிவாஸினியே சரணம்

தத்தேறிய நான் தநயன் தாய்நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு தத்திக்கு இணைவாழ்வு உடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிரம்ப வளம் பொழி பாரோர்
தேன் பொழிலாம் இது செய்தவள் யாரோ
எந்த இடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க்கு அருள் எண்ணம் மிகுந்தாள்
மந்திர வேதமயப் பொருள் ஆனாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

காணக் கிடையா கதியானவளே
கருதக் கிடையாக் கலையானவளே
பூணக் கிடையாப் பொலிவானவளே
புனையக் கிடையாப் புதுமைத்தவளே
நாணித் திருநாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதி ஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவ என்று அடியவர் குழும
அவர் அருள் பெற அருள் அமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல் யாழ் மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராக விகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணீ
சாம்பவி சந்திர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்கிருத பூரணி
அம்ருத சொரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

வலை ஒத்த வினை கலை ஒத்த மனம்
மருளப் பறையாறு ஒலி ஒத்த விதால்
நிலையற்று எளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற்று அசைவற்று அநுபூதி பெறும்
அடியார் மிடிவாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எலாம் அடைவார்
சிவரத்தினமாய்த் திகழ்வார் அவரே

# துக்க நிவாரண அஷ்டகம்

## ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அருளியது

மங்கள ரூபிணி மதி அணி சூலினி மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே!
கங்கண பாணியன் கனிமுகம் கண்டநல் கற்பகக் காமினியே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

கான் உறு மலர்எனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தான் உறு தவஒளி தார்ஒளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்
மான் உறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

சங்கரி! சௌந்தரி! சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே!
பொங்கு அரிமாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே!
எம் குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்தநல் துர்க்கையளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

தணதண தந்தண தவில்ஒலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்!
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்!
பணபண பம்பண பறைஒலி கூவிடப் பண்மணி நீ வருவாய்!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

பஞ்சமி! பைரவி! பர்வத புத்திரி, பஞ்சநல் பாணியளே!
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்த நல் குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமர் அது செய்தநல் சக்தி எனும் மாயே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

எண்ணியபடி நீ அருளிட வருவாய் எம்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

இடர் தரு தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

ஜெய ஜெய பாலா! சாமுண்டேஸ்வரி! ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய துர்க்கா! ஸ்ரீபரமேஸ்வரி! ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய ஜெயந்தி! மங்கள காளி! ஜெய ஜெய ஸ்ரீதேவி!
ஜெய ஜெய சங்கரி! கௌரி! க்ருபாகரி! துக்க நிவாரணி காமாக்ஷி!

# தம்பாலை, இடைக்காடு, வளலாய் கிராமங்களிலுள்ள ஏனைய ஆலயங்கள்

தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய கிராமங்களிலுள்ள ஆலயங்களின் தலபுராணங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. இவற்றின் நம்பகத்தன்மையும் ஆரம்பகாலமும் துருவி ஆராயத்தக்கது. இவை கர்ண பரம்பரைச் செய்தியாகவே எமக்கும் கிடைத்துள்ளன. அனேகமான ஆலயங்களின் ஆரம்பகாலத்தையும் தோற்றத்துக்குரிய மூல காரணங்களையும் சரிவர அறியமுடியவில்லை. எமது மூன்று கிராமங்களின் வரலாறுகளை அறிந்து, ஆராய்ந்து அவற்றைப் புத்தகமாக வெளியிட இருபது வருடங்களாக இடைக்காடு இந்துநெறிக் கழகம் எடுத்த முயற்சி இன்றுவரை கைகூடவில்லை. காரணம் விஷயம் அறிந்த முதியோர்கள், புத்தி ஜீவிகள் தற்சமயம் எம் மண்ணில் இல்லை. தற்சமய முதியோர்களில் பலர் ஞாபகசத்தியற்றவர்களாகவுள்ளனர். இராணுவ அத்துமீறல் காரணமாக எம் கிராமத்தவர்களிற் பலர் சிதறுண்டு நாட்டின் பல பாகங்களிலும் விரக்தியுடன் வாழ்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் பிறந்த நாம் எமது கிராமங்களின் பூர்வீகத்தைச் சரிவர அறிய முடியவில்லை என்றால் எம் இளஞ் சந்ததியினர் எப்படி அறிவர்? எப்படியாயினும் எமது கிராமங்களின் வரலாற்றை அவர்கள் முன்வைப்பது பொறுப்புள்ள பிரஜைகளின் தலையாய கடமையாகும். இதன் அம்சமாக ஆன்மிகத்தின் ஒரு பகுதியை இம்மலர் மூலம் அறியத்தரக்கூடியதாக இருக்கின்றது. எமது கிராமத்தின் பூர்வீக வரலாறுகளைத் தெரிந்தவர்கள், இடைக்காடு இந்துநெறிக் கழகத்திற்குத்தந்துதவுமாறு வேண்டிக்கொள்கின்றோம். எமது கிராமம் ஓர் ஞானபூமி, பல அருளாளர்களை எமக்குத் தந்த மண். ஈழநாட்டில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் மூன்றின் மூலகர்த்தாக்கள் எம் கிராமத்தவர்களே. ஒன்று ஒட்டிசுட்டான் தான்தோன்றிஈசுவரர் ஆலயம் மற்றவை புளியம் பொக்கணை மற்றும் புதூர் நாகதம்பிரான் ஆலயங்கள்.

தீரபுத்திரர், முருகஉடையார், வள்ளிப்பிள்ளை அம்மையார், படிமத்தவேலர், அருணாசலப் பெரியார், நல்லதம்பிச்சாத்திரியார், சந்திரவர் செல்லர், சிவஞானியார் போன்றோர் எமது கிராமத்தில் வாழ்ந்து இறையருள் பெற்ற அனுபூதிமான்கள். இவர்கள் என்றும் எமது மதிப்புக்கும் வணக்கத்திற்கும் உரியவர்கள்.

## தம்பாலை வெல்லன் அம்பலவாணர் சித்தி விநாயகர் ஆலயம் (குடாக்கட்டுப் பிள்ளையார் கோவில்)

இத் திருத்தலம் கிட்டத்தட்ட 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என அறியக்கூடக்கின்றது. இத்தலம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது. செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் இடது பக்கத்தில் அமைந்துள்ளது. அம்பாளின் பிள்ளைகள் இருவரும் அவர் வலது இடது பக்கங்களிலிருந்து அருள்பாலித்துக் கொண்டிருப்பது விசேட அம்சமாகும்.

இடைக்காடு, வளலாய், தம்பாலை ஆகிய இடங்களிலுள்ள கோவில்களில் இது புராதனமானது. இத் திருத்தலத்தின் ஸ்தாபகர்களைச் சரியான முறையில் அறிய முடியாவிட்டாலும் இது அக்காலத்தில்ஒரு பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கியுள்ளது என்பதற்கு யாழ் கச்சேரி கோவில் பதிவுடாப்பு சான்று பகரும். இத்தலத்தின் பெயர் 1872ம், 1882ம், 1892ம் ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கில் பதிவுசெய்யப்பட்ட கோவில்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. தலவிருட்சம் - புளியமரம், சங்காபிஷேகதினம் - ஐப்பசித் திருவாதிரை. சிவஸ்ரீ நா. கந்தசாமிக் குருக்களைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ க. ஜெயராமக் குருக்கள் இக்கோவிலைப் பூசனை செய்தும் பரிபாலனம் செய்தும் வருகின்றார். இத்தலத்திற்கு மடைப்பள்ளியும் நன்னீர்க் கிணறும் உண்டு.

தகவல்

**1. பிரம்மஸ்ரீ க. ஜெயராமக் குருக்கள் - தம்பக்கடவை**
**2. யாழ் கச்சேரி ஆவணம்**

## தம்பாலை ஸ்ரீஞானவைரவர் ஆலயம் – சந்நிதி வீதி

சுப்பையர் குடும்பத்தினர் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு இத்தி மரத்தடியில் மூன்று திரிசூலங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். தலவிருட்சமாகிய இத்தி அற்ற பின், ஓலைக்கொட்டில் அமைத்து வழிபட்டு வந்தனர். அதன் பின் வைரவ மூர்த்தியை சுண்ணாம்புக் கட்டடத்தில் பிரதிஷ்டை செய்து பூசித்தனர். 1958ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை வ. கார்த்திகேசு, தி. கந்தசாமி ஆகிய இரு குடும்பத்தினராலும் பராமரித்து வழிபட்டு வரப்படுகின்றது. 1980ஆம் ஆண்டளவில் இக்கோவில், சீமெந்துக் கட்டடமாக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1985ஆம் ஆண்டு வைரவ மூர்த்தியுடன் விநாயகரையும் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது. இதன் வருடாந்தப் பொங்கலும் குளிர்த்தியும் ஆனி உத்தரத்தன்றாகும்.

2005ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் இத்திருக்கோவிலை விரிவுபடுத்த பரிவாரமூர்த்திகளாகிய விநாயகருக்கும், முருகனுக்கும், தனித்தனிக் கோயில்கள் கட்டியும் நிருத்த மண்டபம், மடைப்பள்ளி, கிணறு, சுற்றுமதில் ஆகியவைகளை அமைத்தும் ஆனி உத்தரமன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற ஞானவைரவர் அருள்பாலித்துள்ளார்.

தகவல்

**திரு. திருமதி கா. சித்திரவடிவேல்** - தம்பாலை.

## தம்பாலை அருள்மிகு ஸ்ரீ நாச்சிமார் ஆலயம்

1930ஆம் ஆண்டளவில் சரவணை தாமு அவர்கள் வேப்ப மரத்தடியில் திரிசூலம் வைத்து வழிபட்டு வந்ததாகவும், தலவிருட்ஷம் பட்டபின் 1980இல் மூலஸ்தான மண்டபம் நிறுவி அதில் நாச்சி அம்பாள், பிள்ளையார், வேல் ஆகிய சொரூபங்களைப் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதாகவும், 1998ஆம் ஆண்டு வெளிமண்டபம்

கட்டி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதாகவும் அறியக்கிடக்கின்றது. இது ஆசூசம் தாங்காத தெய்வமென இப்பகுதி மக்களால் கருதப்படுகிறது. இதனால் இளம் யுவதிகள் மாதவிடாய் காலத்தில் கோவில் அருகில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்வர்.

தகவல்

1. **திரு. தாமு ஐயம்பிள்ளை** (தம்பாலை)

2. **திரு. S. மகேந்திரன்** (தம்பாலை)

# தம்பாலை வடுகன் நாவலடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

1875ஆம் ஆண்டளவில் திரு. கார்த்திகேசு என்பவரால் நாவல் மரப்பொந்தில் திரிசூலங்களை நாட்டி வழிபடப்பட்டு வந்ததாகவும், அதன்பின் அவர் பரம்பரையில் வந்த திருமதி இ. முத்தம்மாவால் ஆதரிக்கப்பட்டு வருவதாகவும் இத் திருத்தலம் பற்றி அறியக்கிடக்கின்றது. வருடாவருடம் சித்திரைப் பறுவத்தில் திருக்குளிர்த்தியும், பொங்கலும் நடைபெற்று வருகின்றன. நாவல் மரத்தின் முன்பாக சீமேந்தால் கோயில்கட்டி அதில் வைரவரைப் பிரதிஷ்டை செய்து 25.04.2002 அன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆதி வைரவர் இன்றும் நாவற்பொந்தில் அமைந்துள்ளார். இதற்குச் சிறிய கதவு அமைத்து அவ் ஆதிவைரவருக்கு முத்தம்மா குடும்பத்தினர் தினமும் திருவிளக்கேற்றி வழிபட்டு வருகின்றனர். பிரதிஷ்டா மூர்த்திக்குப் பூசகர் மூலம் பூசைகள் நடைபெற்று வருகின்றது. இருமூர்த்திகளையும் முன் பின் இரு கதவுகளினூடாகக் கண்டு தரிசிக்கக் கூடிய விதத்தில் இத்திருத்தலம் அமைந்திருப்பது விஷேட அம்சமாகும். இதற்குக் குழாய்க்கிணறும் உண்டு.

தகவல்

**திரு. தி. இ. இந்திரேஸ்வரன்** (தம்பாலை)

# தம்பாலை புளியடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

1925ஆம் ஆண்டளவில் கார்த்தி சின்னப்புவால் இவ் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டு, காசியர் பொன்னரால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதாக மூதாதையர்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. இதன் தலவிருட்ஷம் இத்தியும், புளியமரமும். ஆனி உத்தரத் திருநாள் இதன் வருடாந்தப் பொங்கல், குளிர்த்தித் தினம் 10.10.2001 அன்று நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து வருடா வருடம் ஆனி மாதத்தில் அலங்காரத் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. மூலமூர்த்தி - கற்சொரூபம். மடப்பள்ளி - மணிக்கோபுரம், கிணறு, களஞ்சியசாலை, ஒலிபெருக்கி என்பன இத் திருத்தலத்திற்கு உண்டு.

தகவல்

**திரு. கந்தையா சிறீ** - தம்பாலை

# இடைக்காடு அருள்மிகு பெரிய நாச்சியார் தேவஸ்தானம்

இத்தேவஸ்தானம் கிட்டத்தட்ட 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் திரு. குமரேச ரால் தாபிக்கப்பட்டது. பெரிய நாச்சியாரை முதலில் மண்குடிசையில் வைத்து வழிபட்டனர். அதன்பின் 1900ஆம் ஆண்டளவில் சுண்ணாம்புக் கட்டடத்தில் வைத்துப் பூசித்து வந்தனர். இடைக்காடு கண்ணகை அம்பாள் பொங்கல் தினத்திற்கு அடுத்த நாள் இதன் பொங்கல் தினமாகும். அன்று மூன்று வளந்துகள் நேர்ந்து மடைப்பண்டமெடுத்து பொங்கிப் படைக்கப்படுகின்றது. சித்திரா பூரணை அன்று சித்திரைக்கஞ்சியும், தமிழ் வருடப்பிறப்பன்று மருத்துநீரும் மக்களுக்கு வருடாவருடம் வழங்கப்பட்டு வருகின்றது.

1980ஆம் ஆண்டளவில் இக்கோவிலுக்குக் கிணறும் மடைப்பள்ளியும் நிர்மாணிக்கப் பட்டது. தற்சமயம் இத்தேவஸ்தானத்தை திரு. கா. பரநிருபசிங்கம் சிறந்த முறையில் பூசித்தும், பரிபாலித்தும் வருகின்றார்.

தகவல்
**திரு. வ. வெற்றிவேல்** - இடைக்காடு
**திருமதி. வ. .இராஜலட்சுமி** - கொத்தவளவு

# இத்திக்கலட்டி (இலந்தைக் கலட்டி) ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு குடும்பம் பச்சிலைப்பள்ளியிலிருந்து குடிபெயர்ந்து இடைக்காட்டிற்கு மாட்டுவண்டியில் சகல வீட்டுத் தளபாடங்களுடன் வந்ததாகவும், அவ்வண்டியை அங்கிருந்து ஒரு நாய் பின் தொடர்ந்து வந்ததாகவும், இடைக்காடு இத்திக்கலட்டிக்கு வந்ததும் அந்நாய் அங்குள்ள இத்தி மரத்தடியில் தங்கி விட்டதாகவும் கூறுவர். வண்டியில் வந்த குடும்பத்தவர்கள் நாயைத் தங்கள் வீட்டிற்குக் கூட்டிச்செல்ல முயற்சித்தும் பயனளிக்கவில்லை என்றும் இதனால் அக்குடும்பத்தவர்கள் அந்நாயை இத்திமரத்தடியிலேயே வைத்து உணவு கொடுத்துப் பராமரித்து வந்தனர் என்றும், அது வயது முதிர்ந்து இறந்தபின் அவ் இத்தியடியில் திரிசூலமொன்றை நாட்டி வழிபட்டு வந்ததாகவும் ஓர் கர்ண பரம்பரைக் கதை உண்டு. இதன் சரிபிழை ஆராயத் தக்கது.

இத்தலத்தில் இலந்தை மரங்கள் அக்காலத்தில் மலிந்திருந்ததால் இலந்தைக்கலட்டி வைரவர் என்றும் அழைத்து வருகின்றனர். இக் கோவிலை முதலில் வேலுப்பிள்ளை என்பவரும் அதன் பின் நமச்சிவாயம் என்பவரும் பராமரித்து வந்தார்கள் என்று அறியக் கிடக்கின்றது. மூலஸ்தான மண்டபமும், மகா மண்டபமும் கட்டி அதில் வைரவரைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வரப்படுகின்றது. 2002ம் ஆண்டில் மணிக்கோபுரமும்

2003ம் ஆண்டு முன்மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மடைப்பள்ளியும் கிணறும் இத் திருத்தலத்திற்கு உண்டு.

தகவல்

1. **திருமதி. வ. அருளம்மா** - இடைக்காடு
2. **திருமதி. செ. சிவஞானசுந்தரம்** - இடைக்காடு
3. **திரு. வ. வெற்றிவேல்** - இடைக்காடு

# கொட்டடி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

1830ஆம் ஆண்டளவில் இயக்கச்சியில் இருந்து வந்த ஆறுமுகம் சின்னப்புவால் கொட்டடியிலுள்ள பனையடைப்பு மத்தியில் ஒரு அரசமரத்தடியில் திரிசூலம் வைத்து வழிபட்டு வரப்பட்டது. அதன்பின் 1940ம் ஆண்டளவில் மூலஸ்தான அறையில் வைரவரைப் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. வைகாசி சித்திரைப் பொங்கலின் போது மூன்று வளந்து நேர்ந்து பறை ஒலி சகிதம் மடைப்பண்டம் எடுத்து, கோவில் முன்றலில் பொங்கி, மடைபரவிப் படைத்து வெளிமடை எறிவர். இவ் ஆலயத்தின் தென்புறத்தில் மடைப்பள்ளியும் களஞ்சிய அறையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் பொங்கல் திருநாளன்று பல நூற்றுக் கணக்கான பத்தர்கள் பொங்கிப் படைத்து வழிபட்டனர். பிரதி வெள்ளிக்கிழமைதோறும் மாலையில் பஜனையும் பொங்கலும் வெளிமடை எறிதலும் நடைபெற்று வந்தன. பிற்காலத்தில் வருடாந்தப் பொங்கல் தினத்தில் அலங்கார உற்சவமும் வெகுவிமரிசையாக நடைபெற்று வந்தது. இத்திருவிழாவில் 1955ஆம் ஆண்டு அகில உலகப்புகழ் நாதசுரமேதை T. K. இராசரத்தினம்பிள்ளை இந்தியாவில் இருந்து வருகைதந்து இன்னிசைமழை பொழிந்தார். சிகரம், சப்பறம், மின்சாரத்தீப அலங்காரம், மத்தாப்பு, வாணவேடிக்கை போன்றவையும் கோயில் முன்றலில் மேடை அமைத்து தவில் கச்சேரி, வில்லுப்பாட்டு, சதிர்க்கச்சேரி போன்றவையும் நடைபெற்றன. வைரவப் பெருமான் சப்பறத்தில் வீதிவலம் வருவார். இவ்வலங்காரத் திருவிழாவைக்கண்டு களிக்க அயற்கிராமங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான மக்கள் வந்து கூடுவர். கண்டாமணியும் மணிக்கோபுரமும் 1960ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இராணுவ அத்துமீறல் காரணமாக ஊர்மக்கள் இடம்பெயர்ந்தபோது இக்கண்டாமணி காணாமற் போய்விட்டது. 1996ஆம் ஆண்டு ஊர்மக்கள் மீளக்குடியமரவந்தபோது திரு. க. இராசையா தலைமையில் கோவிலைச் சுற்றிவர இருந்த பற்றைகளை வெட்டித்துப்புரவு செய்து பூசைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. 2002ம் ஆண்டு திரு. க. இராசையா பூசகர் தலைமையில் ஒரு பரிபாலனசபை அமைக்கப்பட்டது. அவ்ஆண்டு தொலைந்த கண்டாமணிக்குப் பதிலாகப் புதியதொரு கண்டாமணி கொழும்பிலிருந்து தருவித்து நிறுத்தப்பட்டது. இக்காலகட்டத்தில் புவனேஸ்வரி அம்பாள் அறநெறிப் பாடசாலை வகுப்புக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் திரு ந. கதிரித்தம்பி ஆசிரியர் தலைமையில் இக்கோயில் முன் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. புவனேஸ்வரி அம்பாள் சிறுவர் பாடசாலை வருடாந்த விழா, திருவாசகம் முற்றும் ஓதல் போன்றவையும் இம்மண்டபத்திலேயே நடைபெற்று வருகின்றது. இத் திருத்தலத்தை

விரிவுபடுத்தி அமைக்கும் பொருட்டு 2005ஆம் ஆண்டு தை மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுக் கோவில் திருப்பணி வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

தகவல்

1. திரு. க. இராசையா - இடைக்காடு
2. திரு. ந. பு. கதிரித்தம்பி - இடைக்காடு
3. திரு. வே. சுவாமிநாதன் - இடைக்காடு
4. திரு. த. கதிரமலை - இடைக்காடு

## வளலாய் நாகர் கோயில் பிள்ளையார் என வழங்கும் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம்

முந்நூறு வருடங்களுக்கு முன் இந்தியாவிலுள்ள திருவனந்தபுரத்திற்கு அண்மையிலுள்ள வேளாடு என வரலாறு கூறும் நாகர் கோவிலிலிருந்து ஒரு சித்தரால் கொண்டுவரப்பட்ட முடிப்பிள்ளையார் இத் திருத்தலத்தில் தானே விரும்பி உறைந்துள்ளார். இவ்விநாயகர் ஒடிந்த யானைத் தந்தத்தினை ஒத்த கூம்பு வடிவினர். ஆரம்பத்தில் வளலாயூர் மக்கள் ஓலைக்கொட்டிலிலும், பின் மண் குடிசையிலும் வைத்து வழிபட்டு வந்தனர். அதன் பின் 1920ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்த கர்ப்பக்கிரக, அர்த்தமண்டப, மகாமண்டப, தர்சன மண்டபத் திருப்பணிவேலைகள் பூர்த்தியாகி 1948ஆம் ஆண்டு வைகாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் குடமுழுக்கு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. குடமுழுக்கின்போது ஆதி மூலவரான முடிப்பிள்ளையாருக்குச் சரியான முக்கியத்துவம் கொடுக்காமையால் கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார் விநாயகப் பெருமானால் தண்டிக்கப்பட்டார். தன் தவறை உணர்ந்த சிவாச்சாரியார் மறுநாட் காலை முடிப்பிள்ளையாரை மூலஸ்தானத்தில் உரிய இடமளித்து பூசித்தார். இன்றும் அவ்விதமே பேணப்பட்டு வருகிறது. 1974ல் மீண்டும் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1975இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன்பின் வெளிமண்டபம், சுற்றுமதில், முருகன் ஆலயம், நவக்கிரக நாயகர்கள் ஆலயம், வைரவர் ஆலயம், கண்டாமணி போன்றவை நிர்மாணிக்கப்பட்டு 14.09.1988இல் மகாகும்பாபிஷேகமும், அதைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும், இறுதியில் சங்காபிஷேகமும் நடைபெற்றன.

பத்து நாட்கள் கொண்ட வருடாந்தத் திருவிழா முதலில் வைகாசி மாதத்திலும், பின் ஆனி மாதத்திலும் 1990ஆம் ஆண்டு வரை வெகுவிமரிசையாக நடைபெற்று வந்தன. அதன்பின் உள்நாட்டுப்போர் காரணமாக ஊர்மக்கள் 1990 வைகாசியில் இடம்பெயர்ந்து 1997இல் ஊர்திரும்பியபோது வளலாய் ஊர் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்தது. வீடுகள் யாவும் தரைமட்டமாக்கப்பட்டமையால் மக்கள் அங்கு மீளக்குடியேற முடியவில்லை. விநாயகர் ஆலயத்திற்குப் பாரியசேதம் ஏற்படவில்லை. இதனால் ஊர்மக்கள் விநாயகர் கோவிலுக்குச் சென்று வழிபட்டு உடன் திரும்ப வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் இராணுவ உயர் அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர். இத் திருத்தலம் பழமையும் புதுமையுமானது. யாழ் கச்சேரிக்கோவில் பதிவு இடாப்பில்

இத்திருத்தலத்தின் பெயர் 1872ம், 1882ம், 1892ம் ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதன் தற்போதைய பதிவு இலக்கம் HA/5/JA/81

தகவல்

1. **திரு. தா. கந்தசாமி** - வளலாய்
2. **திரு. க. கதிர்காமு** - வளலாய்
3. **யாழ்க்கச்சேரி ஆவணம்**

## இடைக்காடு ஸ்ரீ பெரிய தம்பிரான் ஆலயம்

காக்கை வளவு என்னும் இடத்தில் கோவில்கொண்டுள்ள ஸ்ரீ பெரியதம்பிரான் ஆலயத்தின் ஆரம்பகாலத்தைச் சரியாக அறியமுடியவில்லை. ஆனால் அக்காலத்தில் அகலமான சுண்ணாம்புச் சுவர்களைக் கொண்ட பழைய கோவில் இருந்ததென்றும், புராணப்படிப்புகள், நித்திய பூசைகள் நடைபெற்றதென்றும் அறியக்கிடக்கின்றது. பல ஆண்டுகளின் பின் அக் கட்டடம் நிர்மூலமானது. 1945ஆம் ஆண்டு சீமேந்தால் இரண்டு மண்டபமும், வெளிக்கொட்டகையும், மடைப்பள்ளியும் நிர்மாணித்து 1946ஆம் ஆண்டு வைகாசி மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1980ஆம் ஆண்டு சந்திரசேகரர், சிவகாமி அம்பாள், பிள்ளையார், கண்ணன், நாகதம்பிரான் வேல்கள், திரிசூலம் போன்ற மூர்த்தங்கள் வழிபாட்டில் இருந்தன. 1977இல் கட்டடம் விரிவுசெய்து கண்டாமணியும் நிறுவப்பட்டது. வருடா வருடம் வைகாசித் திங்களில் சங்காபிஷேகமும், திருவிழாவும், அன்னதானமும், கலைநிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் விமரிசையாக நடைபெற்றன. 1990ஆம் ஆண்டில் நடைபெற்ற இராணுவ அத்துமீறலால் பூசைகளும் விழாக்களும் தடைப்பட்டன. 2001ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து கோவில் பொலிவுடனும், அழகாகவும் நிர்மாணிக்கப்பட்டது. ஒலிபெருக்கியும் பக்தர்களால் உவந்தளிக்கப்பட்டது. 17.05.2002 வெள்ளிக்கிழமை மகாகும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகமும், சங்காபிஷேகமும், அன்னதானமும் நடைபெற்றன. அன்றுதொடக்கம் அந்தணரால் தினமும் காலையிற் பூசை நடைபெற்று வருகின்றது. இத் திருத்தலத்தின் முன்றலில் வில்வ விருட்ஷமும், மேற்குத் திசையில் கொன்றை மரங்களும், வடகிழக்கு மூலையில் இயற்கையாக அமைந்த கிணறும் இக்கோவிலின் சிறப்புக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

தகவல்

**திரு. வே. கந்தசாமி** - தர்மகர்த்தா

நன்றி : **2002ம் ஆண்டு கும்பாபிஷேக மலர்**

## வளலாய் மண்திட்டி ஸ்ரீ ஞானவைரவர் கோயில்

இத்திருக்கோயில் கிட்டத்தட்ட 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு ஆலமரத்தடியில் சூலத்தைப் பிரதிஷ்டை செய்து நாகர் இராமரால் வழிபட்டு வந்ததாக முன்னோர் மூலம் அறியக்கிடக்கின்றது. பங்குனித் திங்கள் இதன் வருடாந்த குளிர்த்தி, பொங்கற் தினமாகும். அன்று வளலாய் கண்டன் கலட்டியிலிருந்து மூன்று வளந்துப் பானைகளுடன், மடைப்பண்டம் எடுத்துச்சென்று மண்திட்டி ஸ்ரீ ஞானவைரவர் கோயில் முன்றலில்

பொங்கிப்படைத்து வழிபட்டனர். இத்திருத்தலம் தற்சமயம் இராணுவ அதியுயர் பாதுகாப்புவலயத்தில் இருப்பதால் பக்தர்கள் அங்குசென்று வழிபடமுடியாத நிலையிலுள்ளனர். இதனால் மேற்படி ஞானவைரவரை வளலாய் கண்டன் கலட்டியில் பிரதிஷ்டை செய்து 2004 ஆம் ஆண்டு தைப்பூசம் தொடக்கம் வழிபட்டு வருகின்றனர்.

தகவல்

**திரு. சின்னத்தம்பி கந்தசாமி** - வளலாய்.

## வளலாய் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்

இத்திருத்தலம் மலட்டன் கலட்டியில் வேப்பமரத்தடியில் திருபண்டாரம் என்பவரால் 1860ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. அதன்பின் ஆள்வார் நாகர் அதைப் பராமரித்து வந்தார். 1964ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் சீமேந்தால் கோவில் கட்டி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. வைகாசிப் பறுவம் இதன் பொங்கல்தின மாகும். அதன்பின் நடைபெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக கோயிற் கட்டடம் சேதமடைந்தது. இக் கட்டடத்தைப் புனருத்தாரணம் செய்வதற்காக 11 அங்கத்தவர்களைக் கொண்ட திருப்பணிச் சபை செ. உருத்திரையா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2001ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திருத்தலத்தருகில் சனசமூக நிலையமும், சிறுவர் முன்பள்ளியும் அமைந்துள்ளன.

தகவல்

1. **திரு. செ. உருத்திரையா** - வளலாய்.
2. **திரு. மா. சிவகுரு** - வளலாய்.

## வளலாய் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்

இவ் ஆலயம் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொ. சாமிவேலுவின் மூதாதையரால் ஆரம்பிக்கப்பட்டதென்றும், முதலில் வேப்பமரத்தடியில் திரிசூலத்தை வைத்து வழிபட்டார்களென்றும், அதன் பின்பு ஓலைக்கொட்டிலில் வைத்துப் பராமரித்தார்களென்றும், 1945ஆம் ஆண்டளவில் சீமேந்துக் கட்டடத்தில் வைரவர் மூர்த்தத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகிறார்கள் என்றும் அறியக்கிடக்கின்றது.

இவ்வாலயம் யாழ்கச்சேரியில் 1999ஆம் ஆண்டு பதியப்பட்டுள்ளது. பதிவிலக்கம் HA/5/JA/740 வருடா வருடம் பங்குனி உத்தரத்தில் பொங்கலும் குளிர்த்தியும் நடைபெற்று வருகின்றது. இவ் ஆலயத்தை 1985ஆம் ஆண்டு தொடக்கம் 9 அங்கத்தவர்களைக் கொண்ட பரிபாலனசபை நிர்வகித்து வருகின்றது. இப்பரிபாலனசபைத் தேர்தல் வருடாவருடம் நடைபெறுகின்றது. இக் கோவிலுக்கெனக் குழாய்க்கிணறும் உண்டு.

தகவல்

**திரு. பொ. சாமிவேல்** - வளலாய்

# அருள்மிகு ஸ்ரீ காளி தேவி ஆலயம் இடைக்காடு

இவ் ஆலயம் 1835ஆம் ஆண்டளவில் தம்பர் நல்லதம்பிச் சாத்திரியாராலும் அவர் மனைவி வல்லாத்தையாலும் சத்திரங்காய் எனும் இடத்தில் தாபிக்கப்பட்டதென அறியக் கிடக்கின்றது. இவர்களைத் தொடர்ந்து இவர்களின் சந்ததியினரான சி. ஆறுமுகம், ஆ. சின்னப்பு, ச. நல்லதம்பி ஆகியோரால் பூசிக்கப்பட்டுத் தற்சமயம் சி. சத்தியமூர்த்தியால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இக்கோயில் புனரமைக்கப்பட்டு 1960ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தன்று மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இதுவே இக்கோயிலின் வருடாந்த அபிஷேக தினமாகும்.

இக்கோவிலின் ஸ்தாபகர் சோதிடத்தில் வல்லுநர் கடிகாரமில்லாத அக்காலத்தில் சரியான நேரத்தை அறிந்து சாதகத்தைக் கணிக்கக் கூடியவர். பகலில் நிழலைக் காலடியால் அளந்தும், இரவில் நட்சத்திரங்கள் மூலமும், வெட்டிய வாழைக் குருத்தின் வளர்ச்சியைக் கொண்டும் நேரத்தைத் துல்லியமாகக் கணிக்கக்கூடிய திறன் பெற்றவர். இவரின் திறமையைப் பரிசோதிக்க எண்ணிய ஒருவர் தன் வீட்டில் நிகழ்ந்த பிறப்பு நிகழ்ச்சியின்போது தன் நிழலைக்கால் அடியால் அளந்த தொகையை நல்லதம்பிச் சாத்திரியாரிடம் கூறி, பிறந்த பிள்ளையின் சாதகத்தைக் கணித்துத் தரும்படி கேட்டார். அப்பொழுது தன் தோட்டத்தில் புல் பிடுங்கிக் கொண்டிருந்த சாத்திரியார் உடன் ஒரு குச்சியை எடுத்து நிலத்தில் எழுதிச் சாதகத்தைக் கணித்தார். அதன்பின் அவர் கூறியதாவது "எமது ஊர் எல்லைக்குள் இவ்வுயிரின் ஜனன நேரத்தில் மானிடப் பிறப்புக்கு எதுவித சாத்தியமும் இல்லை. இந் நேரத்தில் நாலுகால் மிருகம் பிறப்பதற்குச் சாத்தியக் கூறு உண்டு. அநேகமாக நாலு கால் வளர்ப்பு மிருகத்தின் பிறப்பிற்குச் சாத்தியக்கூறு உண்டு என்றார். இவரின் சோதிடத்திறமையைச் சோதிக்க வந்தவர் அவரின் காலடியில் விழுந்து தன்னை மன்னிக்கும் படி கேட்டார். அந்த நேரத்தில் தன் வீட்டில் ஒரு ஆடு குட்டி ஈன்றதெனக் கூறினார். இக்காலத்தில் நவீன விஞ்ஞான உபகரணங்களின் உதவியுடன் சாதகத்தைக் கணித்துப் பலன் சொல்லும் சோதிடர்களிடம் பிறந்த பிள்ளை ஆணா? பெண்ணா? என்று கேட்டு அறியமுடியாதிருக்கும் நாமெங்கே? எதுவித வசதிகளும் இல்லாமல் நேரமறியக் கடிகாரம், பஞ்சாங்கம், கொப்பி, பேனை எதுவுமில்லாமல் நிலத்தில் தடியால் எழுதிக் கணித்துச் சரியாகப் பலன் கூறும் அக்காலச் சோதிடர்கள் எங்கே? பூசகர்கள் எங்கே? இவர்கள் சாதாரண மானிடர்களல்லர். இறையருள் பெற்ற மகாத்மாக்களே.

தகவல்

1. **திரு. சி. சத்தியமூர்த்தி** - இடைக்காடு
2. **திரு. க.மு. வேலுப்பிள்ளை** - இடைக்காடு
3. **திரு. நல்லதம்பி ஸ்ரீநிவாசன்** - இடைக்காடு

# இடைக்காடு ஸ்ரீ சோதி வைரவர் ஆலயம்

1925ஆம் ஆண்டளவில் ஆறுமுகம் குடும்பத்தினரால் அவர்களது காணியிலுள்ள வேப்பமரத்தடியில் திரிசூலம் வைத்து வணங்கப்பட்டு வந்தது. அதன்பின் வீதி அருகாமை யிலுள்ள வேப்பமரத்தின் கிழக்கு நோக்கிச் சென்ற கிளையை முகட்டு வளையாகப் பாவித்து ஓலைக்கொட்டில் அமைத்து அதில் திரிசூலத்தை வைத்து வழிபட்டு வந்தனர். 1955ஆம் ஆண்டளவில் சீமேந்துக் கட்டடத்தில் மூலவரைப் பிரதிஷ்டை செய்து வைகாசி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதுவே வருடாந்தப் பொங்கல் திருக்குளிர்த்தித் தினமாகும். இத்திருத்தலத்தின் அருகில் வசிப்பவர்கள் காலை, மாலை விளக்கேற்றி வழிபட்டு வருகின்றனர். விசேட தினங்களில் அந்தணர்களால் பூசை வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது. 1970ஆம் ஆண்டளவில் சிறியமணி ஒன்று 15 அடி உயரமான தூணில் அமைக்கப்பட்டது. அது 1990ஆம் ஆண்டில் இடம்பெயர்வின் போது காணாமற்போய் 1996ஆம் ஆண்டில் ஊர்மக்களது பங்களிப்பு மூலம் மீண்டும் மணி அமைக்கப்பட்டது. வீதி ஓரத்தில் அமைந்துள்ள இவ்வாலயத்தை மேலும் விஸ்தரிப் பதற்காகக் கோவிலின் வடக்குப் பக்கத்திலுள்ள திரு. தாமோதரம்பிள்ளையின் இரண்டு பரப்பு 5 குளி அளவு காணி சாசன மூலம் அறுதியாகப் பெறப்பட்டுள்ளது. இக்காணியில் 1985ஆம் ஆண்டளவில் கிணறு வெட்டிக் கோவில் பாவனைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு (2005) இக்காணியில் மடைப்பள்ளியும், மண்டபமும் கட்டுவதற் குரிய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கான திருப்பணி நிதி கனடா, சுவிஸ் போன்ற வெளிநாடுகளிலுள்ள இக்கோயில் சுற்றாடலிலுள்ள பக்தர்களிடம் பெறப்பட்டுள்ளது.

தகவல்

1. **திரு. கி. ஜெயகுமரபதி** - இடைக்காடு
2. **திருமதி. கி. நல்லம்மா** - இடைக்காடு

# நீர்ப்பெட்டி ஸ்ரீ வேலாயுதசுவாமி கோவில்

இம் முருகன் தலம் கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு முன் ஆண்டி நினவான் என்பவரால் ஒரு கொன்றை மரத்தடியில் வேலாயுதத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டதோடு தோன்றியதாகச் செவிவழிச் செய்தியாக அறியக்கிடக்கின்றது. இத்தலம் தொண்டைமானாறு - பலாலி வீதியில், நீர்ப்பெட்டி மடத்தின் வடபாகத்தில் கடற்கரை யோரமாக அமைந்துள்ளது. சிறிது காலத்தின் பின் ஓலைக்கொட்டிலில் வேலாயுதத்தை வைத்து வழிபட்டு வந்தனர். 1940ஆம் ஆண்டளவில் பிரித்தானிய இராணுவம் தம் பாதுகாப்புக் காரணம் கருதி இக்கொட்டிலை எரியூட்டினர். இதனால் இத்தலத்திற்கு **எரிஞ்ச கந்தன்** என்ற நாமமும் வழங்கப்பட்டு வருகிறது.

பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள நீர்ப்பெட்டி மடம் யாழ் கச்சேரி பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட புராதன மடங்களில் ஒன்றாகும். இங்கு நன்னீரூற்றுக் கிணறு, அதன்

துலா, வாளி, ஆவுரிஞ்சிக்கல், சுமைதாங்கி போன்றவை பாரிய ஆலவிருட்சத்தின் கீழ் அமைந்துள்ளன.

இரண்டாம் உலகமகா யுத்தக் காலத்தில் வளலாய் கூனங்காட்டுச் சுடலையிலிருந்து பலாலி வரையுமுள்ள கடற்கரைப் பகுதியில் பிரித்தானிய இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. அக்கட்டடங்களின் இடிபாடுகளை இன்றும் காணக்கூடியதாக இருக் கின்றது.

வேலாயுத சுவாமிக்கு 1973ஆம் ஆண்டு சீமெந்தால் கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடைபெற்றது. தினமும் வேலாயுதனாருக்கு அபிஷேகமும் பூசையும் சிறப்பாக நடைபெற்று வந்தன. தற்சமயம் இக்கோயில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலையத்திற்குள் அமைந்திருப்பதால் இங்கு பொதுமக்கள் சென்று வழிபடமுடியாத நிலையில் உள்ளது.

தகவல்

**திரு. ப. பழனிவேல்** - வளலாய்.

# கோணாவளை அன்னைமார் நாச்சிமார் ஆலயம் இடைக்காடு

இத்தலம் தொண்டைமானாறு பலாலி வீதி ஓரத்திலுள்ள கோணா வளையில் அமைந்துள்ளது. இது எப்பொழுது? யாரால்? நிறுவப்பட்டதென்று அறியமுடியவில்லை. ஆனால் இது ஒரு பூர்வீகமான தலம் என்பதை அரசசாசனம் எடுத்தியம்புகிறது. இத்தலத்தைச் சிலர் அன்னைமார் நாச்சிமார் ஆலயம் என்றும், சிலர் மடாலயம் என்றும், சிலர் வேதாரணிய மடமென்றும் அழைத்து வருகின்றனர். ஆனால் இத்தலம் கோணாவளை வேதாரணிய மடம் என்ற பெயரில் யாழ்க்கச்சேரி கோவில்கள், மடங்கள் பதிவு இடாப்பில் இடம்பெற்றுள்ளது. 1872ஆம், 1882ஆம், 1892ஆம் ஆண்டுகளில் இதன் பெயர் பதிவில் உள்ளது. அக்காலத்தில் வாழ்ந்த எமது கிராம மக்கள் தென் இந்தியாவிலுள்ள சிதம்பரம், வேதாரணியம் (திருமறைக்காடு) போன்ற ஆலயங்களுக்கு இங்குள்ள தமது பூமிகளைத் தானம் (பூதானம்) செய்துள்ளனர். யாழ் குடாநாட்டிற்கு மிக அண்மையிலுள்ள இந்தியத் திருத்தலம் வேதாரணியமாகும் (21 மைல்) திருநாவுக்கரசு நாயனாரும், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் வேதங்களால் பூட்டப்பட்ட இத்திருத்தலத்தின் கதவுகளைத் திறக்கவும் பூட்டவும் தேவாரம் பாடிய திருத்தலம் இதுவே. கோளறு பதிகமும் சம்பந்தரால் இத்தலத்திலேயே பாடப்பெற்றது. அக்கால மக்கள் கடவுச்சீட்டு, விசா எதுவுமின்றி அடிக்கடி தோணி மூலமும், பாய்க்கப்பல்கள் மூலமும் இந்தியாசென்று திரும்புவது வழக்கம். கோணாவளையில் அமைந்துள்ள இம் மடாலயத்தின் இடிபாடுகளுடனான கட்டடம், கட்டுக்குளம், பெரிய இத்தி, மருத விருட்சங்கள், சுமைதாங்கி, ஆவுரிஞ்சுக்கல் என்பன இன்றும் உள்ளன. முற்காலத்தில் கால்நடையாகவும், மாட்டு வண்டி மூலமுமே பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதனால் இவ்வீதியாற் செல்லும் பிரயாணிகள் தம் தலைச்சுமைகளைச் சுமைதாங்கியில் இறக்கிவைத்துச் சிரமபரிகாரம் செய்து மீண்டும் தம் பிரயாணத்தைத் தொடர்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இத்திருத்தலம். அது

மாத்திரமல்லாது அயலிலுள்ள புற்தரைகளில் மேயும் மந்தைகளும் இத்தலத்திற்கு வந்து குளத்தில் நீர் அருந்தி, ஆவுரிஞ்சுகல்லில் தம் உடலை உரஞ்சித்தினவு நீக்கி மரநிழலில்படுத்துச் செல்லக்கூடிய முறையிலும் இங்கு அமைந்துள்ளமை நமது மக்களின் ஜீவ காருண்ணியத்தைப் பறைசாற்றுவதாகும்.

இத்தலத்தை அன்னைமார், நாச்சிமார் ஆலயமாகக் கருதுபவர்கள் இதற்கு விஷேட பொங்கல் செய்து வழிபட்டு வந்துள்ளனர். இவைகளைத் தம் காவற் தெய்வங்களாகக் கருதினர். இவை ஆசூசம் தாங்காதவையென்றும் குறிப்பாக மாதவிலக்குக் காலத்தில் இவ் ஆலயமருகில் சென்ற பெண்களைத் துன்புறுத்தினதாகவும் அவைக்குப் பொங்கல் செய்து வழிபட அத்துன்பம் நீங்கியதாகவும் கூறுவர். இவை பெண்தேவதைகள் என்றும் தூய வெள்ளை உடைஉடுத்துச் சிறு கூட்டங்களாக இரவில் நடமாடுவதைத் தம் மாட்டுத்தொழுவம், தொட்டில், குடில், அட்டாளைகளிலிருந்து தாம் கண்டதாகவும் அக்காலத்தில் மந்தை மேய்த்தோர் மூலம் அறியக்கிடக்கின்றது. இத்தலம் தற்சமயம் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலையத்தில் இருக்கின்றது. பொதுமக்கள் அங்கு செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்திருத்தலத்தைப் பற்றி மேலும் ஆராய்ந்து எமது வருங்காலச் சந்ததியினருக்கு அறியத்தருவது எமது தலையாய கடமையாகும்.

தகவல்

1. **திருமதி. வ. சி. சின்னாச்சிப்பிள்ளை** - இடைக்காடு
2. **திரு. க. மு. வேலுப்பிள்ளை** - இடைக்காடு
3. **திரு. செ. இரத்தினசபாபதி** - இடைக்காடு
4. **திருமதி இ. நல்லம்மா** - இடைக்காடு
5. யாழ் கச்சேரி கோவில் மடப்பதிவு இடாப்பு

## வடகாட்டுப் புதுச் சந்நிதி ஆலயம்

இத்திருத்தலம் தொண்டைமானாறு - பலாலி வீதியில் இருந்து வடக்குப் பக்கமாகக் கிட்டத்தட்ட அரைமைல் தொலைவில் பாக்கு நீரிணைக் கடற்கரையோரமாகப் பருத்திக் காட்டிற்கு வட கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. இக்கோவில் உடுப்பிட்டி ஊர் மக்களின் ஒரு பிரிவினரால் 1925ஆம் ஆண்டளவில் அடைவுக்காரச் செல்லையாவின் தென்னந்தோப்பில் மூலஸ்தானமும், மகாமண்டபமும் கொண்ட சுண்ணாம்புக் கட்டடத்தில் ஞானவேல் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததோடு தோன்றியதாக அறியக் கிடக்கின்றது.

நித்திய நைமித்திய பூசைகளும், விழாக்களும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தைப் போல் அல்லாமல் வேதாகம முறைப்படி நடைபெற்று வந்ததாகவும், வருடாந்த அலங்காரத் திருவிழாக்கள் வெகுவிமர்சையாக நடைபெற்றதெனவும் அறியக்கிடக்கின்றது. தவில், நாதசுரக்கச்சேரி, சதிர்க் கச்சேரி, சிகரம், சப்பறம், மின்சாரத் தீப அலங்காரம், வாணவேடிக்கைகள் நடைபெற்றதாகவும் அறியக் கிடக்கின்றது. வேலாயுதனாரை இரதத்தில் அமர்த்திச் சோடிக்குதிரைகள் பூட்டி வீதிவலம் வந்தனர் என்றும், இவ் அலங்காரத்

திருவிழாக்களை அயற்கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் சென்று கண்டுகளித்தனர் என்றும் தெரியவருகின்றது. கோவிலுக்குரிய மண்நிறக் குதிரைகள் சாங்காணிப்புற்தரவையில் மேய்ந்ததாக இடைக்காட்டு மக்கள் கூறுவர். இத்திருக்கோவிலை ஸ்தாபித்தவர்கள் காலமான பின் பூசைகளும், விழாக்களும் ஸ்தம்பித்தன. இக்கோவிலின் கட்டடம் சிறிது இடிபாடுகளுடன் இன்றும் காணப்படுகின்றது. தற்சமயம் இது இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளது. இடைக்காடு கிராம வட்டார எல்லைக்கு (4ம் வட்டாரம்) அடங்கிய திருத்தலங்களில் இதுவும் ஒன்றாகும். இது பற்றிய சரியான பூரண தகவல்களை உடுப்பிட்டி, தொண்டைமானாறு கெருடாவில் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மூதாதையர்களிடமிருந்து அறியக்கூடியதாய் இருக்கும்.

தகவல்

**திரு. து. பாலசுப்பிரமணியம்** - தொண்டைமானாறு
**திரு சி. சிவானந்தம்** - கெருடாவில்
**திரு. பொ. செல்லத்துரை** - புதியபூமி, இடைக்காடு

# அருள்மிகு காசி விஸ்வநாதர் ஆலயம் (முன்னீஸ்வரர் ஆலயம்)

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் இக்கோவில் வல்லிபுரம். அருணாசலத்தாரால் காசியிலிருந்து பெறப்பட்ட ஒரு இலிங்கம் ஓலைக்கொட்டிலொன்றில் வைத்து வழிபடப் பட்டு வந்தது. இவ் அருணாசலப் பெரியார் சோதிடம், குறி, கைரேகை, அருள்வாக்குக் கூறுவதில் நிபுணர். இதனால் அவர் பெயர் யாழ் குடாநாட்டில் பிரபலமடைந்திருந்தது. இவர் ஊர் ஊராகச்சென்று இத்தெய்வீகச்சேவையை எதுவித பிரதிபலனும் கருதாமற் செய்து வந்தார். இவர் ஒருமுறை மல்லாகம், அளவெட்டிப் பக்கம் சென்றபோது இவரின் தெய்வீகத் தன்மையை அறிந்த ஓர் கிறீஸ்தவச் செல்வந்தர் (இவரின் பெயர் அறிய முடியவில்லை) தனக்குப் பத்து வருடங்களாகப் பிள்ளைச் செல்வம் கிடைக்கவில்லை என்றும் பிள்ளைப்பலன் தமக்கு உண்டா? என்றும் வினயமாக வினாவினார். அவரின் முகத்தைச் சிறிது நேரம் உற்று நோக்கிய பின் "உமது தந்தையார் ஒரு இந்து அல்லவா? நீர் அரச பதவிக்காகவல்லவா கிறீஸ்தவ சமயத்திற்கு மாறினீர்? நான் தரும் விபூதியை அணிந்து வந்தால் வெகுவிரைவில் ஓர் ஆண்மகவு கிடைக்கும்" என்று கூறித் தன் சம்புடத்திலிருந்து விபூதியை எடுத்துக் கணவன், மனைவி இருவரிடமும் கொடுத்தார். அதை அவர்கள் பயபக்தியுடன் வாங்கித் தம் நெற்றியில் தரித்தனர்.

இந் நிகழ்ச்சி நடந்து ஒரு வருடத்தின் பின் அச் செல்வந்தர் இடைக்காட்டிற்கு மாட்டுவண்டியில் வந்து காசிவிசுவநாதரையும், அருணாசலப் பெரியாரையும் வணங்கி தமக்கு ஒரு ஆண்மகவு பிறந்ததாகக் கூறி, இக்கோவிலின் திருப்பணிக்காகப் பெருந்தொகை நிதியையும் கொடுத்தனர். அப்பணத்தைப் பெற்ற அருணாசலப் பெரியார் உடன் சுண்ணாம்பால் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பவற்றை நிறுவி காசிவிசுவநாதப் பெருமானை ஒரு பெரிய ஆவுடையாரில் பிரதிஷ்டை செய்து வெகு விமரிசையாக மகாகும்பாபிஷேகம் நடத்தினார். அருணாசலப் பெரியார் பிரதி

வெள்ளிக்கிழமை தோறும் செல்வச்சந்நிதி முருகன் தலம் சென்று அங்குவரும் அடியார்களுக்கு அருளாசியும், வாக்கும் கூறி வந்தார். தமது 80ஆவது வயதில் இறையடி சேர்ந்தார். அதன் பின் அவர் மகன் அ. வல்லிபுரம் இத்திருத்தலத்தை நிர்வகித்தும் பூசித்தும் வந்தார். அதன்பின் க. அருணாசலம் அச்சேவையைப் பின் தொடர்ந்தார். அவர் ஒரு அரசாங்க ஊழியராய் இருந்தமையால் இடமாற்றலாகச் செல்ல வேண்டிய கட்டத்தில் அந்தணர் மூலம் பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. இராணுவ அத்துமீறல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து மீள்குடி ஏறிய பின் அயலில் உள்ளவர்கள் இத்தலத்தைப் பராமரித்தும், பூசித்தும் வருகின்றனர். அச்சுவேலிக்கோவில் பற்றில் இதுவே முதற் புராதன சிவன் ஆலயமாகும். இத்தலத்தின் வடபால் அமைந்துள்ள நல்நீரூற்றுக்குளமும், ஆவுரிஞ்சிக்கல்லும், அரசமரங்களும் புராதனமானவை.

அயலிலுள்ள புற்தரவைகளில் மேய்ந்த மந்தைகள் வந்து இக்குளத்தில் நீர் அருந்தி ஆவுரிஞ்சிக் கல்லில் தமது உடலை உரஞ்சித்தினவு நீக்கி மரநிழலில் படுத்துச் செல்லும். இவ் அமைப்பு எமது அக்கால மக்களின் ஜீவகாருண்ணியத்தைப் பறைசாற்றுவ தாகும். திருவெம்பாவைப் பூசைகளும், ஆனி உத்தர விழாவும் இத் தலத்தில் வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது. இக்கோயிலின் வடகிழக்குத் திசையில் 1980இல் ஒரு நல் நீர்க்கிணறு ஓர் அன்பரால் வெட்டிக் கட்டப்பட்டது. 1985ஆம் ஆண்டு நிருத்த மண்டபம் சூறையாடப்பட்டது. இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன் சுண்ணாம்பால் கட்டப்பட்ட இத்திருத்தலம் உடைந்து விழக்கூடிய மிகவும் **அபாயகரமான நிலையில் உள்ளது. வெகுவிரைவில் புனருத்தாரணம் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.**

தகவல்

1. **திரு. க. அருணாசலம்** - இடைக்காடு
2. **திரு. வை. தம்பு** - இடைக்காடு
3. **திரு. வே. சுவாமிநாதன்** - இடைக்காடு
4. **திருமதி. பொ. மகாதேவா** - இடைக்காடு

## அருள்மிகு மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தானம் இடைக்காடு

இக்கோவிலின் ஆரம்ப காலத்தைச் சரியாக அறியமுடியவில்லை. இடைக்காட்டைச் சேர்ந்த சந்திரவர் தம்பையா என்ற அருளாளர் கதிர்காமக் கந்தனை வழிபடக் கால்நடையாகச் சென்று கதிர்காமத்தை அடைந்து, மாணிக்க கங்கையில் நீராடிய போது அவர் அருகில் நீராடிக் கொண்டிருந்த ஒரு தபோதனர் கையில் மூர்த்தமொன்று திருவருளால் கிடைக்கப் பெற்றது. அத்தபோதனர் அம் மூர்த்தத்தைச் சந்திரவர் தம்பையா கையிற் கொடுத்து இதை உங்கள் ஊருக்கு எடுத்துச்சென்று கோவில் கட்டி அதை மாணிக்கப்பிள்ளையாராக வழிபடும்படி கூறினார். தம்பையாவும் அம்மாணிக்கப் பிள்ளையாரை இடைக்காட்டிற்குக் கொண்டுவந்து தனது சொந்தக் காணியில் தென்னோலைக் கொட்டில் அமைத்து அதில் வைத்துப் பயபத்தியுடன் பூசித்து வந்தார். தம்பையர் சிவபதமடைந்ததும் அவர் சகோதரரான சந்திரவர் செல்லர் தொடர்ந்து பூசை

தம்பையர் சிவபதமடைந்ததும் அவர் சகோதரரான சந்திரவர் செல்லர் தொடர்ந்து பூசை வழிபாடுகளை நடாத்தி வந்தார். இவர் காலத்தில் சுண்ணாம்புக் கட்டடம் அமைத்து அதில் பிள்ளையாரை வைத்துப் பூசைகள் நடைபெற்று வந்தன. செல்லர் என்று பலராலும் பயபக்தியுடன் அழைக்கப்படும் இவ் அருளாளர் உரு ஆடி நினைத்த காரியம், அருள்வாக்குக் கூறுவதில் வல்லவர். இதை அறிந்த பல ஊர் மக்களும் இவரை நாடி வந்து தம் துன்பங்களைத் தீர்த்துக் கொண்டனர். இவர் காலத்தில் வருடா வருடம் தீமிதிப்புவைபவம் நடைபெற்று வந்தது. அதில் ஒரு சில இளைஞர்களையும் தீமிதிக்க வைத்தார். இவ் அருளாளர் தன் 75ஆவது வயதில் இறையடி சேர்ந்ததும் பூசை வழிபாடுகளைச் செய்வதற்குப் பிராமணோத்தமர்கள் நியமிக்கப்பட்டனர். இக் காலத்தில் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம் போன்றவற்றை நிர்மாணித்து கிணறு, மடைப்பள்ளியைப் புனரமைத்து மின்சார இணைப்பைப் பெற்று மூலஸ்தானத்தில் ஆதி மூர்த்தியையும், பிரதிஷ்டா மூர்த்தியையும் சமமாக வைத்து 13.10.1988இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1991ஆம் ஆண்டு இராணுவ அத்துமீறல் காரணமாக ஊர்மக்கள் இடம்பெயர்ந்து பின் 1996ஆம் ஆண்டு மீளக்குடி அமர்ந்தனர். இத்திருத்தலத்தைச் சுற்றி உள்ள பகுதிகளில் மிதிவெடிகள் அனேகம் இருந்தமையால் பல ஆடு மாடுகள் அவற்றில் அகப்பட்டு இறந்தன. இதனால் மக்கள் இக்கோவிலுக்குச் செல்ல அஞ்சினர். அதன் பின் மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு 2003ஆம் ஆண்டு ஆவணி மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2005ஆம் ஆண்டு தை மாதம் மணிக்கோபுரம் அமைக்கப்பட்டது. ஆனிமாத உத்தர விழா இன்றும் இங்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. வினாயகர் எழுந்தருளி விக்கிரகம், மூஷிகவாகனம், சகடை போன்றவை அடியார்களால் உவந்தளிக்கப்பட்டன.

தகவல்
**திரு. க. பாலசுப்பிரமணியம்** - இடைக்காடு
**திரு. வே. சுவாமிநாதன்** - இடைக்காடு
மேற்படி ஆலய கும்பாபிஷேகச் சிறப்பு மலர்
13.10.1988.

## வளலாய் பெரிய நாகதம்பிரான் ஆலயம்

தமிழர்களின் வரலாற்றில் கோவில்களும், குளங்களும் இணைந்துள்ளன. ஐரோப்பியரின் வருகையின் பின்னரே கிணறுகள் தோண்டுதல் ஆரம்பமாயின. அதற்கு முன் குளங்களை வெட்டியே நீரைப் பயன்படுத்தினர். சோழப்பேரரசு காலத்தில் அதன் படைத்தளபதியாக ஈழம் வந்த **குமைச்சன்** என்பவன் வளலாயின் இயற்கையான நல்ல மண் நீர்வளத்தால் கவரப்பட்டுக் குளங்களை வெட்டினான். அம்மண்ணில் உருவான பிட்டியில் (மேட்டுநிலம்) பெரியநாகதம்பிரான் ஆலயத்தை நிறுவினான் என்றும், விவசாயத்திற்கென மேலும் பல குளங்களை வெட்டுவித்து மேட்டு நிலங்களில் குடியிருப்புக்களை அமைத்தான் என்றும் செவிவழி வந்த செய்தியால் அறியக்கிடக்கின்றது. அச்சோழத் தளபதி வெட்டுவித்த குளத்திற்கு குமைச்சன் கேணி என்று இன்றும் வழங்கப்பட்டு வருகின்றது. இக்குளத்திற்கும்

பெரிய குளத்திற்கும் மத்தியிலேயே பெரியநாக தம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது. எனவே இக்கோவிலின் ஆரம்பகாலம் சோழர்களின் ஈழஆட்சிக் காலமெனக் கருதப்படுகின்றது. இத் திருத்தலத்தைச் சூழ வயல்களும், தோட்டங்களும், குளங்களும் அமைந்திருந்தமையால் விவசாயிகள் இத் திருத்தலத்திலிருந்து அருளாட்சி செய்யும் பெரிய நாகதம்பிரானைத் தம் குலதெய்வமாகவும், காவற் தெய்வமாகவும் கருதிப் போற்றி, பூசித்து, வழிபட்டு வருகின்றனர். நெல் அறுவடையின்போது இவர்கள் புதிய நெல்லிற் குற்றிய அரிசியினால் பொங்கிப் படைத்து வழிபட்டு இறையருள் பெறுகின்றனர்.

இத்திருத்தலம் ஆரம்ப காலத்தில் மண்சுவர் வைத்து ஓலையினால் வேயப்பட்டு வந்துள்ளது. சிறிது காலத்தின் பின் சுண்ணாம்பால் கட்டப்பட்டு ஓடுவேய்ந்து பராமரித்து வந்துள்ளனர். அயலிலுள்ள மக்களே இதற்குத் தூப, தீபம் காட்டி வழிபட்டு வருகின்றனர். பூசகரும், வழிபடுவோரும் பலமுறை நாகபாம்பு ஒன்றை மூலஸ்தானத்தில் கண்டதாக அறியக் கிடக்கின்றது.

இத் திருத்தலத்தின் தென்திசையிலுள்ள கிணற்றிலிருந்து சூத்திரவாளி மூலம் 1930ஆம் ஆண்டு முத்துப்பிள்ளை மாணிக்கம் என்பவரால் நீர்பாய்ச்சி விவசாயம் செய்யப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இன்றும் அச்சூத்திர வாளிகளை அக்கிணற்றினுள் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ் ஆலயத்தின் வடதிசையிலுள்ள சல்லி கலட்டிக் கிணற்றிலிருந்து 1950ஆம் ஆண்டளவில் முதல் முதலாக நீர் இறைக்கும் யந்திரமூலம் (மண்ணெண்ணெய்) குமரேசர் செல்லத்துரை என்பவரால் நீர்ப்பாய்ச்சி விவசாயம் செய்யப்பட்டமை நாம் அறிந்த விடயமாகும்.

கொற்றன் பாண்டியன்பிட்டி எச்சாட்டி போன்ற நிலங்கள் அக்காலத்தில் கடல்நிலை கொண்ட பிரதேசமெனக் கணிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந் நிலங்களில் ஊரி, சிப்பி, சோகி, சங்கு முருகைக் கற்கள் போன்றவை இன்றும் காணக்கூடியதாய் இருக்கின்றது.

1990ல் ஏற்பட்ட இடம் பெயர்வு காரணமாக பெரிய நாகதம்பிரான் ஆலயம் முற்றும் சேதமடைந்துள்ளது. இத்திருத்தலத்தைப் புனருத்தாரணம் செய்ய 2003ஆம் ஆண்டு இந்துகலாசார அமைச்சில் நிதிஉதவி பெற்றும், பொதுமக்களின் நன்கொடை மூலமாகவும் திருப்பணி வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது. வெளிநாட்டில் வசிக்கும் வளலாய் மக்களின் தாராளமான நிதியுடன் மூலஸ்தான மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றின் திருப்பணிகள் நிறைவுற்றுள்ளன. பண்டிகைச் சிற்பங்கள், மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகள் வடிக்கப்பட்டுவிட்டன. மூலமூர்த்தியாகிய சிவலிங்கம் நாகபாம்பின் தழுவலுடன் அமைக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் மகா கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல பெரிய நாகதம்பிரான் அருள்பாலிப்பாராக.

தகவல்

1. **திரு. த. கந்தசாமி** - வளலாய்
2. **திரு. க. கதிர்காமு** - வளலாய்
3. **திரு. வே. சுவாமிநாதன்** - இடைக்காடு

# இடைக்காட்டு வள்ளிப்பிள்ளையின் அற்புதக் கதிர்காம யாத்திரை

பழமையும் புதுமையும் மிக்க கதிர்காமக் கந்தன் பல்வேறு அற்புதங்களின் நாயகன். கதிர்காம உற்சவம் கொடியேற்றம் என்றால் ஏதாவது ஒரு அற்புதம் நிகழ்வது அன்றைய மரபு.

"சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று ஔவையைத் திணறடித்த முருகன் செய்த அற்புதங்களுக்கோ எல்லையில்லை.

முன்னைய காலங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் கதிர்காமக் கொடியேற்றம் என்றால் வில் வண்டில்கள் பூட்டியும் கால் நடையாகவும் சாரிசாரியாகக் கந்தன் தரிசனத்துக்குச் செல்வர். அப்போதெல்லாம் அவன் அடியார் முன் "தோன்றி" அவர்கள் குறை தீர்த்தருள்வான்.

அந்தக் கதிர்காமக் கந்தனின் அற்புதச் செயல்களில் ஒன்றுதான், இந்த வள்ளிப்பிள்ளையின் கதை. இது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் **இடைக்காட்டில்** இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

## பலாக்கனியைக் கவர்ந்திழுத்த கதிர்காமக் கந்தன்

"மிளகாய்ப்பழமும் சிலிர்த்துப் போய்விட்டது. ஆய ஆட்களில்லை, கூலிக்காரரைக் கேட்டால் நேரமில்லை என்று சொல்லுராங்கள்; உவங்களைப் பாக்கேலாது. நாங்கள்தான் ஆயவேண்டும். நானும் மூத்தவனும் முன்னுக்குப்போய்ப் பழத்தை ஆயிறம். பழஞ்சோற்றைக் கரைத்துக்கொண்டு கெதியாய் வா" என்று மனைவி வள்ளிப்பிள்ளையிடம் கூறியபடி நார்க்கடகத்தையும் சிறுபெட்டிகளையும் எடுத்துக் கொண்டு மூத்தமகனுடன் தோட்டத்திற்கு விரைகின்றார் முருகுப்பிள்ளையார்.

"அப்பு இண்டைக்கு திண்ணைப்பள்ளியில்லை. சனிக்கிழமை. நானும் பழமாயவாறன்" என்று கூறியபடி ஒரு கைப் பெட்டியுடன் தந்தையின் பின் ஓடுகின்றான் அவரின் இரண்டாவது புத்திரன். கடைக்குட்டி மகள் பாலுக்கழுது தாயிடம் குடித்துவிட்டுத் தொட்டிலில் புரண்டு தூங்குகிறது.

"பிள்ளை எழும்புகிறதுக்கிடையில் பழஞ்சோற்றுத் தண்ணியைத் தோட்டத்தில் கொடுத்துவிட்டு ஒரு கடகம் மிளகாய்ப் பழத்தையும் கொண்டு வரலாம்" என்றபடி

பழஞ்சோற்றைக் கரைப்பதற்குத் தண்ணீர் அள்ளக்குடத்துடன் சென்ற வள்ளிப் பிள்ளைக்குக் கிணற்றடியில் நின்ற பலா பழுத்துக் கமகம என்று மணக்கின்றது.

"ஐயோ! முருகா! கதிர்காமக் கந்தா! உனக்கல்லோ முதற்பழத்தை நேர்ந்து விட்டனான். இப்ப அது பழுத்து மணக்கிறது. காகங்களும் அணில்களும் கண்டால் விடாது. கொத்திப் போடுங்கள். நான் இனி என்ன செய்வது? போன கிழமைதான் பழனி அண்ணையும் பெண்சாதியும் கதிர்காமத் திருவிழாவைப் பார்க்கப் போனவை. அவையட்டையாவது குடுத்தனுப்பியிருக்கலாம். அவையும் போட்டினம், இப்ப நான் இதை யாரிட்டக் குடுத்தனுப்புகிறது? கதிர்காமமும் கொடியேறித் திருவிழா நடக்குது. இப்ப கந்தனுக்கு இந்தப் பழத்தைப் படைத்தால் எவ்வளவு நல்லதாக இருக்கும். நல்ல நேரம் பார்த்துத்தானே கிணத்தடிப் பிலாவும் பழுத்திருக்குது. தலைப்பழம். இதை எப்படியும் நான் நேந்தபடி கதிர்காமக் கந்தனுக்குப் படைக்க வேண்டும். இதை மரத்தில் விட்டால் பறவைகளும் மிருகங்களும் விடாது" எனக் கூறிக்கொண்டு குடத்தை கிணத்துப்படியில் வைத்துவிட்டுக் குசினிக்குட் சென்று வெட்டுக்கத்தியை எடுத்துக்கொண்டு வந்து பலா அடிமரத்திலிருந்த பலாப்பழத்தை வெட்டிக் கையில் எடுத்த வள்ளிப்பிள்ளைக்கு அதற்குப் பின் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

"இவள் என்ரை மனிசி வள்ளிப்பிள்ளையை இன்னும் காணவில்லை. பழஞ்சோற்றைக் கரைத்துக்கொண்டுவர இவ்வளவு நேரமோ? நேரமும் போட்டுது. கொண்டு வந்த கடகங்கள் முட்ட பழங்களும் ஆஞ்சாச்சு. இவள் கடைக்குட்டியோட மினக்கிடுறாள் போலை. காலையிலிருந்து ஒரு முடறு தண்ணியும் வாய்க்க போகல்ல. பசியும் வயிற்றைப் புடுங்குது. வெயிலும் வந்திட்டுது. இவள் மனிசி ஒரு நாளும் இப்படி மினக்கிடுறதில்லை..... இண்டைக்கென்ன ஒரு புதின மாக்கிடக்கு... அவளும் வந்தால் ஒரு கடகம் பழத்தை வீட்டை கொண்டுபோகக் கொடுக்கலாமெண்டால். இப்ப உவளைப் பார்த்துக்கொண்டு நிண்டால் சரிவராது. வீட்டை போவம்" என்று கூறிக் கொண்டு தகப்பனும் இரண்டு மக்களும் மிளகாய்ப் பழக் கடகத்துடன் வீடு வந்து சேர்ந்தனர்.

வீட்டுப் படலையடி வந்ததும் "எடி வள்ளி! உங்கை குசினிக்கை என்னடி செய்து கொண்டிருக்கிறாய்? குழந்தை அழுகிற குரல் உன்ரை மரக்காதுக்குக் கேக்கலையே? தோட்டத்துக்குப் பழஞ்சோற்றைக் கரைத்துக்கொண்டு வராமல் உங்கை குசினிக்கை என்னடி பிச்சுப்புடுங்குகிறாய்?. ஒரு பொறுப்புமில்லாத சடம். விடியக்காலமை தகப்பனும் பிள்ளைகளும் வெறும் வயிற்றோடு தோட்டம் போனதுகளல்லோ. அவைக்குப் பசிக்குமல்லோ என்ற சிந்தனையிருந்தால், நீ உங்க குசினிக்கை கிடப்பிய. எல்லாம் நான் உனக்குத் தந்த இடம். நீ விரும்பிய கோயிலுக்கெல்லாம் போகவிட்டதும், நீ நினைச்ச விரதமெல்லாம் பிடிக்கவிட்டதும், கண்ணில் காணிற பண்டாரங்களுக் கெல்லாம்

சாப்பாடு போடவிட்டதும் இப்ப பிழையாப்போச்சு. உன்னைச் சொல்லி என்ன? நான் விட்ட பிழைக்கு நானும் பிள்ளைகளும் அனுபவிக்கிறம்" என்று ஏசிக்கொண்டு தலையிலிருந்த பழக் கடகத்தை முற்றத்தில் எறிந்துவிட்டுக் கோபாவேசத்துடன் குசினிக்குள் நுழைந்தார்.

அங்கு வள்ளிப்பிள்ளையைக் காணவில்லை. "வள்ளி! வள்ளி!" என்று பலமுறை கூப்பிட்டுக்கொண்டு ஆட்டுக்கட்டை, மாட்டுக்கொட்டில், கோழிக் கூட்டடி எல்லாம் ஓடி ஓடிப் பார்த்தார். ஓரிடத்திலும் வள்ளி தென்படவில்லை. கிணற்றடிப் பக்கம் தேடிப் பார்க்கச் சென்ற மூத்தமகன் "அப்பு! அப்பு!" என்று கூக்குரலிட்டபடி அழத் தொடங்கிவிட்டான். கிணற்றுப்படியில் வெறுங் குடத்தைக் கண்டதும் தாய் கிணற்றுக் குள் விழுந்துவிட்டாள் என்று எண்ணி, இரு பிள்ளைகளும் சத்தமிட்டு "அம்மா! அம்மா!" என்று அழத் தொடங்கிவிட்டனர்.

இவர்கள் போட்ட அவலக்குரலுக்கு ஓடி வந்த அயலவர்கள் கிணற்றடியில் கூடிவிட்டனர். இனத்துப் பெண்கள் ஒப்பாரிவைக்கத் தொடங்கிவிட்டார்கள். முருகுப் பிள்ளையர் கையுமோடாமல் காலுமோடாமல் அப்படியே திகைத்துக் கல்லுப்போல் நின்றுவிட்டார். சுழியோடத் தெரிந்த ஒரு வாலிபன் கிணற்றிற் குதித்துத் தேடினான். அங்கு எதுவித தடயங்களும் கிடைக்கவில்லை. இதனால் சற்றுத் தெளிந்த முருகுப்பிள்ளையருக்கும் மற்றையோருக்கும் மற்றொரு காட்சி அதிர்ச்சியைக் கொடுத்தது.

ஆம், பலா மரத்தடியில் கத்தி கிடக்குது. பலாப்பழத்தைக் காணவில்லை. மரத்திலிருந்து பால் சொட்டிக் கொண்டிருக்குது. யூகங்கள் பலவாகத் தோன்றின. "வள்ளிப்பிள்ளைக்கு என்ன நடந்தது? எங்கு சென்றாள்? பலாப்பழத்தை வெட்ட வந்த கள்வனால் ஏதாவது விபரீதம் ஏற்பட்டதோ? அவள் உயிருக்கு ஆபத்தோ? அவள் உயிருடன் இருக்கிறாளோ? இல்லையோ?" இப்படியாகப் பலரும் பல விதமா யோசிக்கத் தொடங்கினர். நேரமும் மதியமாகிவிட்டது. வள்ளிப்பிள்ளையைக் கண்டதாக எவரும் கூறவில்லை. எங்கு தேடியும் காணவில்லை. எல்லோரும் மனம் கலங்கி நின்றனர். செய்வதறியாது திகைத்தனர்.

எந்தவித முடிவும் எடுக்க முடியாத சோகநிலையிலிருந்தவர்களுக்குத் திடீரென ஓர் பேரானந்தக் காட்சி தென்பட்டது. ஆம் வள்ளிப்பிள்ளை பாதிப் பலாப்பழத்துடனும், ஈரமான தலைமயிரைக் காயவிட விரித்த தலைமயிர்க் கோலத்துடனும், நெற்றியில் விபூதி சந்தனப் பொட்டுடனும், இடுப்பில் கற்பூர வாசனை கமழும் விபூதிப் பொட்ட லத்துடனும், மாவிளக்குப் பிரசாதத்துடனும் காட்சியளித்தாள். இதனைப் பார்த்த முருகுப்பிள்ளையரும் ஏனையோரும் அதிர்ச்சியில் மூழ்கினர். அருகில் வந்த வள்ளிப்பிள்ளையின் வாயிலிருந்து "கதிர்காமக் கந்தனுக்கு அரோகரா! செல்லக்

கதிர்காமத்தானுக்கு அரோகரா!" என்ற முருக நாம ஒலி எல்லோர் காதிலும் கேட்டது. அங்கு நின்றவர்களிற் பலர் வள்ளிப்பிள்ளையைப் பார்த்து வணங்கித் தாங்களும் முருகநாமத்தைக் கோஷித்தனர்.

முருகுப்பிள்ளையர் கோபத்துடனும் அதிர்ச்சியுடனும் வள்ளிப்பிள்ளையைப் பார்த்து "இவ்வளவு நேரமும் எங்கே போட்டு வாறாய்? எந்தக் கோவிலுக்குப் போனாய்? ஏன் எனக்குச் சொல்லாமற் போனாய்? பிள்ளைகளையும் என்னையும் தவிக்க வைத்து விட்டாயே பாவி. உனக்கு என்ன நடந்தது" என்று பலவாறாகக் கேட்டார். அதற்கு வள்ளிப்பிள்ளை "கதிர்காமக் கந்தனுக்கு நேர்ந்த பலாப்பழத்தைக் கதிர்காமம் சென்று படைத்துவிட்டு வாறன்" என்றாள். இதைக் கேட்ட முருகர் "உனக்கென்ன விசரா? கொஞ்ச நேரத்தில் கதிர்காமம் போய் வந்தனியா? இதைச் சொன்னால் யாரும் நம்புவார்களா? யாரை ஏமாத்தப் பாக்கிறாய்? முந்நூறு கட்டைக்கு அங்காலை இருக்கும் கதிர்காமத்துக்குக் கொஞ்ச நேரத்தில் போய்வர நீ என்ன கயிலாயம் சென்று திரும்பிய காரைக்கால் அம்மையா?" என்று ஆவேசமாகக் கேள்விக்கணைகளைத் தொடுத்தார்.

இவற்றை எல்லாம் அமைதியாக நின்று கேட்ட வள்ளிப்பிள்ளை, நிதானமாகவும் புன்முறுவலுடனும் "பலாப்பழத்தை மரத்தில் இருந்து வெட்டியதும் நான் மாணிக்க கங்கையில் பலாப்பழத்துடன் நீராடுவதையும் அதன் பின் கந்தன் சந்நிதியில் பலாப்பழத்துடன் நிற்பதையும் உணர்ந்தேன். எப்படி இங்கு வந்தேன். எதன் மூலம் வந்தேன். என்பதொன்றும் எனக்குத் தெரியாது. ஆனால் நான் பலாப்பழத்தை மரத்திலிருந்து வெட்டியது முதல் கதிர்காமக் கந்தனின் சிந்தனையே என் மனதில் நிலைகொண்டிருந்தது. பழத்தை முருகனுக்குப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே என் மனதில் மேலோங்கி நின்றது. அவர் திருவுருவம் மட்டுமே என் மனக் கண் முன் தோன்றியது. அந்த நேரத்தில் என் கணவர், பிள்ளைகள், தோட்டம், பழஞ்சோற்றுத் தண்ணீர், மிளகாய்ப்பழம், பணம், பொருள், பண்டம், வீடு, ஆடு, மாடு எதுவுமே என் சிந்தை வசப்படவில்லை. கந்தனின் திருவுருவம் என் அகத்திலும் புறத்திலும் எங்கும் பேரொளி மயமாக வியாபித்திருப்பதையே என்னால் உணரமுடிந்தது. அது ஆயிரம் கண்கொண்டும் பார்க்க முடியாத பேரானந்தக் காட்சி" எனக் கூறினார்.

இவற்றை எல்லாம் பதகளிப்புடன் செவிமடுத்த முருகுப் பிள்ளையார் "அப்படியானால் உன்னை எம் ஊரவர் ஒருவரும் கதிர்காமத்தில் காணவில்லையா?" என்று கேட்க "ஏன்? எங்கடை பழனிவேல் அண்ணரும் பெண்சாதியும் என்னைக் கண்டு கதைத்தவை. என்னையும் தீர்த்தத் திருவிழாவரை நின்று தங்களோட ஊருக்குப் போகலாம் என்றவை. நான் தான் குழந்தை தொட்டிலிலை, அவரும் பிள்ளைகளும் தோட்டத்தில மிளகாய்ப்பழம் ஆயினம், பழந்தண்ணி அவைக்குக் கொண்டுபோக வேண்டும் என்றுதான் அவசர

அவசரமாகப் பலாப்பழத்தை முருகனுக்குப் படைத்துவிட்டு அவை தந்த திருநீற்றையும், மாவிளக்கையும் கொண்டு வந்தனான். நான் பொய் எண்டால் அவை வந்தாப்போல கேட்டுப் பாருங்கோவன்".


இப்பொழுது வள்ளிப்பிள்ளையின் கதிர்காம யாத்திரை முருகுப்பிள்ளையருக்கும், ஊர்மக்களுக்கும் ஓர் புரியாத புதிராக இருந்தது. எல்லோரும் பழனிதம்பதிகளின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். இப்பொழுது அவர்களும் கதிர்காமத்தால் வந்துவிட்டனர். ஊர் மக்கள் எல்லோரும் பழனி வீட்டில் குவிந்து விட்டனர். புதினமறிய. வள்ளிப்பிள்ளையின் புதிருக்கு விடைகாண.

முருகுப்பிள்ளையாரைக் கண்ட பழனியார் "என்ன முருகுப்பிள்ளை! கதிர்காமம் வந்த உன்ரை மனிசி திருவிழா ஒன்றும் பாராமல் பலாப்பழத்தைப் படைத்த கையோட ஊருக்குத் திரும்பிவிட்டாள். புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் தோட்டத்திற்குப் பழந்தண்ணி கொண்டுபோக வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அவசரமாகப் புறப்பட்டாள். நான்தான் மாவிளக்கையும் கற்பூரச்சட்டித் திருநீற்றையும் பொட்டலமாகக் கட்டிக் கொடுத்துவிட்டனான். ஆனையிறவுக்கு அங்காலை ஒன்றும் தெரியாத வள்ளிப்பிள்ளை எப்படித் தட்டத்தனிய பலாப்பழத்துடன் கதிர்காமம் வந்து ஊர் திரும்பினவள்?


கோவிலில் அவளின் போக்கு ஒரு மாதிரியாக இருந்தது. மனிசிக்கும் எனக்கும் இவளைக் கண்டதும் ஒரே அதிர்ச்சி. உண்மையாக அவளுக்கு என்ன நடந்தது முருகுப்பிள்ளை?" என்று பழனியர் கேட்டதும் முருகுப்பிள்ளையருக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டது. தன் மனைவியின் உயர்ந்த பக்தி நிலையை அப்பொழுதுதான் அவர் உணர்ந்தார்.

*புனிதவதியார் ஆண்டவனிடமிருந்து மாம்பழத்தை யாசித்துப் பெற்றார். வள்ளிப் பிள்ளையிடமிருந்து கதிர்காமக்கந்தன் பலாப்பழத்தைக் கவர்ந்தெடுத்தார். இருவரும் ஆண்டவரின் அம்மைகளே.*

*என்னே அவன் அருள்! என்னே அவன் அற்புதம்! அவன் எம் கலியுக வரதனல்லவா! நம்வினை தீர்க்க வந்த குமரனல்லவா!*




08.06.1989ல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது பிரதம குருவாக இருந்த சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக் குருக்கள் ஆசி வழங்கியபோது



கும்பாபிஷேக பிரதமகுரு சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக் குருக்கள்



ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பா. சோமசுந்தரக் குருக்கள்




ஆலயத்தின் கோபுரவாயில் முகப்பு தோற்றம்



இடபவாகனத்தில் எழுந்தருளி அம்பாளின் தோற்றம்



காராம்பசு வாகனத்தில் அம்பாள் காட்சிதரும் காட்சி



இரட்டைக் குதிரையில் அலங்கரிக்கப்பட்ட புவனேஸ்வரி அம்பாள் வெளிவீதி வலம் வரும் காட்சி

# தேசிக்காய் விளக்கின் சிறப்பு

அன்னை பராசக்தி வடிவான ஸ்ரீ துர்க்கா தேவி குப்பன், சுப்பன், நிசும்பன், மஹிஷன், மஹிஷாசுரன் முதலான அசுரர்களை சம்காரம் செய்துவிட்டு வருகின்ற போது தேவியின் தூதுவன் ஒருவன் வந்து - "அம்மா! அனைத்து அசுரர்களையும் ஒழித்துவிட்டோம் என்று பெருமையாகக் கூறினீர்களே, இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனையோ அசுரர்கள் இன்னும் ஒளிந்திருக்கிறார்கள் அவர்களை எல்லாம் எவ்வாறு தாங்கள் அழிக்கப் போகின்றீர்கள்?" என்று கேட்டான்.

இதனால் கோபங் கொண்ட அன்னை ஸ்ரீ துர்க்கா தேவி திரிலோக சஞ்சாரியாகிய நாரத மஹரிஷியை அழைத்து பிரபஞ்சத்திலுள்ள அனைத்து அசுரர்களையும் ஒன்று திரட்டி வருமாறு ஆணையிட்டாள்.

செய்வதறியாது நின்ற நாரதர் சிவனை நினைந்து ஸ்தோத்திரம் செய்தார். சிவனும் தோன்றி "நாரதா! உன் மனக்குழப்பம் எனக்குப் புரிகிறது கவலைப்படாதே" என்று கூறி "தாடிமீபலம்" ஒன்றைக் கொடுத்து "இதனைக் கொண்டு போய் தேவியிடம் கொடு அவள் கோபம் தணியும்" என்று கூறினார்.

பெருமகிழ்ச்சியோடு அனனையை அடைந்த நாரதர் சிவனால் கொடுக்கப் பெற்ற "தாடிமீபலத்தை" (எலுமிச்சை) ஸ்ரீ துர்க்கா தேவியிடம் கொடுத்து "தாயே உலகத்திலுள்ள அனைத்து அசுரர்களையும் மடக்கி உலகையே என் உள்ளங்கையினுள் அடக்கிக் கொண்டு வந்துள்ளேன்" என்றார்.

கடுங்கோபத்துடன் இருந்த ஸ்ரீ துர்க்கா தேவி அதனை வாங்கி வாயினுள் போட்டு விழுங்கி விட்டாள். தாடிமீபலத்தை உண்டதும் அன்னை சாந்தமானாள்.

"நாரதா! உனக்கு வேண்டும் வரங்களைக்கேள்" என்று அன்னை கூற நாரதரும் "அடியார்களின் துக்கங்களையெல்லாம் களைந்து அருள் கொடுக்க வேண்டும் என்றும் தாடிமீபலம் கொண்டு, பூஜித்த பக்தர்களைக் காத்தருள வேண்டும்" என்றும் கேட்க அப்படியே ஆகும் என அன்னை அருளினார்.

எனவே தான் அன்னை கோபத்தைத் தீர்த்துச் சாந்தப்படுத்திய "தாடிமீபலம்" எனும் தேசிக்காய் அன்னை வழிபாட்டிற்கு மிகவும் உகந்ததாயிற்று.

உலகத்தின் வடிவமான தேசிக்காயினை எமது உடம்பாக நினைத்து இரு துண்டாக அறுத்து உள்ளே இருக்கின்ற சாறு, சுளை, அகற்றி மறுபுறம் திருப்பி தகளியாக்கி, நெய்விட்டுத் திரி போட்டுச் சுடர்விட்டு பிரகாசிக்கும்படி தீபமேற்றி அன்னை துர்க்கா தேவியை வழிபட்டால் அவள் சாந்தஸ்தவரூபியாகி நாம் கேட்கும் வரங்களை நல்குவாள்.


விசேடமாக ராகு கால நேரங்களில் தேசிக்காயில் விளக்கேற்றி வழிபடும் அன்பர்களை அன்னை ஆசீர்வதிப்பாள் என்பது திண்ணம்.

| | | |
|---|---|---|
| தேசிக்காய் | - | நமது உடல் |
| அறுத்தல் | - | மனதிலுள்ள தீய சிந்தனையை அறுத்தல் |
| சாறு, சுளைகளை | - | காமம், குரோதம், லோபம், மோகம், மதம் |
| அகற்றுதல் | - | ஆச்சரியம் போன்ற தீய குணங்களை அகற்றுதல் |
| நெய் | - | நற்குணங்களுடன் கூடிய ஆர்வம் |
| திரி | - | ஆணவம், கன்மம், மாயையை முறுக்கித் திரியாக்கி |
| சுடர் | - | ஞானம் என்னும் ஒளியை உண்டாக்குதல் |

எனவே அன்னை ஸ்ரீ துர்க்கா தேவியை ராகு கால நேரங்களில் தேசிக்காய் விளக்கேற்றி வழிபட்டு வாழ்வோமாக.

## ராகுகாலம்

| | | |
|---|---|---|
| **செவ்வாய்க் கிழமைகளில்** | - | **மாலை 3.00 மணி முதல் 4.30 மணி வரை** |
| **வெள்ளிக் கிழமைகளில்** | - | **காலை 10.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை** |



# இடைக்காடு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மாள் ஆலய தலபுராணம்

### பாரோர் பசிபோக்கும் புவனேஸ்வரி
### படிமத்தார் முன்சென்று பசிக்குதென்பதா?

அன்னமளித்து ஆருயிர் புரப்பவள் அன்னை புவனேஸ்வரி! பாரோர் பசி தீர்க்கும் பராபரிக்கே பசி வந்தால் யாரிடம் சொல்வாள்? பக்தி மிகுந்த படிமத்தாரிடம்! (படிமம் அத்து - ஆர்) படிமத்தார் என்றால் தெய்வம் உறையப் பெற்றவர் என்று பொருள். படிமத்தார் வேலரிடம் புவனேஸ்வரியே தன்பசி தீர்க்க வந்து திருவிளையாடல் நடந்த இடம் தான் "இடைக்காடு". அன்னதானக் கந்தன்' என்ற அற்புதத் திருப்பெயர் பூண்டு செல்வச்சந்நிதி முருகன் கோயில் கொண்டிருக்கின்றான் தொண்டைமானாற்றின் ஒரு கரையில், அத்திவ்ய ஆற்றின் மறுகரையில் தொண்டைமானாறு அச்சுவேலி வீதியின் மேற்குப் பக்கத்தில் அச்சுவேலியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள இடைக்காட்டில் தான் அன்னை புவனேஸ்வரி அற்புதம் நிகழ்த்திய திருத்தலம் அமைந்துள்ளது.

கி.பி.18ம் நூற்றாண்டின் முற்பகுதி ஒல்லாந்தர் ஆட்சி ஈழத்தில் இடங்கொண்டு தொல் நெறியாம் சைவநெறிக்குத் தொல்லை கொடுத்த காலம். சைவத் திருக்கோயில்கள் தரைமட்டமாக்கப்பட்டுக் கிறித்தவ தேவாலயங்கள் தாபிக்கப்பட்ட நேரம்! சைவசமயிகள் அஞ்ஞானிகள் எனப் பரசமயத்தவர் போதித்த காலம், சைவநெறி நின்றோர் அடிமைகளாக ஒடுக்கப்பட்ட நேரம் சாப்பிட்ட வாழை இலையை இறப்பில் செருகி வைக்க வேண்டிய அவலம். இந்நிலையில் தான் அகந்தை கொண்ட பிரம்மா விஷ்ணுவினாலும் அடிமுடி காண்பதற்கு அரியவர், ஆனால் அடியார்க்கு எளியவர், இறைவனின் இடப்பாகத்தில் இடம் கொண்ட அன்னை புவனேஸ்வரி, உழுதுண்டு உயிர் ஓம்பும் ஒப்பில்லாத் துறவி, படிமத்தார் வேலரிடம் தன் பசி தீர்க்க மதிய நேரம் வந்தார் பெருமூதாட்டியாக. "எனக்குப் பசிக்கின்றது, அமுது பொங்கித் தா" என்று கேட்டார் அன்னபூரணி. உண்டி கொடுத்து உயிர் ஓம்பும் படிமத்தார் வேலரும் உடனே தன் நல்லிகப்பன் வயலில் விளைந்த புதுநெல்லில்குற்றிய அரிசியில் அமுது பொங்கினார். வயல் நடுவில் அமைந்த குளக்கரையில், வடலி நிழலில் மட்பானையில் பொங்கிய அமுதை வடலி ஓலையில் செய்த மூன்று தட்டுவங்களில் படைத்தார். அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம் பலத்தான் திருத்தேவி அடியார் படைத்த அமுதை அன்போடு ஏற்றுக் கொண்டார். படிமத்தார் படைத்த அமுதுண்ட புவனேஸ்வரி தன் மடியிலிருந்து எடுத்த சிவலிங்கத்தையும், செப்பினாலான சிலம்பையும், கல்லாலான அம்மனையும், கொடுத்து " எனக்குத் தண்ணீர் தா குடிக்க" என்று கேட்டுத் தான் உண்ட தட்டுவத்தைக் கொடுத்தார். உடனே படிமத்தார் வேலரும் அருகில் உள்ள கிணற்று நீரை தட்டுவத்தில் எடுத்துக் கொண்டு வந்த போது, பனை வடலி நிழலில் வீற்றிருந்த இந்தத் தெய்வீக மூதாட்டியைக் காணவில்லை. நான்கு திசைகளுக்கும் ஓடி ஓடிச் சென்று தேடிப் பார்த்தும் அவர் கண்களுக்குத் தென்படவில்லை

அந்த மூதாட்டி எப்படி மாயமாக மறைந்தார்?' என்ற சிந்தனைக்குள்ளாகி, அது ஒரு பெண் தெய்வம் தான் என்பதை உணர்ந்து, மனம் கலங்கி, வெதும்பிக் கண்ணீர் மல்கி தான் அம் மூதாட்டிக்கு அறுசுவை உணவும் பருக நீரும் கொடுத்து நல்ல மரநிழலில் இளைப்பாற வைக்க முடியவில்லையேயென, வேதனை உற்றார், துடித்தார், அம் மூதாட்டி வீற்றிருந்த வடலியைப் பலமுறை விழுந்து வணங்கி வலம் வந்தார். அன்று முழு நாளும் தான் பொங்கிய அமுதை உண்ணாமல் நீர் பருகாமல் பித்துப்பிடித்த நிலையிலிருந்தார். திருக்காளத்தியில் குடுமித்தேவரைக் கண்ட கண்ணப்பநாயனார் நிலைக்கு ஒப்பானார். இரவாகியும் தன் வீட்டுக்குச் செல்லாமல் அவ்வடலியடியிலேயே கிடந்து உறங்கி விட்டார். அன்று இரவு அவர் கனவில் அம் மூதாட்டி தோன்றி " படிமத்தா! நீ கவலையடையாதே, அன்புடன் நீ எனக்குத் தந்த அமுது அமிர்தம் போல் இருந்தது. உன் வடலி நிழல் அரசும்வேம்பும் இணைந்த பெரு விருட்ச நிழல்போல் சுகம் தந்தது. நான் தந்த மூன்று மூர்த்தங்களையும் வைத்து எமக்கு நித்திய பூசைகள் செய்து வா" என்று திருவாய் மலர்ந்து அவர் கனவிலிருந்து மறைந்தருளினார்.

படிமத்தார் வேலர் பக்தியுள்ளவர், தெய்வீக சக்தியுள்ளவர், அதனால் வேலர் சன்னதமாடி எதிர் காலத்தில் நிகழ இருப்பவற்றை முன்கூட்டியே கூறுவார் தீர்க்கதரிசனமாக! கோதாரி, வைசூரி, போன்ற கொள்ளை நோய்கள் எம் கிராம மக்களைத் தாக்காமல் தன் தெய்வீக சக்தியால் தடுப்பார். இதனால் எம்மூர் மக்கள் அவரைத் தெய்வப் பிறவியாகப் போற்றினர்.தெய்வப் பிறவியான அவர் முன் தெய்வமே தோன்றித் திருக்காட்சி கொடுத்தது பெரிய அற்புதமல்லவா? ஆசார சீலராக அன்னையின் அடியானாக விளங்கிய வேலர், அன்னையின் கட்டளைப்படி கல்லினால் செய்த உருவத்தை அன்னை புவனேஸ்வரியாகவும், அவள் கொடுத்த சிவலிங்கத்தைச் சிவனாகவும், செப்புச் சிலம்பைக் கற்புத் தெய்வம் கண்ணகி அம்பாளாகவும், வைத்து நித்திய பூசைகள் செய்து பூசகரானார்.

குளந் தொட்டு வயல் விளைத்து வளம் பெருக்கி, வறுமையோட்டி அறம் வளர்த்த வேலர், குளக்கரையில் கோயில் கொண்ட அன்னை புவனேஸ்வரியின் தல விருட்சங்களாக அரசையும், வேம்பையும் குளக்கரையில் நட்டு வைத்தார். அவர் அன்று நாட்டிய தல விருட்சங்களான அரசும் வேம்பும் அண்டமெல்லாம் வியாபித்துள்ள சிவனும் சக்தியும் போலச்சடைத்து வளர்ந்து பூவுலகத்தைத் தரையில் தாங்கும் நாகதம்பிரானுக்கும் நாநிலத்து அனைத்து உயிர்களுக்கும் நிழல் நல்குகின்றன. படிமத்தார் வேலர் பராபரியான புவனேஸ்வரியின் பாதாரவிந்தங்களை அடைந்த பின், அவருடைய தம்பியார் "தனிமைதீர்த்தார்" அண்ணன் செய்த திருத் தொண்டை அணுவளவும் பிசகாது செய்து வந்தார். தனிமை தீர்த்தார் தள்ளாத வயதடைந்ததும் அவருடைய வம்ச வித்து "வல்லியார்" பூசகரானார். வல்லியார் "உடையார் என்னும் அரசாங்க பதவி வகித்த காரணத்தால் "வல்லி உடையார்" என மக்களால் அழைக்கப்பட்டார். ஓலைக் கொட்டிலில் கோயில் கொண்ட அன்னை புவனேஸ்வரிக்குச் சுண்ணாம்பும், கல்லும் கொண்டு கோயிலும், குளமும் கட்டி அன்னை புவனேஸ்வரி அன்றளித்த விக்கிரகங்களையே பிரதிஷ்டை செய்வித்தார். ஆண்டாண்டுகாலமாகப் படிமத்தார் வேலர் பரம்பரையே பூசை செய்து பராமரித்து வந்த கோயிலுக்கு அன்னையின் அருளால் ஊர்ப் பொதுமக்கள்

உற்பத்தி செய்த புகையிலை, சாமை, குரக்கன், மிளகாய் போன்ற பொருட்களை அன்பளிப்பாகப் பெற்று 1920-ம் ஆண்டளவில் இவ்வாலயத்தை விரிவுபடுத்திக் கட்டினார்கள். இவ்வாலயத்தில் மூலமூர்த்தியாகப் புவனேஸ்வரி அம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளாகச் சந்தான கோபாலருக்கும் கண்ணகை அம்பாளுக்கும், கோயில் கட்டுவித்தனர். தலவிருட்சத்தின் கீழ் நாகதம்பிரானை வைத்து வழிபட்டனர். புவனேஸ்வரி அம்பாளின் புண்ணிய தலத்தைப் படிமத்தார் வேலரின் பரம்பரையில் தோன்றிய ஞானர், சுப்பர் ஆகியோர் மாறி மாறி நிர்வகித்தும் பூசை செய்தும் வந்தனர். 1974ம் ஆண்டளவில் மீண்டும் இத்திருத்தலத்தில் திருப்பணி வேலைகள் செய்து கும்பாபிஷேகம் 03-05-1974 இல் நடைபெற்றது. அம்பாளின் ஆலயத்தில் காவற் தெய்வம் வைரவருக்கும் கோயில் கட்டிக் குடமுழுக்கு 07-02-79 நடைபெற்றது.

புவனேஸ்வரி புவனத்தின் நாயகி! அனைத்துயிர்களின் அன்னை அவளுடைய ஆலயம் அனைத்துயிர்களுக்கும் சொந்தம்! படிமத்தார் வேலரின் குடும்பச் சொத்தாக விளங்கிய கோயிலை ஊர்ப் பொதுமக்கள் சொத்தாக்கிய பெருமை ஆலய உரிமையாளராகவிருந்த உயர்திரு.சு.ஞானசபேசன் அவர்களையே சாரும். கோயிலை நிர்வகிக்க ஆலய நிர்வாக சபை ஒன்றை அமைத்துச் சகல அதிகாரங்களையும் சட்டரீதியாக அச்சபையிடம் ஒப்படைத்தார். 22-09-1982 தொடக்கம் இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையே இக்கோயிலைப் பரிபாலித்து அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்ட வழி செய்கின்றது. நித்திய நைமித்திய பூசைகளை ஆகம விதிமுறைப்படி நடாத்த ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதோடு, பழுதடைந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து மெஞ்ஞான ஒளி பரப்பும் அன்னை புவனேஸ்வரியின் ஆலயத்திற்கு விஞ்ஞான விளைவான மின்னொளி பொருத்தியும், அலங்காரத் திருவிழாக்களைச் செய்தும், கண்ணகி அம்பாளுக்குப் பொங்கல் விழாவெடுத்தும், அண்டை அயற் கிராம மக்கள் எல்லாம் அன்னையின் ஆலயத்தை நாடி வந்து அருள் பெற்றுப் பெருவாழ்வு பெறத்தக்க முறையில் சிறப்புற நிர்வகித்து வருகின்றது.

1987ம் ஆண்டு நமது நாடு கண்ட அனர்த்தங்கள் வார்த்தையில் வடிக்கவொண்ணாதவை. அருளாட்சி செய்கின்ற அன்னை புவனேஸ்வரியின் ஆலயமும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களும் சேதமுற்றன. அதனால் புனருத்தாரண பணிகளுக்காக அன்னையின் அருளால் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அன்னை புவனேஸ்வரியின் அருட்கொடையைப் பெற்ற அடியார்கள் அள்ளி வழங்கிய பொன்னும் பொருளும் கொண்டு பழுதடைந்த கட்டிடங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. சேதமடைந்த விக்கிரகங்கள் புதுப்பிக்கப்பட்டன. களவு போன எழுந்தருளிக்குப் பதிலாகப் புதிய எழுந்தருளி உருவாக்கப்பட்டது. அத்துடன் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகருக்கும், ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியருக்கும், நானிலந் தாங்கும் நாகதம்பிரானுக்கும். நானிலத்தை ஆட்டிப் படைக்கும் நவக்கிரக நாயகருக்கும், சண்டேஸ்வரிக்கும் புதிதாக கோயில்கள் எழுப்பப்பட்டன.

புனருத்தாரண வேலைகள் பூர்த்தியானதும் 08-06-1989 ஆம் திகதி வியாழக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. குடமுழுக்கைத் தொடர்ந்து நாற்பத்தைந்து

தினங்கள் மண்டலாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நித்திய நைமித்திய பூசைகளும், விழாக்களும் வெகு சிறப்பாக நடைபெற்று வந்தன. மீண்டும் 1991ம் ஆண்டு மார்கழி மாதம் ஏற்பட்ட உக்கிரப்போரால் எமது கிராம மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து பிற இடங்களில் வாழ்ந்து மீண்டும் 1997 ம் ஆண்டிலிருந்து தம் இல்லங்களுக்குக் குடியேறியதும், எமது கோயில் அம்பாளுக்கு நித்திய நைமித்திய பூசைகளும் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அது மாத்திரமல்லாமல் புவனேஸ்வரி அம்பாள் பெயரில் அறநெறிப் பாடசாலை ஒன்றும் சிறுவர் பாடசாலை ஒன்றும் பரிபாலன சபையால் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன. போரினால் முழுக்க சேதமடைந்த மாதர் சங்கக்கட்டடத்தைப் பல இலட்சம் ரூபா செலவில் திருத்தியமைத்து அக்கட்டடத்தில் புவனேஸ்வரி அம்பாள் சிறுவர் பாடசாலை, மாதர் சங்கம், தொழிற் பயிற்சிகள் தற் சமயம் இயங்குகின்றன. இக் கோவிலில் நடைபெறும் சகல விழாக்களிலும் பன்னிரு திருமுறைகள், புவனேஸ்வரி அம்பாள், கண்ணகி அம்பாள் ஊஞ்சல் பாட்டுக்கள், அபிராமி அந்தாதி, நவக்கிரக தோத்திரம், பஜனை கூட்டுப்பிரார்த்தனை போன்றவற்றைப் பாடியும், சமய சொற்பொழிவு ஆற்றியும், அம்பாள் வீதி உலாவரும் பொழுது நாமாவளி, தோத்திரப் பாடல்களைப் பாராயணம் செய்தும், நித்திய நைமித்திய பூசைகளுக்கு வேண்டிய பூக்கள், மாலைகள், சாத்துப்படி, தண்டிகைக்கு வேண்டிய பூமாலைகள் அலங்காரப் பொருட்களை வழங்கியும், வீதி உலா வரும் பொழுது சுவாமியைத் தாங்குதல், கொடி, குடை, ஆலவட்டம், பந்தம் போன்றவற்றை ஏந்துதல் போன்ற திருத் தொண்டுகளை ஊர் இளைஞர்களும், இடைக்காடு மகாவித்தியாலயம், புவனேஸ்வரி அம்பாள் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களும் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் உற்சவ காலங்களில் இடைக்காடு இந்து நெறிக் கழகம் சமய அறிவுப் போட்டிப் பரீட்சை , திருமுறைகள் மனனப் போட்டிப் பரீட்சை, பூமாலை கட்டும் போட்டி போன்றவற்றை நடாத்திப் பரிசில்களையும் வழங்கி வருகின்றது. சமய சம்மந்தமான நூல்கள் அச்சிட்டு இலவசமாக வழங்கி வருவதும், சகலரும் சமய தீட்சை பெற வேண்டிய ஒழுங்குகளையும், உதவிகளையும் செய்து வருவதும் விஷேட அம்சமாகும்

## தீராதவயிற்று நோயை நீக்கிய குலதெய்வம்

தொண்டைமானாறைச் சேர்ந்த திரு.மா. அம்பிகைபாகர் ஓர் பிரசித்தி பெற்ற உலாந்த (நில அளவையாளர்) அவரின் ஆறுமாதக் குழந்தை சதா இரவு பகலாக ஒரு வித வயிற்று நோயால் துடிதுடித்து அழுத வண்ணம் இருந்தது. தன் குழந்தையைத் தமக்குத் தெரிந்த சிறந்த வைத்தியர்களிடம் எடுத்து சென்று வைத்தியம் செய்தும் எதுவித பலனும் ஏற்படவில்லை. குழந்தை பால் எதுவும் அருந்தாமல் அழுது கொண்டேயிருந்தது. பெற்றோர் தம் குழந்தையை அக்கொடிய நோயிலிருந்து எப்படி மீட்பதென்று தெரியாமல் கலங்கினர். அயல் வீட்டில் வசித்த ஒரு சமயப் பெரியார் இது ஒரு தெய்வத்தின் குறைபாடாக இருக்கலாம், அதற்குரிய கடனைத் தீர்த்தால் குழந்தையின் நோய் நீங்கி விடுமெனக் கூறினார். அப்படியாயின் இது வருடா வருடம் தவறாமல் செய்து வந்த இடைக்காடு கண்ணகி அம்மனுக்குரிய வைகாசித் திங்கள் பொங்கலை இந்த வருடம் (1941) குழந்தை பிறந்ததனால் பொங்காமல் விட்ட தவறாக இருக்கலாமென உணர்ந்து,

உடனே பெற்றோர் குழந்தையுடன் இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கு வந்து, குழந்தையை நாகதம்பிரான் முன்னால் தலவிருட்சமான அரசு, வேம்பு மரநிழலில் ஒரு துவாயில் படுக்க வைத்து விட்டுக் கோயில் முகப்பில் புதுமட்பானையை வைத்துப் பொங்கினர். சிறிது நேரத்தில் சதா அழுது கொண்டிருந்த குழந்தையின் அழுகுரல் கேட்காததனால் தந்தையார் குழந்தையைப் பார்க்கச் சென்ற போது, ஒரு நாக பாம்பு குழந்தையின் வயிற்றின் அருகிலிருந்து படம் எடுத்து ஆடிக்கொண்டிருந்தது. குழந்தையோ தன் பிஞ்சுக் கரங்களால் பாம்பைப் பிடித்து விளையாட முயன்று கொண்டிருந்தது. இக்காட்சியைக்கண்ட அம்பிகைபாகர் அதிர்ச்சியடைந்து தன் குழந்தையைப் பாம்பு தீண்டி விடும் என்ற அச்சத்தால் கூச்சலிட்டார். இவரின் அவல ஒலியைக் கேட்டதும் கோவிலுக்குள்ளிருந்த பூசகரும், பொங்கல் பானையடியில் நின்ற குழந்தையின் தாயாரும் பிள்ளையடிக்கு விரைந்து சென்றனர். அப்பொழுது அப்பாம்பு அரசமர அடியிலுள்ள பொந்துக்குள் நுழைந்து செல்வதைக் கண்டனர். குழந்தையின் நோய் நீங்கி அதன் அழுகை நின்றிருந்ததையுணர்ந்த பெற்றோர் அம்பாளின் அருளை நினைந்து இன்புற்றனர். அன்றிலிருந்து அவர்கள் அம்பாளைத் தம் குலதெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தனர்.அவர்களைத் தொடர்ந்து நாகராசனுடன் விளையாடிய அப் பெண்குழந்தையும் தன் குல தெய்வமாக அம்பாளை வணங்கி வந்தார். அக் குழந்தையே 1991ல் இடைக்காடு மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய திருமதி. தெய்வேந்திரம் விமலாசனி ஆவார். அவர் அம்பாளின் இவ் அற்புதத்தை நான் இடைக்காடு மகாவித்தியாலயத்தில் இடைக்காடு இந்து நெறிக்கழகத்தின் சார்பில் பூமாலை கட்டுதல் - கோலம் போடுதல் போட்டியை நடாத்தச் சென்றபோது எனக்குக் கூறிப் பேரானந்தக் கண்ணீர் மல்கினார். தான் அடுத்த ஊராகவிருந்தும் இடைக்காடு மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றும் காலத்தில் கோவிலின் பரிபாலன சபை அங்கத்தவராகவிருந்தும் தொண்டாற்றத் தனக்கு அரிய சந்தர்ப்பத்தையும் அருளிய அம்மையின் கருணையை நினைந்து நினைந்து புளகிதமடைந்தார்.

---

## எமது ஆலயம் பற்றிய சில விசேட குறிப்புகள்

* 1801ம் ஆண்டு ஆலய மஹோற்சவம் ஆடி மாதத்தில் 15 நாட்கள் நடைபெற்றன.

* 1872ம் ஆண்டு யாழ் / கச்சேரி கோவில் பதிவு இடாப்பில் கைலாசநாத புவனேஸ்வரி அம்பாள் ஆலயமெனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

* 1839ம் ஆண்டில் எழுதிய உறுதியில் சிவகாமி அம்பாள் கோவிலென எழுதப்பட்டுள்ளது.

* யாழ் / கச்சேரியின் கோவில்கள், மடல்கள் பதிவு இடாப்பில் 1872, 1882, 1892 ஆண்டுகளில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய தலபுராணம்

திருக்காளத்திக் காட்டில் வேடன் கண்ணப்பனின் அன்புடைமையை உலகறியச் செய்ய இறைவன் தன் இரு கண்களில் இருந்தும் இரத்தம் சொரிய ஆடிய நாடகம் அங்கு, ஒட்டுசுட்டானில் கோவில் கொண்டு மக்களை அருள் ஆட்சி செய்ய இறைவன் தன் சிரசில் இரத்தம் சொரிந்து ஆடியநாடகம் இங்கு. அது எங்கு? எப்பொழுது? என்ற வினாக்களுக்கு விடை இங்கு.

இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் **இடைக்காட்டில் கொத்த வளவில்** இருந்து சைவ வேளான் குலத்தைச் சேர்ந்த தீர புத்திரரும் அவர் தம் இரு புதல்வர்களும் வன்னி நாட்டில் குடியேறும் பொருட்டுக் கால் நடையாகப் பனாட்டு, எள்ளு, பனங்கட்டி, புளுக்கொடியல், தேங்காய் போன்ற உணவு வகைகளுடன் புறப்பட்டனர். அக்காலத்தில் தற்காலம் போன்று தார் வீதிகளோ, வாகனங்களோ, துவிச்சக்கர வண்டிகளோ, மின் விளக்குகளோ, தீப்பெட்டிகளோ வழியில் கடைகளோ இல்லை. நாட்டின் பெரும் பகுதி காடாகவே இருந்தது. ஆனையிறவு வரை பற்றைக் காடும், அதற்கு அப்பால் சோலைக் காடும் இருந்தது.அதில் யானை, புலி, கரடி, பன்றி, பாம்பு போன்ற கொடிய விலங்குகளும், ஜந்துக்களும் வசித்து வந்தன. பகலில் தான் பிரயாணம், அதுவும் ஒற்றையடிப் பாதையால், இரவில் மரத்தில் பரண்கட்டிப் படுப்பர். சுற்றிவரப் பட்டமரங்களைத் தீமுட்டித் தம்மைத் துஷ்ட மிருகங்களில் இருந்தும் பாதுகாப்பர். கடைக் கோல் மூலம் தீமுட்டுவர்.அதற்கு காய்ந்த மூங்கில், காய்ந்த விண்ணாங்கன் தடிகளைப் பாவிப்பர். பரண் கட்டுவதற்கு ஆத்தி நார், மான் கொடி போன்றவற்றைப் பாவிப்பர். கடும் குளிரில் தம் உடம்பைக் கதகதப்பாக வைத்திருக்கும் பொருட்டு ஒரு வகை பச்சிலை மூலிகையைச் சப்பி வாய்க் கொடுப்பில் இடுக்கிக் கொள்வர். இப்படியாகப் பல கஷ்டங்கள் மத்தியில் தம் பிரயாணத்தைத் தொடர்ந்து கிட்டத்தட்ட 60 கல் தொலை தூரத்தைக் கடந்து வன்னி நாட்டைச் சென்றடைந்தனர்.அன்று இரவு மரத்தில் பரண் கட்டி அதில் நித்திரை கொண்ட போதும், தீரபுத்திரர் விசித்திரமான கனவு கண்டார் கோயில் ஒன்றில் திருவிழா நடப்பது போன்றும், அதிலிருந்து பறையொலி, மணியொலி, சங்கொலி கேட்பது போன்றும் அவ்விறைவனுக்குத் தீர புத்திரரே பூசை செய்வது போன்றும் கனவு கண்டார். அதிகாலையில் கண்விழித்துப் பார்த்ததும் தான் நடுக்காட்டில் மரப்பரணில் படுத்திருப்பதை உணர்ந்தார். தீர புத்திரரும் அவர் தம் இரு புத்திரரும் அங்கே குடில் அமைத்து அதில் இருந்து கொண்டு தம் உணவாக வேட்டையாடிய மிருகங்களையும், பழவகைகளையும், கிழங்கு வகைகளையும் காட்டுத் தேனையும் உண்டு வாழ்ந்து வந்தனர்.

அக்கால கட்டத்தில் வன்னி மக்களைப்போல் தாமும் சேனைப்பயிர் செய்ய நாட்டம் கொண்டு அதற்கேற்ப மண் வளம் நிறைந்த பூமி எது எனத் தெரியாது தத்தளித்த போது

எல்லாம் வல்ல ஈசன் அவர் கனவில் தோன்றி "கொன்றை மரத்தைச் சுற்றியுள்ள காட்டை வெட்டிப் பயிர் செய்" என ஆணையிட்டார். அதன் பிரகாரம் தீர புத்திரரும் பிள்ளைகளும் அதற்குக் கடைக்கோல் மூலம் தீமூட்டி எரித்தனர்.அப்பொழுது கொன்றை மரமும் அதனைச் சுற்றியுள்ள வனமும் வேகாமல் இருந்தது. அதற்குப் பலமுறை தீமூட்டியும் அது எரியவில்லை இதனால் அப்பகுதியைக் கோடாரி கொண்டு வெட்டித் துப்பரவு செய்தனர். தீர புத்திரர் கொன்றை மரத்தடியிலுள்ள பற்றைகளை வெட்டித் துப்பரவு செய்த போது ஒரு மண் திட்டில் எரிந்து கருகிய மரக்குற்றி போல் ஒன்று தென்பட்டது. அதை அகற்றும் பொருட்டுத் தம் கோடாலியினால் அதனைக் கொத்தியதும் அதன் மேல்ப் பகுதியில் இருந்து இரத்தம் பீறிட்டுப்பாய்ந்தது. அதனைக் கண்ணுற்ற தீரபுத்திரர் பயத்தினால் சிவனே! எனக் கூச்சலிட்டார். பின் ஒருவித பரவசநிலை அடைந்தவராக எதுவித பிற உலக நினைவே இல்லாமல் ஏறத்தாளச் சமாதி நிலையில் அத்திருவுருவத்தின் முன் ஆடாமல் அசையாமல் மரக்கட்டை போல் அமர்ந்திருந்தார்.

பிலவின் மறுபுறத்தினை வெட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்த இரு புதல்வர்களின் காதில் தந்தையின் அவல ஒலி கேட்டது. உடனே அவர்கள் கொன்றை மரத்தடிக்கு விரைந்து வந்தனர். தந்தையார் ஒரு வித மயக்க நிலையில் இருப்பதையும் கறுத்த உருவத்தில் இருந்து இரத்தம் கசிவதையும் கண்டனர். பயத்தினால் இருவரும் அபாயக் குரல் இட்டனர். இவ்வொலியை அயல்பிலவில் இருந்து வேலை செய்து கொண்டிருந்த வன்னியர்கள் கேட்டதும், உடன் அவர்களும் கொன்றை மரத்தடிக்கு விரைந்து வந்தனர். அவர்கள் கண்ட காட்சி எல்லோரையும் மிக வியப்பில் ஆழ்த்தியது. என்ன செய்வது என்று அறியாது திகைத்து நின்றனர். இந் நிகழ்ச்சி காட்டுத் தீபோல் எங்கும் பரவியது. வன்னி மன்னன் காதிலும் இச் செய்தி எட்டியது. உடன் மன்னன் அவ் ஸ்தலத்திற்கு விரைந்து வந்தான். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஆதியோடு அந்தமாகக் கேட்டறிந்தான். அக்கறுப்பு உருவத்தை மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தபோது அது ஒரு கருங்கல் என்பதை அறிந்து கொண்டான். தீர புத்திரர் கனவில் தோன்றிய இறைவனின் திருவிளையாடல் தான் இது என்பதை ஊகித்து அறிந்த மன்னன், இது மரக்கட்டையல்ல ஒரு தெய்வத்தின் திருவுருவம், இது கொன்றை மரத்தடியில் தோன்றியதால் இதற்குக் "கொன்றலடிப் பிள்ளையார்" என்று திருநாமம் இட்டு வழிபடும்படியும், அதற்குத் தீரபுத்திரரைத் தினமும் பூசை செய்யும்படியும் கூறி அதற்கு வேண்டிய பொருள் உதவிகளையும் செய்தான்.

தீர புத்திரர் காலம் தவறாது கொன்றலடிப்பிள்ளையார்க்குத் தொடர்ந்து பூசை செய்து வந்தார். இப்படிச் செய்து வரும் நாளில் இரவு அவர் கனவில் தோன்றிய இறைவன் "நான் யார்? என் சுய உருவம் என்ன? என்பதை அறிய என்னைச் சுற்றி வர உள்ள மண்ணை அகற்றிப் பார்" எனக் கூறினார்.

அடுத்த நாள் காலை தீர புத்திரர் மண்ணை அகற்றியதும் ஓர் இலிங்கம் போன்ற உருவம் தென்பட்டது. இச்செய்தி வன்னி மன்னனுக்கு அறிவிக்கப்பட்டது. ஊர் மக்களும் இவ்வதிசயத்தைப் பார்க்கக் கூடி விட்டனர். வன்னி மன்னன் அத் திருவுருவத்தைப் பார்த்ததும் "இது ஓர் சுயம்பு இலிங்கம் என்றும், இதற்குக் கீழ்ப் பகுதியாகிய ஆவுடையார் இல்லை என்றும், இது ஈசனின் அருவுருவத் திருமேனி என்றும், இது தானாகத் தோன்றியபடியால் இதை நாம் எல்லோரும், "தான்தோன்றீஸ்வரர்" என்றும், வேகாவனத்தில் கோவில் கொண்டமையால் வேகாவனேஸ்வரர்' என்றும், திருநாமம் இட்டு வழிபடுவோம்" எனக் கூறித் தன் இருப்பிடம் அடைந்தான். அதன் பின் ஊர் மக்கள் அதற்கு மண்சுவர் எழுப்பி ஒரு கோவில் கட்டினார்கள். தீரபுத்திரர் தான்தோன்றீஸ்வரருக்குக் காலம் தவறாது பஞ்சாட்சரத்தை ஓதி அபிஷேகமும், பூசையும் செய்து வந்தார். அதற்கு மண்ணால் செய்யப்பட்ட கெண்டி, குடம், பானை சட்டி, திருவிளக்கு போன்றவற்றையே பாவித்து வந்தார். இப்பகுதியில் உள்ள மண் மிகவும் கெட்டியானது. மட்பாத்திரம் செய்ய உகந்தது இன்றும் ஒட்டுசுட்டான் பானை சட்டிகளுக்கு மவுசு அதிகம். அது மாத்திரம் அல்லாமல் அயற்கிராமமாகிய கூழாமுறிப்பில் இருக்கும் செங்கல் ஓட்டுத் தொழிற்சாலைகள் இதற்குச் சான்று பகருகின்றன.

தீரபுத்திரரும் பிள்ளைகளும் தாம் வெட்டிய பிலவில் குரக்கனைச் சேனைப்பயிராகப் போட்டனர். குரக்கன் பயிர் விளைந்து கதிர் முற்றியதும் அதனை அறுக்க அறுக்கக் குரக்கன் ஓட்டில் இருந்து மீண்டும், மீண்டும் குரக்கன் கதிர்கள் விளைந்து கொண்டே இருந்தன. இது ஈசனின் அற்புதச் செயல் என்று மகிழ்ந்து கொண்டிருந்த தீரபுத்திரருக்குத், தாமும் மற்றவர்களைப் போன்று மாற்றுப் பயிர்களாகிய நெல், சாமை, சோளம் போன்றவற்றைத் தம் பிலவில் உற்பத்தி செய்ய முடியாமையையிட்டு வேதனையும் ஏற்பட்டது. அக்கால கட்டத்தில் அவர் கனவில் தோன்றிய ஈசன் "உன்வேதனையை நாம் அறிவோம் நீ மாற்றுப்பயிர் செய்ய குரக்கன் ஒட்டுத்தடையாய் இருப்பின் அதை தீ கொண்டு ஒட்டைச் சுட்டு விடு என்று கூறினார்."

மறுநாள்க் காலை இறைவனின் ஆணைப்படி தீரபுத்திரரும் குடும்பத்தினரும் குரக்கன் கதிர்களைக் கொய்து விட்டு நெருப்பினால் ஒட்டை ஒட்டச்சுட்டனர். அதன் பின் அப்பூமியில் மாற்றுப் பயிர்களை விளைவித்தனர். ஒட்டுகளைச் சுட்டமையினால் அப்பிரதேசத்திற்கு ஒட்டுசுட்டான் என்றும், வேகாவனத்தில் தோன்றிய இலிங்கத்தை வேகாவனப் பெருமான் என்றும், இலிங்கம் தானாகத் தோன்றியமையால் தான்தோன்றீஸ்வரர்என்றும் அழைத்து வருகின்றனர். **தீரபுத்திரரும் அவர் வம்சத்தினரும் வாழ்ந்த இடம் இடைக்காடு என்றும், அவர்கள் நீர்ப்பாசனத்திற்காகப் பாவித்த குளம் இடைக்காட்டுக்குளம் என்றும் இன்றும் அழைக்கப்படுகிறது.**

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்தில் இருந்து 14 1/2 க்கல் தொலைவில் மாங்குளம், - முல்லைத்தீவு பிரதான வீதியில்

உள்ளது. இத்திருத்தலத்தின் ஆரம்ப காலப்பகுதியைச் சரியாக அறிய முடியாவிட்டாலும் இது கிட்டத்தட்ட 5ம் நூற்றாண்டு அளவில் தோன்றியிருக்கலாம் என வரலாற்றுக் குறிப்புக்கள் மூலமும், கர்ண பரம்பரையினரின் வாயிலாகவும் அறியக்கிடக்கின்றது.

## கல்லுமாடும் புல்லுத்தின்னுமா?

போர்த்துக்கேயர் தம் ஆட்சிக்காலத்தில் தமது சமயத்தைப் பரப்பும் பொருட்டு இந்துக்களின் சமய வழிபாட்டு முறைகளை ஏளனம் செய்தனர், எள்ளி நகையாடினர், அறிவிலிகளின் செயல் எனப் பரிகசித்தனர், சைவக் கோயில்களை இடித்துக் கிறிஸ்தவ கோயில்களைக் கட்டித் தமது சமயத்தில் சேரும்படி அச்சுறுத்தினர். இதனால் சுதேசிகளில் ஒரு சிலர் அவர்களின் பொய்ப் பிரசாரத்தில் மயங்கிச் சிறுசிறு சலுகைகளுக்காக அவர்களின் சமயத்திற்கு மாறினர். ஏனையோர் அவர்களுக்குத் தெரியாத முறையில் எமது சமய வழிபாடுகளையும், சடங்குகளையும், விரதங்களையும் அனுஷ்டித்து வந்தனர். விரத நாட்களில் சாப்பிட்ட வாழை இலையை இறப்பில் செருகி வைத்தனர். கிணற்றடிகளில் இரகசியமாக வைத்து வழிபட்ட வைரவரைப் போர்த்துக்கேயர் வரும்போது சிலுவையாக மாற்றித் தண்டனையில் இருந்து தப்பிக் கொண்டனர். இந்தக் காலகட்டத்தில்தான் ஒரு நாள் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்குத் தன் பரிவாரங்களுடன் வந்த போர்த்துக்கேய உயர் அதிகாரி அங்குள்ள நந்தியெம் பெருமானைச் சுட்டிக் காட்டி 'உந்தக் கல் மாடும் புல்லுத் தின்னுமா? ' என ஏளனமாகவும், ஆணவத்துடனும் கோயில் பூசகரைக் கேட்டான். இதற்கு உடன் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த பூசகரிடம் "நான் நாளைக்கு இதே நேரம் இங்கு வருவேன். உங்கள் கல்லுமாடு புல்லுத்தின்னா விட்டால் உங்கள் சமயம் பொய்ச் சமயம் எனக் கருதி இக் கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கிக் கிறிஸ்தவ தேவாலயத்தைக் கட்டிச் சகலரையும் அதை வழிபடும்படி செய்வேன்" என அகங்காரமாகக் கூறித் தன் இருப்பிடம் ஏகினான்.

இதனால் மனம் கலங்கிய பூசகரின் கனவில் தோன்றிய தான்தோன்றீஸ்வரர் "நீ கவலைப்படாதே! கண்ணப்பன் அன்புடன் தந்த இறைச்சியைக் காளாத்தியில் குடுமித்தேவராக இருந்து (இலிங்கம்) சுவைத்தேன். நம்பியாண்டார் நம்பி தந்த பிரசாதங்களைத் திருநாரையூரில் பிள்ளையாராக விருந்து உருசித்தேன். நீ தரும் அறுகம்புல்லையும் நான் நந்தியாக இருந்து தின்பேன்" எனக்கூறி மறைந்தருளினார். அடுத்த நாள் போர்த்துக்கேய அதிகாரி தன் பரிவாரங்களுடன் குறிப்பிட்ட நேரம் வந்து சேர்ந்தான். அவன் கோவிலுக்குள் வந்ததும் பூசகர் ஏற்கனவே தயாராக வைத்திருந்த அறுகம் புல்லைப் பாலில் நனைத்து நந்தியின் வாயில் வைத்தார். அது உடனே தன் நாச்கை நீட்டி அறுகம் புல்லை வாய்க்குள் இட்டுத் தின்றது. பின் எழுந்து நின்று சாணியும் போட்டது. இவ் அற்புதத்தைப் பார்த்துக் கொண்டு நின்ற போர்த்துக்கேய அதிகாரி உடன் ஓடிச்சென்று பூசகரின் காலில் விழுந்து வணங்கி மன்னிப்புக்கேட்டதுமல்லாமல் கோவில் திருப்பணிக்குப்

பெரும் தொகை பொன்னும், பொருளும் கொடுத்தான். ஈசனின் அருளை நினைத்து மனம் கசிந்து கண்ணீர் மல்கினான். அன்றிலிருந்து தான் சமய மாற்றல் முயற்சியில் ஈடுபடுவதில்லை எனச் சபதமும் பூண்டான்.

இவ்வாலயத்திற்குத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கும் பொருட்டு 08-12-89 ல் நடைபெற்ற பாலஸ்தாபனம் தொடங்கி 10-11-93ல் நடைபெற்ற கும்பாபிஷேகம் வரை நடைபெற்ற சில முக்கிய நிகழ்ச்சிகள், சடங்குகள் புனிதமானவைகளாகவும் வேறுதிருக் கோயில்களில் காணமுடியாதவைகளாகவும் இருந்தன.

பாலஸ்தாபனம் மூலவரைத் தவிர மற்றைய பரிவார மூர்த்திகளுக்கும் செய்யப்பட்டன. மூலவர் சுயம்புலிங்கமானதால் அவருக்குப் பதிலாகச் சந்தனக்கட்டையினால் ஆன இலிங்கம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. இத்திருவுருவம் கும்பாபிஷேகத்தின் பின் சந்தனக்கல்லில் அரைத்து, சந்தனமாக மூலவருக்குப்பூசி இரண்டறக்கலக்கப்பட்டது. மூலமூர்த்தியாகிய சுயம்புலிங்கத்திற்குத் தைலதாரகா பாத்திரம் மூலமே எண்ணைக்காப்பிடப்பட்டது. அடியார்கள் கருவறைக்குச் சென்று மூலவரின் அருகில் நின்று வழிபடக்கூடியதாக மாத்திரம் அல்லாமல் அவரின் உச்சியில் கோடாரியால் தீரபுத்திரர் வெட்டிய தழும்பு இன்றும் இருப்பதைக் காணக்கூடியதாகவும் இருந்தது.

இமயமலைச்சாரலில் உள்ள ஹரித்துவாரில் இருந்து இதற்கென விஷேடமாகக் கொண்டு வரப்பட்ட புனித கங்கை நீரால் எல்லாம்வல்ல இறைவனுக்கு அபிஷேகம் செய்து அப்புனித நீர் அங்கு குழுமியிருந்த பக்த கோடிகளுக்குத் தெளிக்கப்பட்டது. அவ்வடியார்கள் கங்காளன் சடையில் இருந்து பாயும் புனித கங்கை தீர்த்தத்தில் மூழ்கிய உணர்வு பெற்றுப் பேரின்பம் அடைந்தனர்.

10-11-93ல் முப்பத்துமூன்று குண்டத்தோடு உடைய மகா அபிஷேகம் நடைபெற்றது. இதில் கிட்டத்தட்ட 50 சிவாச்சாரியார்கள் பங்கு கொண்டு உத்தமத்தில் உத்தமமான பிரதிஸ்டா மஹாகும்பாபிஷேகம் எல்லாம் வல்ல தான்தோன்றீஸ்வரப் பெருமானின் திருவருளினால் நிறைவேறியது.

ஓம் நமச்சிவாய

ஆதாரம்

1. **முல்லைமணி திரு. த. சுப்பிரமணியம்** - ஒட்டுசுட்டான்
2. **திரு. வ. சின்னப்பிள்ளை** - ஒட்டுசுட்டான்
3. **திரு. க. மு. வேலுப்பிள்ளை** - இடைக்காடு




ஆலயத்தின் வெளிவீதியில் அக்கினி மூலையில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் தூபியின் தெற்குப் புறத்தில் அமைந்துள்ள பிச்சாடனர் சிற்பம்



பரிவார மூர்த்திகளில் ஒன்றான நவக்கிரக தேவர்களின் ஆலயத்தில் கிழக்குப் பக்கத் தூபியில் உள்ள சூரியபகவானின் சிற்பம்



பரிவார மூர்த்தியாகிய சண்டேஸ்வரி தேவியின் தெற்குப் புறத் தூபியில் அம்பாளைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ள சிற்பம்



கும்பாபிஷேகத்திற்கான கர்மாரம்பத்தின்போது பிரதம குரு
விநாயக வழிபாட்டுக் கிரியையினை செய்கிறார்



சர்வசாதகாசிரியர் சிவஸ்ரீ மகேந்திரநாதக் குருக்களும் ஏனைய
சாதகாசிரியர்களும் மந்திர உச்சாடணம் செய்கின்றபோது



கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவின் உபயகாரர்களுக்கு எஜமான் அபிஷேகத்திற்கு
அமர்ந்து இருந்தபோது

உ

ஓம் சக்தி

# பெண்குழந்தையுடன் பிறந்த நாகதம்பிரான்

## (புளியம் பொக்கனை நாகதம்பிரான் தல வரலாறு)

17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இடைக்காட்டு வட்டவளவில் வாழ்ந்த முருக உடையாருக்கும் வள்ளியாத்தைக்கும் முதலில் இரு ஆண் பிள்ளைகள் பிறந்தன. இறுதியில் ஒரு பெண் பிள்ளையும், ஒரு பெண் நாகபாம்பும் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தன. அப் பெண் பிள்ளைக்கு நாகாத்தையென்றும், பாம்புக்கு நாகம்மா என்றும் திருநாமம் சூட்டினர். இவ்விரு பெண் குழந்தைகளையும் பெற்றோர் பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வந்தனர். நாகம்மா (பாம்பு) இக் குடும்பத்தில் அவதரித்ததும் இவர்களின் பூமியின் விளைச்சல் அதிகரித்தது. ஆடு மாடுகள் பல்கிப் பெருகின. பொருளாதாரம் மிக மேன்மையுற்றது. இதனால் அக் குடும்பத்தினர் நாகம்மாவை ஒரு தெய்வப்பிறவி எனக் கருதினர்.

நாகாத்தை விவாகப் பருவமெய்தியதும் அவருக்குத் திருமணம் செய்ய ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் முருக உடையார் தம் சொத்துக்களைத் தம் பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுக்கத் தீர்மானித்தார். எத்தனையாகப் பிரிப்பதென்ற கேள்வி அவர் மனதில் எழுந்தது. நாகம்மாவுக்கும் (பாம்பு) ஒரு பாகத்தைப் பிரித்துக் கொடுப்பதா? அப்படிக் கொடுத்தால் அது எப்படி அச் சொத்தை ஆளும்? என்று பலவாறாகச் சிந்தித்த உடையாருக்கு ஒரு உபாயம் தென்பட்டது. ஒரு நல்ல நாளில் தன் மூன்று பிள்ளைகளையும் தன் வீட்டில் நிரையாக அமரச் செய்து தம் கைவசமிருந்த பவுண் நகைகளை மூவர் முன் சமபங்காகப் பிரித்து வைத்தார். தந்தையின் அருகிருந்து இதை அவதானித்துக் கொண்டிருந்த நாகம்மா (பாம்பு) மிகக் கோபாவேசம் கொண்டு சீறிப் படமெடுத்துத் தன் படத்தால் நகைகளைச் சிதறடித்தது. இச் செய்கை நாகம்மாவுக்கும் சொத்தில் பங்கு வேண்டும் என்பதை உணர்த்தியதை உணர்ந்து கொண்ட முருக உடையார் நகைகளை நான்கு பங்குகளாகப் பிரித்து வைத்தார். உடனே நாகம்மா (பாம்பு) தன் பங்கைத் தன்னுடன் பிறந்த சகோதரியின் பங்குடன் தன் படத்தால் அரக்கிச் சேர்த்தது. அதன் பின் நகைகளை மாத்திரமல்லாது ஏனைய அசையும், அசையாச் சொத்துக்களையும் நான்கு பங்குகளாகப் பிரித்து நாகம்மாவின் பங்கை நாகாத்தைக்கு வழங்கி அவருக்கு விவாகம் செய்து வைக்கப்பட்டது.

நாகம்மாவும் (பாம்பு) ஒரு ஆண் நாகத்தடன் கூடிப் பல குட்டிகளை ஈன்றது. பாம்புகள் பல்கிப் பெருகி உடையார் வளவு நிறைந்தது. அவை வீட்டுக் கூரை, முகடு, வளை வைக்கற்போர், துலா, ஆட்டு மாட்டுக் கொட்டில்கள், தொட்டில், குடில்கள், எங்கும் வியாபித்திருந்தன. முருகஉடையார் வயலில் இருந்து விட்டுக்கு வந்ததும் படலையிலுள்ள பாம்புகள் அவரின் தோளிலும், தலையிலும் ஏறி அமர்ந்து கொள்ளும். கால்களையும், கைகளையும் சுத்தி வளைத்துப் பிடித்துக் கொள்ளும். அவர் படுத்துக் களைப்பாற நினைத்துப் பாயை விரித்தால் அதற்குள் பாம்புக் குட்டிகள் நெளியும். உறியில் காய்ச்சி

வைத்த பாலை எடுக்கச் சென்றால் சட்டியில் இருந்த பாலைக் குடித்துவிட்டு உறியிலிருந்து ஊஞ்சல் ஆடும் சில பாம்புகள். சமைக்கச் சென்றால் அடுப்புக்குள் பாம்புகள், கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்றால் பட்டைக்குள் பாம்புகள். பாம்புகள் கொடுக்கும் அன்புத் தொல்லைகள் அளவிட முடியாததாயின, ஆனால் அவைகளின் திருவிளையாடல்கள் உடையார்க்கு இன்பமளித்தன.

ஒரு நாள் நாகாத்தை வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்ய விளக்குமாற்றை எடுத்ததும் அதற்குள் இருந்த பாம்புக் குட்டிகள் அதை விட்டு விலக மறுத்தன. இதனால் கோபமடைந்த நாகாத்தை விளக்குமாற்றை எடுத்து உதறி "உங்களால் பெரும் தொல்லை, எங்கையாவது போய்த் தொலையுங்கள்" என்று கூறி அதிலிருந்த பாம்புகளுக்கு விளக்கு மாற்றினால் அடித்தார். இச் செயலைக் கண்ட நாகம்மா தன் குடும்பத்திற்கு இளைத்த அவமானத்தைத் தாங்க முடியாமல் உடனே தன் சகல வாரிசுகளுடன் வீட்டை விட்டு வெளியேறினாள். தான் செய்த பெரும் தவறை உணர்ந்த நாகாத்தை தன் உடன் பிறப்புச் சகோதரியையும், பிள்ளைகளையும் தம்மை விட்டு பிரிந்து போக ணேடாமென்று எவ்வளவோ கெஞ்சி அழுதும் எதுவித பிரயோசனமும் ஏற்படவில்லை.

வயலில் இருந்து வீட்டுக்கு வந்த உடையார் தன் செல்வங்கள் வீட்டில் இல்லாததைக் கண்டதும் அவை எங்கே? என்று தன் மகள் நாகாத்தையை வினவினார். அவரும் அழுது கொண்டு நடந்த விடயத்தை ஒழிவுமறைவின்றிக் கூறினார்.

இத் துன்பச் செய்தியைக் கேட்ட உடையார் மனம் பதறினார், அழுதார், புலம்பினார். தன் பிள்ளைச் செல்வங்களை அடித்துத் துரத்தி விட்டாயே பாவி என்று மகளை ஏசி மயங்கி விழுந்தார். பின்பு ஒருவாறாகத் தெளிந்தார். அவர்கள் எப்பக்கம் போனார்கள்? எங்கு சென்றார்கள்? எனத் தவித்தார்.அன்ன ஆகாரம் உட்கொள்ள மறுத்தார். சகலதையும் இழந்த நிலைக்குள்ளானார். உடையார் இவர்களைத் தன் பிள்ளைகள் என்று மாத்திரமல்லாமல் தன் தெய்வங்களாகப் போற்றிப் பாலூட்டிப் பாதுகாத்து வந்தவர்.

உடையார் தன்தெய்வங்கள் ஊர்ந்து சென்ற அடிச்சுவடுகள் தென்படுகின்றதா என்று நிலத்தை உற்று நோக்கினார். ஆம் இறைவனருளால் அவர்கள் சென்ற அடிச்சுவடுகள் அவர் கண்களுக்குத் தென்பட்டன. அச்சுவட்டின்படி அவர்கள் சென்ற திசை நோக்கி இரவு பகலாக விரைந்து நடந்தார். ஊன் உறக்கத்தை மறந்தார். சோலைக்காடுகளூடாக அத் தெய்வங்களை நோக்கி நடை யாத்திரை தொடர்ந்தது. கொக்காவில் காட்டை அடைந்தார். அங்கு பாம்புகள் சென்ற பாதையில் புல் பூண்டுகள் சரிந்திருப்பதைக் கண்டார் (அப்புற் தரைக்கு நாகஞ் சரிந்த சோலை என்று இன்னமும் வழங்கப்பட்டு வருகிறது) அவ்வடையாளம் மேலும் அவரை உற்சாகமூட்டியது. இப்படியே நடந்து புதூர்க் காட்டை அடைந்தார். அங்கு ஒரு பெரிய பாலைமரம் தென்பட்டது. அதற்கப்பால் எதுவித அடிச்சுவடும் தென்படவில்லை. அப்பாலை மரத்தடியில் பெரிய பொந்தொன்று காணப்பட்டது. இப் பொந்துக்குள் தன் செல்வங்கள் ஒளித்திருக்கலாமென உணர்ந்தார். பொழுதும் சாய்ந்தது அன்ன ஆகாரமின்றி இரவு பகலாக அவர் தன் செல்வங்களைத் தேடி அலைந்து திரிந்ததால் உடல் சோர்ந்து அம்மரத்தடியில் படுத்து உறங்கி விட்டார்.

உறக்கத்தில் அற்புதக் கனாவொன்றைக் கண்டார். அதில் தன் பிள்ளை நாகம்மாவும் அதன் பிள்ளைச் செல்வங்களும் காட்சியளித்தன. அப்போது ஓர் அசரீரி பின்வருமாறு ஒலித்தது. "அப்பரே நீர் முற்பிறவியிற் செய்த நல் வினைப்பயனால் நாம் உங்கள் பிள்ளைகளாக அவதரித்தோம். உங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தோம். எம்மைப் பாலூட்டிச் சீராட்டிச் சிறப்பாக வளர்த்தீர்கள் உங்களைப் பிரிந்து செல்லும் காலம் கைகூடியமையால் இப்பாலை மரப் பொந்தில் வந்துறைந்துள்ளோம். கவலைப்பட வேண்டாம் உங்கள் வழிபாட்டிற்காக எங்களில் ஒருவரைத் தருவோம். அவரை எடுத்துச் சென்று புளியம் பொக்கணை என்ற ஊரிலுள்ள அரச மரத்தடியில் வைத்துப் பால் பழம் வழங்கி வழிபட்டு வாருங்கள். உங்கள் சகல துன்பங்களும் நீங்கும். எம்மை வழிபடுபவர்கள் நோய் நொடி இன்றி சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து எம்மை வந்தடைவர். உமது சந்ததியினர்க்குப் பாம்பு விஷம் எதுவித தீங்கும் விளைவிக்காது" இவ் அசரீரியைக் கனவில் செவிமடுத்த உடையார் பேரின்பமடைந்தார் பொழுது புலர்ந்ததும் அயற் கிராமத்திலுள்ள வீடுகளுக்கு விரைந்து சென்று அவர்களிடம் ஒரு கூடையையும், முட்டியிற் பாலையும், வெள்ளைத் துணியையும் பெற்று ஓடோடி வந்து பாலைமரப் பொந்தின் முன் கூடைக்குள் தூய வெள்ளைத்துண்டை விரித்துப் பால் முட்டியை அதற்குள் வைத்துத் தன் தெய்வங்களை நினைத்து இறைஞ்சினார். சிறிது நேரத்தில் ஒரு பாம்பு பொந்திலிருந்து வெளிப்பட்டு அக்கூடைக்குள் புகுந்து முட்டியிலுள்ள பாலைக்குடித்துத் தன் உருவத்தைச் சுருக்கிச் சுருண்டு படுத்துக் கொண்டது. பாம்பின் இச்செயலைக் கண்டு உடையார், இது சாதாரண பாம்பல்ல. பாம்பின் உருவில் எமக்குக் கிடைத்த நாகதம்பிரான் தெய்வம் என உணர்ந்து அக்கூடையைப் பயபக்தியுடன் எடுத்துத் தன் தலையில் வைத்துப் பாலைமரத்தை மூன்று முறை வலம், வந்து புளியம் பொக்கணையை நோக்கி சோலைக்காடுகளுடாக இரவு பகலாக நடந்து, கரவெட்டித்திடலிலுள்ள புளியம் பொக்கணையைச் சென்றடைந்தார். அங்கு அசரீரியில் ஒலித்த அரசமரம் தென்பட்டது. அதனடியிற் சென்று தன் தலையில் இருந்த கூடையை இறக்கி வைத்தார். கூடையிலிருந்த நாகதம்பிரான், எழுந்து படமெடுத்து ஆடி உடையாரை ஆசீர்வதித்து விட்டு அரசமரப்பொந்துக்குள் நுழைந்தது. அன்று தொடக்கம் முருக உடையார் பால் பழம் வைத்து அருகில் ஒரு சூலத்தையும் நாட்டிப் பூசித்து வந்தார். அவர் நாகதம்பிரானடி சேர்ந்ததும் அவர் சந்ததியினர் கோவிலை விரிவு படுத்திக் கட்டி நித்திய, நைமித்திய பூசைகளை இன்று வரை செய்து வருகின்றனர். நாகதம்பிரானாகிய பாம்பு அவதரித்த தினம், பங்குனி உத்திரம் கூடிய பௌர்ணமி நன்நாளாகும். அத்தினத்தில் பொங்கலும், திருக்குளித்தியும், விழாவும் வருடா வருடம் வெகுவிமரிசையாக நடைபெற்று வருகின்றது. இத் திருத்தலம் பரந்தன் புதுக்குடியிருப்புப் பாதையில் 7ம் கட்டை சந்தியிலிருந்து 3கல் தொலைவில் உள்ளது. அக்காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து அடியார்கள் கால் நடையாகவும், மாட்டு வண்டிகளிலும் சென்று நாகதம்பிரானை வழிபட்டனர். தற்காலத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நவீன வாகனங்களிற் சென்று வழிபட்டு வருகின்றனர்.

பாம்பு விஷம் தீண்டியவர்களுக்கு இங்குள்ள புற்றுமண்ணைக் கரைத்து கடிவாயில் பூசினால் விஷம் நீங்கும் என்பது பக்தர்களின் ஐதீகம். புதுார்நாக தம்பிரான் திருக் கோயில் கண்டிப் பெருவீதியில் கனகராயன் குளம் - புளியங் குளத்திற்கிடையிலுள்ள

புதூர்ச் சந்தியிலிருந்து மேற்குத் திசையில் நாலுகல் தொலைவில் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தின் பொங்கல் திருக்குளிர்த்தி வருடா வருடம் வைகாசித் திங்களில் நடைபெறுகின்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருட விழாவில் கலந்து கொள்வர்.

முருக உடையார் பரம்பரையில் வந்த இடைக்காட்டு வட்ட வளவில் வசித்த திருமதி வேலுப்பிள்ளை நாகபிள்ளையிடம் இது பற்றி நான் வினவிய போது தன் கணவரின் பரம்பரையினர்க்குப் பாம்பு கடித்தால் விஷம் தற்செய்வதில்லை என்றும் தான் புதிய பூமியில் வீடு கட்டிக் குடிபுகுந்த போது அங்கு பாம்புகள் அனேகம் இருந்தனவென்றும் புளியம் பொக்கணை புதூர் நாகதம்பிரான் கோவில்களிலிருந்து கொண்டு வந்த புற்று மண்ணை நீரிற் கரைத்துத் தன் வளவிற் தெளித்தபின் பாம்புகள் அங்கு வருவதில்லை யென்று கூறினார்.

முருக உடையார் பரம்பரையில் வந்த தாமு, அவர் மகன் சிற்றம்பலம், அவர் மகன் தாமோதரம்பிள்ளை, அவர் மகன் பரமேஸ்வரன் கூறியதாவது, தான் புளியப் பொக்கணையில் விதானையாகக் கடமை புரிந்து இளைப்பாறியதாகவும், நாகதம்பிரான் கோயிலைச் சுற்றியுள்ள வயல்களில் அரைவாசிக்கு மேல் தங்கள் குடும்பத்திற்கு உரியதென்றும் கூறினார். மேலும் தனது தம்பியார் யோகநாதனுக்கு 1973ம் ஆண்டு நெல் அருவி வெட்டும் போது வெட்டுண்ட நாகபாம்பு அவரை நன்றாகத் தீண்டியது என்றும் ஆனால் விஷம் ஏறவில்லையென்றும் அதற்கு எதுவித வைத்தியமும் செய்யவில்லை என்றும் கூறினார். தனது மருமகன் மகேந்திரனுக்கு 1980ஆம் ஆண்டு நாகபாம்பு கடித்தும் அவருக்கும் விஷம் ஏறவில்லை என்றும் கூறினார். இடைக்காடு வட்ட வளவை பிறப்பிடமாகக் கொண்ட நாகமுத்து சிற்றம்பலம் விஷம் தீண்டியவர்களுக்குத் தம்கையால் தடவி விஷத்தை நீக்கும் சித்தியுடையவர் என்பது நம்மிற் பலர் அறிந்த விடயமே


இடைக்காட்டுப் பெண்மணியால் அதி அற்புதம் நிறைந்த புளியம் பொக்கணை நாகதம்பிரான் திருக்கோயில் ஈழநாட்டு மக்களின் வழிபாட்டிற்குக் கிடைத்த பெருமை அவ்வூர் மக்களாகிய எங்களுக்கும் உரியதல்லவா?

தகவல்

1. **திரு. தா. பரமேஸ்வரன்** - இடைக்காடு
2. **திருமதி. வே. நாகபிள்ளை** - இடைக்காடு
3. **திரு. வ. பராசத்திராசா** - இடைக்காடு

நன்றி


புளியம் பொக்கணை நாகதம்பிரான் 1967ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலர்.



தசதரிசனத்தின்போது கோமாதா பூஜையை பிரதமகுரு செய்யும் காட்சி



கும்பாபிஷேக விழாவன்று ஒன்பது யாகத்தினது பிரதான கும்பங்கள் வீதிவலம் வருதல்.
(பிள்ளையார், புவனேஸ்வரி, சந்தான கோபாலர், கண்ணகி, முருகன், நாகதம்பிரான், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரி)



விநாயகப் பெருமானின் ஆலய தூபியில் மேற்குத் திசையில் உள்ள சிற்பம்



வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமியின் ஆலயத்தின் தூபியின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள முருகப் பெருமானின் சிற்பம்



மூலஸ்தான தூபியில் உள்ள மேற்குப் புறத்தில் காணப்படும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் சிற்பம்



சந்தான கோபாலர் பரிபாலனமூர்த்தி ஆலயத்தின் தூபியின் மேற்குப் பக்கத்தில் உள்ள சிற்பம்



பரிவாரமூர்த்தியாகிய ஸ்ரீ கண்ணகி தேவியின் ஆலயத்தின் மேற்குப் புறத் தூபியில் காணப்படும் சிற்பம்



பரிவார ஆலயமாகிய பைரவ கோவிலின் கிழக்குப் புறத் தூபியில் அமைந்துள்ள சிற்பம்

உ

அம்பாள் துணை

# இடைக்காடு அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

| | | |
|---|---|---|
| மூலமூர்த்தம் | : | அருள் மிகு புவனேஸ்வரி அம்பாள் |
| தலம் | : | நல்லிகப்பன் வயல் |
| தீர்த்தம் | : | திருக்குளம் |
| விருட்சம் | : | அரசு, வேம்பு (சிவன் - சக்தி) |

## பரிவார மூர்த்தங்கள்

ஸ்ரீ சித்தி விநாயகர்

சந்தான கோபாலர்

கண்ணகி அம்பாள்

ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர்

நவக்கிரக நாயகர்கள்

கொடித்தம்பப் பிள்ளையார்

நாகதம்பிரான்

ஞானபைரவர்

சண்டேஸ்வரி தேவி

# இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. வே. சுவாமிநாதன் |
| உப - தலைவர் | : | திரு. செ. தில்லைநாதன் |
| செயலாளர் | : | திரு. நா. சுவாமிநாதன் |
| உப செயலாளர் | : | திரு. த. கதிரமலை |
| பொருளாளர் | : | திரு. சி. கந்தசாமி |

## பரிபாலன சபை உறுப்பினர்

1. திரு.பொ கணபதிப்பிள்ளை குடும்பம் வளலாய்
2. திரு.க. ஆறுமுகசாமி குடும்பம் தம்பாலை
3. திரு.வ. செல்லையா குடும்பம் வரணன்
4. திரு.சி. முருகையா குடும்பம் இடைக்காடு
5. திரு.வி. கந்தசாமி குடும்பம் இடைக்காடு
6. திரு. செ. பாலசுப்ரமணியம் குடும்பம் கெருடாவில்
7. அதிபர் (இடைக்காடு மகாவித்தியாலயம்)
8. தலைவர் (மாணிக்க இடைக்காடர் சன சமூக நிலையம்)
9. தலைவர் (இடைக்காடு கலைமகள் சன சமூக நிலையம்)
10. ஆலய பிரதம சிவாச்சாரியார்

# பரிவார மூர்த்திகள் மற்றும் அவற்றுக்குரிய கோவில்களை அமைக்கவும், ஏனைய திருப்பணிகளுக்கும் உதவியவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் | - | ஊர் மக்கள். |
| 2. | ஸ்ரீ விநாயகப் பெருமான் | - | திரு. த. கதிரமலை குடும்பத்தினர். செம்பிகலட்டி. |
| 3. | ஸ்ரீ சந்தான கோபாலர் | - | திரு. வே. சபாபதிப்பிள்ளை, வடிவேலு குடும்பத்தினர்கள், தம்பக்கடவை. |
| 4. | ஸ்ரீ கண்ணகி அம்பாள் | - | திரு. ஆ. சின்னப்பு குடும்பத்தினர், காளி கோவிலடி. |
| 5. | ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணியர் | - | திரு. சி. தம்புச் சாமியும், ஊர்மக்களும். |
| 6. | ஸ்ரீ நாகதம்பிரான் | - | செ. பொன்னையா குடும்பத்தினர், வித்தியாலய வீதி. |
| 7. | நவக்கிரக நாயகர்கள் | - | திரு.மா. சிவஞானசுந்தரம் குடும்பத்தினர், தோட்டவளவு. |
| 8. | கம்பத்தடிப் பிள்ளையார் | - | ஊர்மக்கள். |
| 9. | வசந்த மண்டபம் | - | திரு. க. மூ. வேலுபபிள்ளை குடும்பத்தினர், கூளாவடி. |
| 10. | நந்தி பலிபீடம் | - | ஊர்மக்கள். |
| 11. | ஸ்ரீ பைரவமூர்த்தி | - | திரு. த. முருகுப்பிள்ளை குடும்பத்தினர், மால்வளவு. |
| 12. | ஸ்ரீ சண்டேஸ்வரி அம்பாள் | - | திரு. வி. சிவபாலன் குடும்பத்தினர், கண்டாம்படி வளவு. |
| 13. | கண்டாமணி | - | திரு. க. மூ. வேலுப்பிள்ளை குடும்பத்தினர், கூளாவடி. |
| 14. | கண்டாமணிக் கோபுரம் | - | ஊர்மக்கள். |
| 15. | திருமஞ்சனக் கிணறு | - | ஊர்மக்கள். |
| 16. | தீர்த்தக் கிணறு வெளிவீதியில் | - | ஊர்மக்கள். |
| 17. | மடைப் பள்ளிக் கிணறு | - | திரு. க. மூ. வேலுப்பிள்ளை குடும்பத்தினர், கூளாவடி. |
| 18. | சுற்று மதில் | - | திரு. வ. கதிரித்தம்பி, தேற்றாவடிவளவு. |
| 19. | திருக்குளம் தெற்கு வீதி | - | ஊர்மக்கள். |

# அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் நிலங்கள் சொத்துக்கள்

எமது ஆலயத்தின் மரபு வழித் தர்மகர்த்தாவான திருவாளர் சு. ஞானசபேசன் அவர்கள் தமக்குரிய சகல நிர்வாகப் பொறுப்புகளையும் உரிமைகளையும் 02.09.1982ல் எமது ஆலய பரிபாலன சபையிடம் சாசன மூலம் கையளித்தார். அவ்வேளை ஆலயத்திற்குரிய கீழ் வரும் நிலங்களையும் அவற்றுக்குரிய உறுதிகளையும் கையளித்துள்ளார்.

1. தம்பாலையிறை நல்லிகப்பன் வயல் (கோயில்கள், கட்டடங்கள், கிணறுகள், தென்னைகள், மற்றும் அதற்குரிய பிறவும் அடங்கலாக) — நெற்பரப்பு 13
2. தம்பாலையிறை உட்குளவயல் - நெற்பரப்பு 5
3. தம்பாலையிறை உட்குள வயல் (நாகதம்பிரான் கோயிலும் அரசு, வேப்ப மரங்களும் அடங்கலாக) - நெற்பரப்பு 4
4. தம்பாலையிறை ஈச்சந்தரவை வயல் - நெற்பரப்பு 2
5. தம்பாலையிறை நல்லிகப்பன் வயல் - நெற்பரப்பு 1
6. தம்பாலையிறை நல்லிகப்பன் வயல் - நெற்பரப்பு 3
7. தம்பாலையிறை நல்லிகப்பன் வயல் வடக்குக் காணியிலுள்ள கிணற்றின் பங்கும் அடங்கலாக) - நெற்பரப்பு 2
8. தம்பாலையிறை கப்பம் புலம் தலைமடை - நிலப்பரப்பு 55 (இக்காணியினுடாக அச்சுவேலி சந்நிதி வீதி

ஊடறுத்துச் செல்கின்றது.வீதிக்குரிய நிலம்
புற நீங்கலாக மிகுதி அடங்கலும்)

9. தம்பாலையிறை வில்வளை வயல் - நெற்பரப்பு 3
(வடக்கு காணியிலுள்ள கிணற்றின்
தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு
உரித்தும் இவ் 6 பரப்பின் கிழக்காக
அரைவாசி கோவிலுக்குரியதென வழக்கில்
தீர்ப்பளிக்கப்பட்டது.)

10. தம்பாலையிறை கல்வயல் - நிலப்பரப்பு 30
(பனைகளும் வடலிகளும் அடங்கலாக)

11. தம்பாலையிறை கப்பன் வயலும் கப்பன் புலமும் - நிலப்பரப்பு 1 1/2
நிலப்பரப்பு 12 3/4 இல் நடுப்பெற 1 1/2 நிலப்பரப்பு
தீர்த்தக் கிணற்றுக்கென வெட்டப் பெற்ற கிணறு
முழுவதும் அடங்கலாக இக் காணியிலிருக்கும்
தீர்த்தக் கிணற்றுக்குப் புவனேஸ்வரி அம்மனை
கோவிலிலிருந்து கொண்டு செல்லவும்
கொண்டு வரவும் இதன் மிகுதிக் காணிக்கூடாகச்
செல்லும் பாதையும் இக் கோயிலுக்குரியது.)

12. தம்பாலையிறை கப்பம் புலம் தலைமடை நிலப்பரப்பு 50
(இக் காணியை ஊடறுத்துச் செல்லும் அச்சுவேலி
சந்நிதி வீதிக்குரிய நிலம் புற நீங்கலாக மிகுதி
அடங்கலும்.)

# நித்திய, நைமித்திய பூசைகளும் விழாக்களும் அவற்றின் உபயகாரர்களும்

| | |
|---|---|
| **தை** | |
| மாதப்பூசை | திரு. இ. குமாரதாசன் குடும்பம், மால்வளவு. |
| தைப்பொங்கல் | திரு. எஸ். தங்கராசா குடும்பம், நிலவுகலட்டி. |
| அபிராமிப்பட்டர் விழா | |
| (தை அமாவாசை) | திரு. க. செ. தங்கராசா குடும்பம், தேத்தாவடி. |
| தைப்பூச விழா | திரு. தி. சிவநேசம்பிள்ளை குடும்பம், புளியடிவீடு. |
| **மாசி** | |
| மாதப்பூசை | திரு. வே. சபாபதிப்பிள்ளை குடும்பம், தம்பக்கடவை. |
| மாசிமகம் | திரு. வ. செல்லையா குடும்பம், வரணன். |
| **பங்குனி** | |
| மாதப்பூசை | திருமதி. சி. சின்னத்தங்கம் குடும்பம், காளிகோவிலடி. |
| | திரு. வ. வெற்றிவேல் குடும்பம், கலட்டிவளவு. |
| பங்குனி உத்தரம் | திரு. மு. ஈஸ்வரதம்பையா குடும்பம், மால்வளவு. |
| **சித்திரை** | |
| மாதப்பூசை | திரு. சி. பாலசுப்பிரமணியம் குடும்பம், புதியபூமி. |
| **வருடாந்த மகோற்சவம்** | உபகாரர்கள் |
| புதுவருடம் | திரு. சி. முத்தையா குடும்பம், கேவுழ். |
| **வைகாசி** | |
| மாதப்பூசை | திருமதி. சி. இராமச்சந்திரன் குடும்பம், பரியாரிவளவு. |
| **கண்ணகை அம்பாள்** | |
| **பொங்கல்** | வளந்துகாரர்கள் |
| **ஆனி** | |
| மாதப்பூசை | திரு. இ. இந்திரேஸ்வரன் குடும்பம், தம்பாலை. |
| ஆனி உத்தரம் | திருமதி. ப. சிவநேசம் குடும்பம், சவரக்கலட்டி. |
| **ஆடி** | |
| மாதப்பூசை | திருமதி. தி. இராமகிருஷ்ணன் குடும்பம், கொத்தவளவு. |
| ஆடிப்பூரவிழா | திருமதி. தி. இராமகிருஷ்ணன் குடும்பம், கொத்தவளவு. |
| வரலட்சுமி விரதம் | விரத உபயகாரர்கள் |
| **ஆவணி** | |
| மாதப்பூசை | திரு. செ. சண்முகநாதன் குடும்பம், பரியாரியார் வளவு. |
| ஆவணிமூலம் | திரு. ஆ. சிவஞானம் குடும்பம், சந்தையடி. |
| ஆவணிச் சதுர்த்தி | திரு. த. கதிரமலை குடும்பம், செம்பிகலட்டி. |

| | |
|---|---|
| **புரட்டாதி** | |
| மாதப்பூசை | திரு. மா. சிவஞானசுந்தரம் குடும்பம், தோட்டவளவு. |
| கடைசிச் சனி விழா | திரு. மா. சிவஞானசுந்தரம் குடும்பம், தோட்டவளவு. |
| நவராத்திரி விழா | 1. திரு. வே. சங்கரப்பிள்ளை குடும்பம், புளியடிவளவு. |
| | 2. திரு. செ. ஜீவரத்தினம் குடும்பம், நிலவுகலட்டி. |
| | 3. திரு. ஆ. கிருஷ்ண வேலாயுதம் குடும்பம், |
| | பொடுவங்கலட்டி வளவு. |
| | 4. திரு. கா. தில்லையம்பலம் குடும்பம், மாரியந்தனை. |
| | 5. திரு. க. சரவணமுத்து குடும்பம், புளியடிவளவு. |
| | 6. திரு. மு. அமுர்தலிங்கம் குடும்பம், தம்பக்கடவை. |
| | 7. திரு. மாணிக்கர் கந்தசாமி குடும்பம், தம்பக்கடவை. |
| | 8. திரு. சி. சிவஞானம் குடும்பம், தேத்தாவடி. |
| | 9. திரு. பெ. கந்தசாமி குடும்பம், குளுப்பன் கலட்டி. |
| | 10. திரு. சி. ரதீஸ்வரன் குடும்பம், வித்தியாலயவீதி. |
| **ஐப்பசி** | |
| மாதப்பூசை | திரு. க. செல்லத்துரை குடும்பம், தோட்டவளவு. |
| கேதாரகௌரி விரதம் | விரதகாரர்கள். |
| கௌரிபூசை (இறுதி நாள்) | திரு. சி. நடராசா குடும்பம், செம்பிகலட்டி. |
| தீபாவளி | திருமதி. ச. புவனேஸவரி குடும்பம், தேத்தாவடிவளவு. |
| **கார்த்திகை** | |
| மாதப்பூசை | திரு. எஸ். தவராசசிங்கம் குடும்பம், கொத்தவளவு. |
| திருக்கார்த்திகை | திரு. கி. ஜெயகுமரபதி குடும்பம், தேற்றாவடி. |
| **மார்கழி** | |
| மாதப்பூசை | திரு. சு. நாராயணபிள்ளை குடும்பம், மாரியந்தனை. |
| திருவெம்பாவை | 1. திரு. சி. தம்புசாமி குடும்பம், சந்தையடி. |
| | 2. திரு. வே. நமசிவாயம் குடும்பம், தேத்தாவடி. |
| | 3. திரு. செ. சண்முகநாதன் குடும்பம், பரியாரியார்வளவு. |
| | 4. திரு. சி. சத்தியசீலன் குடும்பம், சந்தையடி. |
| | 5. திரு. வி. சிவபாலன் குடும்பம், கண்டாம்படி. |
| | 6. திரு. த. வேலாயுதம் குடும்பம், தோட்டவளவு. |
| | 7. திரு. சி. சின்னத்துரை குடும்பம், புதியபூமி. |
| | 8. திரு. சி. மகேந்திரம் குடும்பம், புதியபூமி. |
| | 9. திரு. மு. கனகராசா குடும்பம், தம்பாலை. |
| | 10. திரு. ஸ்ரீ குகன் குடும்பம், காளிகோவிலடி. |

## வருடாந்த மஹோற்சவ உபயகாரர்கள்

| |
|---|
| திரு.பொ. கணபதிப்பிள்ளை குடும்பம் - வளலாய். |
| திரு.சு. நாராயணபிள்ளை குடும்பம் - மாரியந்தனை. |
| திரு.க. ஆறுமுகசுவாமி குடும்பம் - தம்பக் கடவை. |
| திரு.த. கதிரமலை குடும்பம் - செம்பிகலட்டிவளவு. |
| திரு.வ. செல்லையா குடும்பம் - வரணன். |
| திரு.சி. முருகையா குடும்பம் - வட்டவளவு. |
| திரு.வ. கந்தசாமி குடும்பம் - குளுப்பன்வளவு. |
| திரு. செ. பாலசுப்பிரமணியம் குடும்பம் - கெருடாவில். |
| திரு.சி. கந்தசாமி குடும்பம் - மாப்பாணிவளவு. |
| திரு.செ. இரத்தினசபாபதி குடும்பம் - கூளாவடிவளவு. |

## ஸ்ரீ கண்ணகி அம்பாள் வருடாந்தப் பொங்கல் திருக்குளிர்த்தி விழா உபயகாரர்கள்.

1. அபிஷேகம், விழா - திரு. பொ. முருகையா குடும்பம், புதியபூமி.

## வளந்துகாரர்கள்

1. திரு. நா. மகேந்திரன் குடும்பம், வளலாய்.
2. திரு. நா. பொன்னம்பலம் குடும்பம், தேற்றாவடி.
3. திரு. க. பொன்னம்பலம் குடும்பம், வட்டவளவு.

உ

அம்பாள் துணை

# நன்றி நவிலல்

திருப்பணி வேலைகள், கும்பாபிஷேகம், மகோற்சவம், சங்காபிஷேகம், மண்டலாபிஷேகம் போன்றவை சிறப்புடன் நடைபெற அருள் சுரந்து, கருணை நல்கிவரும் அகிலாண்ட நாயகியாம் புவனேஸ்வரித்தாயின் பாத கமலங்களுக்கு ஆலய பரிபாலன சபை திரிகரண சுத்தியுடன் வணக்கம் செலுத்துகின்றது.

அம்பாளின் ஆலயம் பேரொளியுடன் உருவப் பெற்று விளங்குவதற்கு உறுதுணையாக நின்று உதவிகள் பல நல்கிய மெய்யடியார்கள் நாம் வழங்கும் நன்றியை எதிர் பார்ப்பவர்கள் அல்லர். தேவியின் திருவருளைப் பெற்று இகபர சுகங்களை ஒருங்கே அடைய விரும்பியே இத்தகைய கைங்கரியத்தில் ஈடுபட்டார்கள். இருந்தும் இச்சபை உபசாரத்துக்காகவேனும் நன்றி நவிலல் என்னும் இப்பணியை மேற்கொண்டு தமது மகிழ்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்த அவாவுகின்றது.

இடைக்காட்டிலும், அயற் கிராமங்களிலும் வதியும் சைவப் பெருமக்கள் திருப்பணி வேலைகளிலும் தேவிக்கு நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளிலும் பெரும் பங்கேற்று வருகின்றார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தி அவர்களுக்கு முதற்கண் எமது உளம் நிறைந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருப்பணி வேலைகளுக்கும் கும்பாபிஷேக விழாவுக்கும் பணமாகவும், பொருளாகவும் வாரி வழங்கிய உள்ளூரிலும், வெளிநாட்டிலும் வசிக்கும் அம்பாள் அடியார்களுக்கு எமது உளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

பரிவார மூர்த்திகளுக்கு ஆலயங்கள் எடுப்பதற்குத் தனித்தனிப் பொறுப்பேற்று நிதி உதவிய அன்பர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள். குறிப்பாக பின்வருவனவற்றை உதவியவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

| | | |
|---|---|---|
| மின்சார இயந்திரம் | - | திரு நாகமுத்து மகேசன், புதிய பூமி |
| ஒலி பெருக்கி | - | திரு. நாகமுத்து செல்வவேல், புதிய பூமி |
| அம்பளிபயர் | - | திரு. ஆ. இளமுருகன், கேவுள் |
| பிரதான மின்னிணைப்பு | - | திரு. சு. ஞானசபேசன், சோதி வைரவர் வீதி |

| | | |
|---|---|---|
| கோவில் உள்மின்னிணைப்பு | - | திரு. வ. பராசக்தி ராஜா, உடையவளவு |
| | - | திரு. ஆ. கந்தவேள், தம்பக்கடவை |
| | - | திரு. த. சந்திரன், இடைக்காடு |
| சுற்றுமண்டபம் | - | ஊர்மக்களும் ஓர் அன்பரும் |
| காராம் பசு வாகனம் | - | ஊர்மக்கள் |
| சோடிக் குதிரை | - | திரு. த. வைரமுத்து, தேற்றாவடி |
| ரிஷபவாகனம் | - | ஓர் அன்பர் |
| கேடகம் | - | திரு. எஸ். வடிவேலு, தம்பக்கடவை |
| வசந்த மண்டப திரைச்சீலை | - | திருமதி. கு. சுகந்தினி, கிணற்றம்பலம். |
| நவக்கிரக மண்டபம் | - | திரு. மா. சிவஞானசுந்தரம் குடும்பம், தோட்டவளவு |
| கும்ப மண்டப உள் கூரைத்தகடு | - | திரு. சி. திருநாவுக்கரசு, ஆரியங்கலட்டி |
| வெளி மண்டப சிற்பம் | - | திரு. க. இராசலிங்கம், வடக்குகலட்டி |
| | - | திரு. சி. நவரத்தினம், வளலாய் |
| | | திரு. எஸ். ராசக்கிளி, தம்பாலை |
| கோபுர வாசல் கதவு | - | திரு. வே. சக்திவேல், தோட்டவளவு |
| கும்ப மண்டப தரையோடு | - | திரு. ஆ. இளங்குமரன், கேவுள் |
| நந்திபீடத்தின் மேலான பாதுகாப்பு வலை | - | திரு. எஸ். பரமராசா, தம்பாலை |
| நந்திபீடத்தைச் சுற்றியுள்ள கம்பிக்குழாய் காப்பு | - | திரு. எஸ். நடராசா, தம்பாலை |

இவர்களோடு ஆலய வரைபடத்தைச் சிறப்பாக வரைந்து உதவிய திரு. மா. சிவஞானசுந்தரம் அவர்களுக்கும் இங்கு நன்றி கூறுதல் வேண்டும். மேலும் பல வழிகளிலும் எமக்கு வேண்டிய உதவிகளையும் அன்பளிப்புக்களையும் வழங்கிய பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கும் எம்மால் தவறுதலாக எவரது பங்களிப்புக்களேனும் குறிப்பிடப்படாது விடப்பட்டிருப்பின் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு யாவரும் அம்பிகை அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி


**நா. சுவாமிநாதன்,**
செயலாளர்,
பரிபாலன சபை.

M. Sivagnanasundaram
Registered Licensed Surveyor,
and court commissioner
*Registration No: 410512*

PLAN No: 657




# PLAN OF IDAIKKADU PUVANESWARY AMMAN KOVIL AND PREMISES




Reference

*BS : Boundary Stone*
*St : Stake*
*U : Undefined*
*W : Wall*
*P : Permenant Building*
*Ty : Temporary Building*
*My : Masonry*
*S : Same Claim on both sides*
*R : Ridge*
*F : Foundation*

*Scale of 1:1000*

**PLAN**

**of One ( 1 ) Lot of Land Called Nalliappanvayal**

**Situated at**

*Village :-* *Idaikkadu*
*Division :-* *Valikamam East.*

*District :-* *Jaffna*
*Province :-* *Northern.*

*Bounded as above and containing in Extent*

| Lot No | Sq. Metres | Lms. V.C / Kls. | Remarks |
|---|---|---|---|
| 1 | 5403.56 | 21 - 00.27 | --- |
| Total | 5403.56 | 21 - 00.27 | --- |

*Reference to Buildings inside Temple*

1 Pillaiyar
2 Santhanagobalar
3 Kannahai
4 Murugan
5 Sandesvari
6 Mulasthanam
7 Mulasthanamandapam
8 Navakkiragam
9 Vasanthamandapam
10 Pairavar
11 Alayamani
12 Office
13 Well
14 Rooms and Kitchen
15 Nagathambiran
16 Kovilkulam

*Total extent in words - Twentyone Lachchams V.C and Zero decimal Two Seven Kulies*

*Surveyed on : 1 - 04 - 2005*

*Registered Licensed Surveyor*

*Idaikkadu,*
*Achuvely. Date : 2 - 04 - 2005*

உ


ஓம் சக்தி

# இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரைபட விபரம்

1. ஸ்ரீ விநாயகப்பெருமான் ஆலயம்
2. ஸ்ரீ சந்தான கோபாலர் ஆலயம்
3. ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயம்
4. ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் ஆலயம்
5. ஸ்ரீ சண்டேஸ்வரி அம்பாள் ஆலயம்
6. அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் மூலஸ்தானம்
7. நிருத்த மண்டபம் (சந்தன மண்டபம்)
8. நவக்கிரக நாயகர்கள் ஆலயம்
9. வசந்த மண்டபம்
10. ஸ்ரீ பைரவ மூர்த்தி ஆலயம்
11. கண்டாமணிக் கோபுரம்
12. காரியாலயம்
13. மடைப்பள்ளிக் கிணறு
14. மடைப்பள்ளி அறை, ஒலி, ஒளி மண்டபம், வாகனசாலை, களஞ்சிய அறை, சிவாச்சாரியார்கள் தங்கும் அறை, மலசலகூடம், அன்னதான மண்டபம்
15. ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயமும் தலவிருட்சங்களும்
16. ஆலய தீர்த்தக் குளம்
17. வெளி மண்டபம்
18. வெளிவீதி
19. ஆலய தீர்த்தக் கிணறு

உ

அம்பாள் துணை



உ

அம்பாள் துணை



உ

அம்பாள் துணை









Printed by: **LUXMI PRINTER** - 195, Wolfendhal Street, Colombo-13. Tel: 2448545, 2458273, 2473533 Fax: 2330588 E-mail: luxmiprint@sltnet.lk